கரைச்சிப் பிரிவு

# கலை விழா மலர்

## 1973

கரைச்சிக் காரியாதிகாரிப் பிரிவு
கிளிநொச்சி

## நமது நாட்டின் இன்றைய நெருக்கடி நிலை

## நிரந்தரமானதா ?

இல்லவே இல்லை

இது தற்காலிகமானதே !

- பயிர்வளம் பெருக்குவோம்
- உணவுக்காகப் பிறநாடுகளை எதிர்பார்க்கும் மனோநிலையை மறப்போம்
- சோம்பலின்றி உழைப்போம்
- நாடு முன்னேறப் பாடுபடுவோம்

இவற்றின் மூலம் —

**நாடு முன்னேறும்; நாமும் நலமடைவோம்.**

கௌரவ கலாச்சார அமைச்சரின்

# ஆசிச் செய்தி

கரைச்சிக் காரியாதிகாரி பிரிவினுல் நடாத்தப் படுகின்ற இந்த கலைவிழா எமது தேசிய கலாச்சாரத் தின் ஓர் அங்கமாகத் திகழும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

அழிந்து கொண்டு போகின்ற எமது கலாச்சா ரத்தை பாதுகாப்பதற்கும் அவற்றை நல்ல நிலையில் வருங்கால சமுதாயத்திற்கு வழங்குவதற்கும் இத்த கைய கலை விழாக்களை ஒழுங்கு செய்தல் இன்றியமை யாததாகும்.

தேசிய கலாச்சாரத்தைப் பேணுகின்ற எல்லோ ருடைய நல்லாசிகளும், இவ்விழாவிற்கு உரித்தாகும். இவ்விழா எல்லா வகைகளிலும் மிகவும் சிறப்புற்றுத் திகழவேண்டுமென வாழ்த்துவதுடன், இந்த ஆசிச் செய்தியை அளிப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுத்த விழாக் குழுவினருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரி வித்துக் கொள்ளுகிறேன்.

எஸ். எஸ். குலதிலக
கலாச்சார அமைச்சர்

212, பவுத்தலோக மாவத்தை
கொழும்பு
28-8-73

# සංස්කෘතික ඇමතිතුමාගේ පණිවුඩය

කරච්චි කොට්ඨාශයේ ප්‍රාදේශීය ආදායම් නිලධාරී කාර්යාලය මගින් සංවිධානය කරනු ලබන කලා උලෙල අපේ දේශීය සංස්කෘතික අංගයන් ඇගැයීමේ සංස්කෘතික උලෙලක් වන බවට සැකයෙක් නැත.

අප අතරින් අභාවයට යමින් පවත්නා අපේ සංස්කෘතික අංගයන් ආරක්ෂා කර ගැනීම සඳහාත්, ඒවා වර්තමාන සමාජයට සුදුසු අන්දමින් ඉදිරිපත් කිරීම සඳහාත්, මෙවැනි සංස්කෘතික කලා උලෙලවල් පැවැත්වීම ඉතාමත්ම වැදගත්ය.

ඒ අනුව කරච්චි කොට්ඨාශයේ ප්‍රාදේශීය ආදායම් නිලධාරී කාර්යාලය මගින් මෙවැනි සංවිධානයන් ඇති කිරීම පිළිබඳව දේශීය සංස්කෘතිය අගයන සියළු දෙනාගේම ගෞරවය එම සංවිධානයට හිමි විය යුතුය.

සුභ පැතුම් – කලා උලෙල සර්වප්‍රකාරයෙන්ම සාර්ථක වේවායි ප්‍රාර්ථනා කරන අතර, මේ සඳහා පණිවුඩයක් එවීමට අවස්ථාව සලසාදීම පිළිබඳව සංවිධායක කමිටුවට මාගේ සතුතිය ද පිරිනමනු කැමැත්තෙමි.

ඇස්. ඇස්. කුලතිලක

අනු/28

සංස්කෘතික කටයුතු පිළිබඳ ඇමති

## மலர்க் குழுவினர்

| | | |
|---|---|---|
| திரு. நா. சவுந்தரநாயகம்<br>காரியாதிகாரி — கரைச்சி | — | காப்பாளர் |
| ஜனாப் எம். எம். மக்பூல்<br>மாவட்ட காணி அதிகாரி-கிளிநொச்சி | — | தலைவர் |
| செல்வி வி. துரைசாமி | — | செயலாளர் |
| திரு. அ. க. இராசேந்திரம் | — | நிர்வாக உறுப்பினர் |
| திரு. சி. கனகநாயகம் | — | ,, |
| பண்டிதர், மு. ஆறுமுகம் | — | ,, |
| திரு. சு. இந்திரராசா | — | ,, |

தபால் தந்தி தொலைபேசித் தொடர்பு அமைச்சர்
அவர்களின்

# ஆசியுரை

கரைச்சிப் பிரிவுக் கலாச்சார சபையினர் கலைவிழா நடாத்த இருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

பிரதேச ரீதியில் கலை, கலாச்சாரம் வளரவும், கலைஞர்களின் தரம் பெருகவும் இவ்வாறன கலைவிழாக்கள் ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் என நம்புகிறேன்.

எம் நாட்டின் நலனை முன்னிட்டு இந்நாட்டு மக்களிடையே ஐக்கியத்தை நிலைநாட்டவும், நாட்டின் அபிவிருத்தியை ஊக்குவிக்கவும் உதவும் வகையில் எடுக்கப்படும் கலைவிழாக்களுக்கு மக்களின் ஆதரவும் அரசாங்கத்தின் ஆதரவும் என்றும் கிட்டும். இந்நோக்கோடு கலை விழாக்கள் அமைதல் வேண்டும்.

கரைச்சிப் பிரிவு கலாச்சார சபையினரின் கலை விழா சிறப்புற நடைபெற எனது நல்வாழ்த்துக்கள்.

செ. குமாரசூரியர்
தபால், தொலைபேசித் தொடர்பு அமைச்சர்

### கிளிநொச்சித் தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர்

### வீ. ஆனந்தசங்கரி அவர்களின்

## ஆசியுரை

கரைச்சிப் பிரிவுக் கலாச்சார சபையினரால் நடாத்தப்படுகின்ற மாபெரும் கலைவிழாவையொட்டி எனது ஆசிச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வெய்துகிறேன்.

சில ஆண்டுகளுக்குமுன் வடபால் அமர்ந்திருந்த வானளாவிய வனம் வளம்பெற்று சொர்ண பூமியாகத் திகழும் இவ்வேளையில் உழைப்பால் உயர்ந்த உத்தமர்கள் தம் களைப்பு நீங்கி இயல், இசை, நாடகத் தமிழால் விழாவெடுத்து மலரும் சூடி மகிழ்கின்றனர். இதனால் மருவிவந்த கலாச்சாரம் உயர்வு பெறும் என்பதில் எத்துணையும் ஐயமில்லை.

கரைச்சி கண்ட கலாச்சார உயர்வு தமிழருக்கே முன்னணியாய்த் திகழும் இந்த வேளையில் கலைவிழா மலர் எமது பிரிவின் இயற்றமிழின் வளர்ச்சியினை எடுத்தியம்பும் என நம்புகிறேன்.

கரைச்சிக் காரியாதிகாரி பிரிவின் சார்பில் கலை விழா எடுத்து, சிறப்பு மலரும் வெளியிடும் விழாக் குழுவினருக்கும், கலையார்வம் மிக்க இயல், இசை, நாடக வல்லுநர்கட்கும், பாரம்பரிய கலை, கலாச்சார மரபு வழுவாத தமிழ்க் குலத்திற்கும் முயற்சி திருவினையாக உங்கள் பிரதிநிதி என்ற சார்பில் எனது இதய பூர்வமான நல்லாசிகள்.

சுபம்

வீ. ஆனந்தசங்கரி
தேசியப் பேரவை உறுப்பினர்
கிளிநொச்சி

கிளிநொச்சி
2—7—73

யாழ். அரசாங்க அதிபரின்

# ஆசிச் செய்தி

கரைச்சிப் பிரிவுக் கலாச்சார சபையினரால் ஒழுங்கு செய்யப்படும் இரண்டாவது மாபெருங் கலைவிழாவை யொட்டிப் பிரசுரிக்கப்படுகின்ற மலருக்கு எனது நல்லாசிகளை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். மேலும் சென்ற வருடம் நடாத்தப்பட்ட முதலாவது கலைவிழாவுக்குப் பின்னர் இப்பகுதியில் கலாச்சார நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளன என்பதை நான் மகிழ்ச்சியுடன் அவதானிக்கக் கூடியதாயிருக்கின்றது. விவசாயப் பிரதேசமாக விளங்கும் கரைச்சிக் காரியாதிகாரிப் பிரிவில் கலாச்சாரத் துறையில் முக்கிய கவனஞ் செலுத்தப்பட வேண்டியது அவசியமாகும். இத்தகைய விழாக்கள் அதனைப் பெருமளவில் பூர்த்தி செய்யக் கூடியதாயிருக்கும் என நான் நம்புகிறேன்.

இப்பகுதிக் கலைஞர்களுக்கு, இத்தகைய விழாக்கள், அவர்களது ஆற்றலை மேலும் அபிவிருத்தி செய்யவும், அவர்களது ஓய்வு நேரங்களைத் தங்களது முன்னேற்றத்திற்காகவும், பொழுது போக்குச் சாதனங்கள் போதிய அளவு இல்லாதிருக்கும் பொதுமக்கள் வசதிக்காகவும் பிரயோசனப்படுத்த உதவும் என நான் நிச்சயமாக நம்புகிறேன்.

"திறந்தவெளி அரங்கம்" இப்பகுதியின் நெடுங் காலத் தேவையொன்றாக இருந்து வருகின்றது. அதனை இப்பகுதிக் கலாச்சார சபை அரசாங்கத்தின் உதவியுடனோ அன்றி உதவியின்றியோ அமைத்தற்குப் பாடுபடவேண்டும்.

எம். ரி. டபிள்யூ. அமரசேகரா
அரசாங்க அதிபர்

செயலகம்
யாழ்ப்பாணம்
1973-7-19

# சிறிதே பொறுத்தருள்க.....

கரைச்சிப் பகுதிக் கலாச்சாரப் பேரவையினால் நடாத்தப்படவுள்ள கலைவிழாவின் பொருட்டு வெளியிடப்படும் இம்மலர் அப்பேரவை வெளியிடும் இரண்டாவது மலராக உங்கள் கையில் தவழ்கிறது.

சென்ற வருடம் சொல்லேர் உழவர்களின் தரம் வாய்ந்த கட்டுரைகள் பலவற்றைச் சுவைத்துணர்ந்த வாசகப் பெருமக்களாகிய உங்கள் கையில் மாறும் சூழ்நிலைக்கேற்ப வடிவமெடுத்துள்ள ஒரு மலரை இம்முறை சமர்ப்பிக்கின்றோம்.

இலக்கியமென்பது வெறும் பொழுது போக்குச் சாதனம் மட்டுமன்று. அது நாட்டின் தேவைக்கேற்ப ஆக்கபூர்வமான அபிவிருத்திகளை மேற்கொள்ளக்கூடிய சக்திகளுக்குத் தூண்டுதலளிக்கும் சாதனமாய் விளங்க வேண்டுமென்று கூறப்படுகிறது. இதற்கேற்ப வெளியிடப்படும் இம்மலரும் வேளாண்மைக்கு முக்கியமளித்துள்ளது, என்பதை மலரைச் சுவைக்கும் போது நீங்கள் உணர்வீர்கள். எமது நாட்டின் பிரதமர் அவர்கள் நாடு இன்று எதிர்நோக்கும் நெருக்கடி நிலைமையைச் சுட்டிக்காட்டி இந்த ஆண்டை உற்பத்தியாண்டெனப் பிரகடனப்படுத்தியுள்ளார். இதனை அனுசரித்து இம்மலரை வேளாண்மை அபிவிருத்தி பற்றிக் கூறும் கட்டுரை ஒன்றுடன் ஆரம்பிக்கின்றோம். அதே நேரத்தில் பழையனவற்றை மறந்து விடுவதற்கு நாம் தயாரில்லை என்பதை இப்பகுதியின் காரியாதிகாரியாகக் கடமையாற்றிய முயற்சியாளர்களுள் ஒருவரது கட்டுரை உங்களுக்கு எடுத்துக் கூறும் என நம்புகிறோம். மறைக்கப்பட்ட சில உண்மைகள் வெளிவருவதற்குத் துண்டுகோலாய் அமைய வேண்டுமென்ற நோக்கில் பிரசுரிக்கப்படும் வன்னி நாட்டின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட நாடகமொன்றை நீங்கள் படித்துச் சுவைக்கலாம்.

எமது நாட்டில் அண்மைக் காலத்தில் உருவாக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டம் பிரதேச அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தியுள்ளதென்பதை நாடறியும். மறுசீரமைக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கரைச்சிப் பகுதியின் பிரதேச வளர்ச்சிக்கு எவ்வாறு உதவ முடியும் என்பதை இன்னுமொரு கட்டுரை விளக்குகின்றது.

தவிர கவிதைகள், இலக்கியச் சிற்றாய்வுகள் ஆகியனவற்றையும் நீங்கள் படித்துச் சுவைக்கலாம்.

காலவெள்ளத்தின் ஓட்டத்தோடு அனுசரித்துப் போகாத எந்த முயற்சியும் இயற்கையான மரணத்தை அடைந்துவிடும் என்ற அச்சத்தினால் மலரின் அமைப்பில் செய்யப்பட்டுள்ள இந்த மாற்றம் மிகப் பொருத்தமானதாக இருக்கும் என்று நாம் நம்புகிறோம்.

வாசகர்களாகிய உங்கள் மத்தியில் எம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திக்கவும் அவற்றுக்குத் தீர்வு காணவும் ஒரு தூண்டுதலை இம்மலர் அளிக்குமாயின் எம்முயற்சி நிறைவு பெற்றுவிட்டதென்று நாம் நாடி இறும்பூதெய்தக்கூடியதாக இருக்கும்.

''குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொள்வர்'' என்ற நம்பிக்கையோடு பொறுத்திருந்து உங்களிடமிருந்து விடைபெறுகின்றோம்.

— கலை விழா மலர்க் குழு —

சொல்லில் இனிப்பது செந்தமிழே
நாவில் சுவை சொட்டிக் கிடப்பது எம் உணவே
எல்லா நேரமும் இங்குண்டு. சைவ உணவை
என்றும் உண்டு மகிழ்ந்திடுவீர்.

## சித்தி பேக்கறி அன் சைவ ஹோட்டல்

பாண் முதல் கேக்கு வகைகள்
குளிர்பானமும், பிஸ்கட் வகைகளும்
வேண்டியமட்டும் பெற்றிடலாம்.
என்றும் விரும்பி வந்து பெற்றிடுவீர்.

*The Best in Liquor and Spirits*

*is obtained from*

## Kilinochchi Foreign Liquor Shop

**Kandy Road — Kilinochchi**

# 1972-ம் ஆண்டு கலை விழா



கலை விழாவில் பாடசாலைப் போட்டியில் வெற்றியீட்டிய
மாணவிக்கு அரசாங்க அதிபரின் பாரியார்
திருமதி விமல் அமரசேகரா பரிசளிக்கிறார்.

# *Message*

I am very happy to send these few words to be published in the souvenir that is being issued to mark the staging of the second Grand Art Festival sponsored by the Cultural unit of the Karachchi D. R. O.'s Division. I am also happy to note that cultural activities in this area have considerably increased since the First Grand Festival orgnised last year. The D. R. O.'s Division Karachchi, a predominalty agricultural area, is in special need of attention in the field of cultural activities which I hope will be fullfilled in ample measure by Festivals of this nature.

I am sure this Festival will afford adequate opportunities for talented people in the area, to further develop their talents and to utilize their leisure to the best advantage of themselves and of the people who do not have adequate facilities for entertainment.

In conclusion may I say that establishment of an open air theatre in Kilinochchi is a long felt need and I think the Cultural Unit should endeavour to provide one with or without Government assistance.

*Wimal Amarasekera*
Government Agent, Jaffna District

Secretaaiat
Jaffna
19–7–73

கரைச்சிப் பிரிவுக் காரியாதிகாரி அவர்களின்

# ஆசிச் செய்தி

கரைச்சிப் பிரிவின் கலாச்சாரப் பேரவையின் இரண்டாம் வருடக் கலைவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் இம்மலருக்கு ஆசி கூறுமுன் ஒரு சில வார்த்தைகள்.

உள்ளூர்க் கலைஞர்களை ஊக்குவிக்கவும் அவர்களிடையே மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிக்கொணரவும் கலைவிழாக்கள் பெரிதும் உதவுகின்றன. நகரங்களில் பல தனியார் நிறுவனங்களும், சங்கங்களும் இத்தகைய விழாக்களை முன்னின்று நடாத்துகின்றன. ஆனால் சில பிரதேசங்களில் இத்தகைய நிறுவனங்கள் இல்லாத காரணத்தாலும் அரசாங்கம் தலையிட்டு அவ்விழாக்களை கிராமப்புறங்களில் நடாத்துவதை நாம் காணக் கூடியதாயிருக்கிறது.

கரைச்சிப் பிரிவுக் கலாச்சாரப் பேரவை இரண்டாவது தடவையாக இக்கலைவிழாவை ஒழுங்கு செய்திருக்கின்றது, உள்ளூர்க் கலைஞர்களுக்கு இத்தகைய விழாக்கள் ஓர் வரப்பிரசாதமாகும். ஏனெனில் அவர்களது திறமைகளைப் பலரும் உணரக்கூடிய ஓர் சந்தர்ப்பத்தை இக்கலைவிழா ஏற்படுத்திக் கொடுக்கின்றது. அதுமட்டுமன்றி ஒய்வு ஒழிச்சலின்றிப் பாடுபடும் பாட்டாளிகளுக்கு இது ஒரு சிறந்த பொழுது போக்குச் சாதனமாகவும் விளங்குகின்றது.

பண்டைக் காலங்களில் கிராமங்கள் தோறும் விடிய விடியக் கூத்துக்களும் இத்தகைய களியாட்டங்களும் நிகழ்வது வழக்கம். ஆனால் அது இன்று சிறிது சிறிதாக அருகி வருகின்றது. இப்பண்டைய கலைகள் அழியாது பாதுகாக்கப்படுவதற்கு இக்கலைவிழா பெரிதும் உதவுகின்றது எனலாம்.

கரைச்சிப் பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து மக்கள் வந்து குடியேறியிருக்கின்றனர். இந்த ''வந்தேறு குடிகள்'' ஒவ்வொன்றும் தமது பிரதேசத்துக்கே உரித்தான பாரம்பரியக் கலைகளைத் தம்மகத்தே கொண்டுள்ள போதிலும், அவை ஒன்றாகச் சங்கமமாகிப் பல்வேறு மக்களிடையே ஒரு இணைப்பையும், புரிந்து கொள்ளும் தன்மையையும் ஊக்குவிப்பதற்கு ஒரு பொது அரங்கொன்று இதுவரை தோன்றவில்லையென்றே கூறலாம். அத்தகைய பொது அரங்கை இக்கலைவிழா ஏற்படுத்துமென்றும் மற்றவரது கலையையும் கலாச்சாரத்தையும் புரிந்து ஏற்றுக்கொள்வதற்கு இக்கலைவிழா பூரணமாக உதவுமென்றும் நாம் நிச்சயமாக நம்பலாம்.

வெற்றியுடன் கலைவிழா நடக்க என் நல்லாசிகள்.

நா. சவுந்தரநாயகம்
கலாச்சார சபைத் தலைவரும் காரியாதிகாரியும்
கரைச்சிப் பிரிவு

முன்னைநாள் கரைச்சிப் பிரிவுக் காரியாதிகாரி

அவர்களின்

# ஆசிச் செய்தி

கரைச்சிப் பிரிவு கலாச்சாரப் பேரவை எடுக்கின்ற கலைவிழா மலருக்கு இச்சிறு வாழ்த்துச் செய்தியை நல்கு வதில் பெருமையும் மகிழ்ச்சியுமடைகின்றேன்.

விறுவிறுப்பாக முன்னேறி வளர்ந்து வருகின்ற இப் பிரிவில் மேலும் வளர்ச்சிக்கு ஏதுவாக வாய்ப்புக்களும் வளங்களும் மலிந்து கிடக்கின்றன. இவ்வளங்களையும் வாய்ப் புக்களையும் பயன்படுத்தி, செல்வம் மலிந்தால், பொரு ளாதார நிலையில் தங்கியிருக்கின்ற கலைகள் யாவும் ஓங்கி வளரும் என்பதில் ஐயமில்லை.

ஏற்கனவே இப்பிரிவில் பல திறமைகள் அங்கொன் றும் இங்கொன்றுமாக இருப்பதை யாவருமறிவார்கள். இத்திறமைகளையெல்லாம் ஒருவழிப்படுத்தி ஒரு திட்டத் திற்கேற்ப வளர்ச்சியடையச் செய்தால் கலைத்தரம் வளரும்.

திறந்த வெளியரங்கு ஒன்று கிளிநொச்சி முற்ற வெளியில் அமைப்பது இப்பகுதியில் வாழுகின்ற பல பெரியோர்களுடைய வேணவா. அரசாங்க உதவியோடும் இங்கு வாழுகின்ற பெருமக்களின் உதவியோடும் இவ் வேணவா விரைவில் நிறைவேறும் என்பது திண்ணம். கலைவிழா சிறந்தோங்குவதற்கு எனது நல்வாழ்த்துக்கள்.

இ. யோகநாதன்
காரியாதிகாரி

யாழ்ப்பாணம்
28-8-73

கரைச்சிக் கிராமாட்சி மன்ற அக்கிராசனர்
அவர்களின்

# வாழ்த்துரை

கரைச்சிப்பிரிவின் கலாச்சாரச் சபையினரால் எடுக்கப்படுகின்ற இவ்வருட கலை, கலாச்சார விழாவையொட்டிய இம்மலருக்கு இவ்வாழ்த்துச் செய்தியினை அனுப்புவதில் நான் பெருமைப்படுகிறேன்.

தமிழ் இனம் தொன்று தொட்டு கலை கலாச்சாரத்திற்கு ஓர் முக்கிய இடத்தை ஒதுக்கி செயற்படுத்தி வந்துள்ளது என்பது சரித்திரச் சான்றாகும். தமிழ் இனம் தனது தனித்துவத்தைப் பாதுகாக்கவேண்டுமாயின் மொழி, கலை, கலாச்சாரம் சிதைவுறாமல், பங்கப்படாமல் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். இக்கைங்கரியத்தை செயல்படுத்த கரைச்சிக் கலாச்சாரச் சபை முன்வந்துள்ளமைக்கு தமிழ் இனமே நன்றி சொல்லவேண்டும்.

கரைச்சிப் பிரிவில் பரந்த, விரிந்த, சிறந்த முறையில் மக்களைக் கவர்ந்த விதத்தில் வருடந்தோறும் நடைபெறும் இம்மாபெரும் கலாச்சார விழாவில் மூலைமுடுக்குகளில் ஒழிந்து வெளிக்கு வராமல் இருக்கின்ற கலைகளையும் கலைஞர்களையும், வெளிக்கொணர்ந்து நாடுநலம்பெற ஊக்கமும் ஆக்கமும் கொடுத்துக் கௌரவிக்கப்பட வேண்டும்.

அன்றியும் அரசோச்சிய தமிழ் இனம் இன்றுள்ள வாழா நிலையை எண்ணி, நற்செயலாற்ற, தமிழரின் சரித்திர, கலை, கலாச்சாரங்களை உண்மை நெறிப்படுத்தி, நமது வருங்கால இளைஞர் சமூகத்தை சமூகபொருளாதார ரீதியில் புத்தூக்கம் கொண்டு வீறுநடைபோடவைக்கத் தூண்டுகோலாக இக்கலை கலாச்சார விழா அமைய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

வாழிய செந்தமிழ் !

வளர்க தமிழ் இனம் !! வெல்க தங்கள் நற்பணி !!!

கா. செல்லையா
அக்கிராசனர்
கரைச்சிக் கிராமாட்சி மன்றம்

கிராமாட்சி மன்றப் பணிமனை
பரந்தன்
22-8-73

கரைச்சி பட்டின சபைத் தலைவர் அவர்களின்

# ஆசியுரை

செம்மையும் தண்மையும் நிறைந்த மருதநிலம் சூழ்ந்திருக்கும் கரைச்சிப் பகுதியின் கலைவிழா, தமிழ் வளர, தமிழ்க் கலை வளர. தமிழ்க் கலாச்சாரம் வளர உறுதுணையாக விளங்கும் என்ற பெரு நம்பிக்கையில் எனது நல்லாசி களை வழங்க விரும்புகிறேன்.

மருதநிலம் ஆடல் பாடல்களுக்கும் கலைவிருத்திக்கும் ஓயாப்பணி புரிந்திருக்கிறதென்பதை சான்றோர் இலக்கியம் படைத்த சங்க காலம் நமக்கு எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கிறது. கலை, கலாச்சாரம் வளர மருதநில வாழ்க்கை பெரிதும் உதவியிருக்கின்றதென அறியக் கூடியதாக இருக்கின்றது.

சமுதாயம் வளர வளர, அதன் தேவைகளும் பல்கிப் பெருகி வளர்ந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஒரு காலத்தில் காடாய், நுளம்புகளின் இருப்பிடமாய், இருள் மண்டிக் கிடந்த கரைச்சிப் பகுதி இன்று புதுமெருகு பெற்று நல்ல ஒரு எதிர்காலத்தை காணத்துடிக்கும் பொற் களஞ்சியமாய்; உழவர் பெருமக்களது தாயகமாய் மிளிர்ந்து வருகிறது. அத்தகைய ஒரு பிரதேசத்தின் ஆசாபாசங்களையும், உணர்ச்சித் துடிப்பு களையும் தவறான பாதையில் செல்லாது தடுக்கும் ஆற்றல் கலை ஒன்றிற்கே உண்டெனத் துணிந்து கூறலாம். காலந்தோறும் மேற்கொள்ளப்பட்டுவரும் வேளாண்மை அபிவிருத்தித் திட்டங்களின் பயனாய் ஊர்வாசிகளிடையே பணப்புழக்கம் அதிகரித்துள்ள இந்த வேளையில் ஓய்வு நேரத்தைப் பய னுள்ளதாக, ஆக்கம் நிறைந்ததாகச் செலவிட வழியமைத்துக் கொடுத்தல் பிரதேசத்தின் நலன்கருதி சமுதாயத் தலைவர்கள், நலன் விரும்பியவர்களின் இன்றியமையாத கடமையாகும். பொழுது போக்கு வசதிகள் அருகிக் காணப் படும் கரைச்சிப் பகுதியில் அம்முயற்சிகளுக்கு வித்தாய் இத்தகைய ஒரு கலை விழாவை ஒழுங்கு செய்தமை அமைகின்றது.

இக்கலைவிழா இலைமறை காயாக மறைந்திருக்கும் உள்ளூர்க் கலைஞர் களுக்கு ஊக்கம் தொடுப்பதாய், அதை அவாவி நிற்கும் சாதாரண பொது மகனுக்கு நல்விருந்தாய் அமையும் என்று நான் நம்புகிறேன்.

கரைச்சிப் பிரிவுக் கலாச்சார சபையின் இம்முயற்சி வெற்றி பெற்றிட வும் மேன்மேலும் ஓங்கிடவும் என் இதயம் கனிந்த நல்லாசிகள் உரித்தாகுக.

இரண்டாவது கலைவிழாவை பெருவெற்றியுடன் நடாத்த விழையும் இச்சபையின் முயற்சியின் கொடுமுடியாய் கலைவிழா மலர் அமைகிறது. பயன்தரும் கட்டுரைகள் இலக்கிய ஆர்வம் படைத்தோரிடையே பெரும் மதிப்பைப் பெறுமென்றும் பூரணமாக நம்புகிறேன்.

வாழ்க தமிழ்! வளர்க எமது கலாச்சாரம்!

ச. சு. முருகேசு
பட்டின சபைத் தலைவர்
கிளிநொச்சி

உங்களுக்குத் தேவையான

* சகல விதமான பட்டு-நூல் ஜவுளித் தினிசுகள்
* சேட்
* சூட்டிங்
* பாத அணிகள்

மற்றும் பலவும் பெற்றுக்கொள்ள

# லக்கி ஸ்ரோர்ஸ்

கண்டி வீதி — கிளிநொச்சி

கிளிநொச்சியில் நியாயமான விலைக்கு

பலசரக்கு வகைகள், சாய்ப்புச் சாமான்கள்
எவர்சில்வர், அலுமினியப் பாத்திரங்கள்
பித்தளைப் பொருட்கள், பாடசாலை
உபகரணங்கள், சைக்கிள் உதிரிப்பாகங்கள்

கிடைக்குமிடம்

# K. T. C.

உரிமையாளர் : வ. தில்லையம்பலம்

கண்டி வீதி, கிளிநொச்சி

# ‘ உழவன் படைத்தான் ’

— கவிஞர் முத்துசிவன் —

கனகாம்பிகை

இவ்வுலகைப் படைத்திட்டோன் யாவன் என்னின்
எந்தை இந்த மண்ணவனின் சொத்தேயாகும்
எவ்வுயிர்க்கும் ஈந்திடுவான் இனியன் என்றும்
எந்தோழன் அவனேநம் உழவனுவான்
வள்ளல்களை வரலாற்றைப் படைத்தான் எங்கும்
வாழுகின்ற நெறிநாட்டக் குருதி ஈந்தான்
பள்ளத்தில் பாழ்நிலத்தில் வெள்ளந் தேக்கிப்
பசும் புரட்சி படைத்தவனே பாரின்தேவன்.

அவன் படைத்த அமுதுண்டே
அகிலம் வாழும்
அறம் வாழும் தமிழ் வாழும்
ஆற்றல் வாழும்
திறம் படைத்த பொதுமை நெறி
புரட்சி பூக்கும்
திக்கெட்டும் அவன் படைத்த
பாடல் கேட்கும்.

மண்ணுண்டு மண்ணுக்கு வளனுமுண்டு
மாபெரிய ஆறுண்டு மலையுமுண்டு
எண்ணிப்பார் உழவனிவன் வியர்வையின்றேல்
எழில்கொஞ்சும் பெருங்கழனி சோலையெங்கே
வண்ணமிகும் மாடங்கள் மடங்கள் கோவில்
மற்றவரின் சுகவாழ்வு அனைத்துமெங்கே
கண்ணவனே உலகத்தின் கருவுமாவான்
கலைப்பிரமன் மாசத்தி உழவன் தோழன்.

மொத்தமாகவும் சில்லறையாகவும்
மிகவும் மலிவாகப் பெற்றுக்கொள்ளுமிடம்

# கணபதி ஸ்ரோர்ஸ்

கிளிநொச்சி

ஒருமுறை விஜயம் செய்துபாருங்கள்

உங்கள் மனதைக் கவரும் சகலவிதமான
யானை மார்க் குளிர்பானங்களும் மற்றும் இனிப்பு, டொபி
எல்லா விதமான பிஸ்கட் வகைகளும்

உங்கள் நாளாந்த வீட்டுத் தேவைக்குரிய
டோச், பற்றறி, வாளி வகைகளும், அத்துடன் இன்றைய
விவசாயத்துக்குத் தேவையான சகல விதமான பசளைகளும்
இங்கு மிகவும் குறைந்த விலையிலும் கூடிய சீக்கிரத்திலும்
பெற்றுக்கொள்ளலாம்.

உங்களுக்குத் தேவையான

- ★ உணவுப் பொருட்கள்
- ★ சாய்ப்புச் சாமான்கள்
- ★ சகல விதமான பட்டு நூல் ஜவுளித் தினிசுகள்
- ★ மின்சார உபகரணங்கள்

மற்றும் பலவும் மலிவாகப் பெற்றுக்கொள்ள
எம்மிடம் ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

# யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்

181, 183, கண்டி வீதி — கிளிநொச்சி

கரைச்சிக் காரியாதிகாரி பிரிவின்

கலைவிழா

சிறப்புடன் நிறைவுபெற

**சாந்தீஸ் ஐஸ் கிறீம் ஸ்தாபனத்தாரின்**

**நல்வாழ்த்துக்கள்**

| | |
|---|---|
| ✶ ஐஸ் கட்டிகள் | ✶ குளிர்பானங்கள் |
| ✶ ஐஸ் கிறீம் | ✶ ஐஸ் பழம் |
| ✶ ஐஸ் சர்பத் | ✶ ஐஸ் சொக் |

உற்பத்தியாளர்களும் விற்பனையாளர்களும்

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பெற்ற எமது உற்பத்திப் பொருட்கள் தரச்சிறப்புடன் நிதான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

உரிமையாளர்: புவிநாதன் — புஷ்பராணி

*கிளை :*

| | |
|---|---|
| கரடிப்போக்குச் சந்தி | 1-ம் குறுக்குத் தெரு |
| கிளிநொச்சி | வவுனியா |

# SHANTHIES ICE CREAM CO.

MANUFACTURERS AND DEALERS:

| | |
|---|---|
| ○ ICE BLOCK | ○ ICE PALAM |
| ○ ICE CREAM | ○ ICE CHOCKS |

*Prop :* PUVINATHAN - PUSPHARANI

*Branches:*

| | |
|---|---|
| Karadipokku Junction | First Cross Street |
| KILINOCHCHI | VAVUNIYA |

Visit

# JEYANANDA BAKERY & HOTEL

**KANDY ROAD — KILINOCHCHI**

CAKES, BREADS, BISCUITS
NOON — DAY MEALS ETC.

**Orders will be executed at short notice**

## ஜெயானந்தா பேக்கரி அன் ஹோட்டல்

**கண்டி வீதி — கிளிநொச்சி**

## விக்னேஸ்வரா நகை மாளிகை

உரிமை : செ. நடராசா

**பிரதான வீதி — கிளிநொச்சி**



ஓடர் நகைகள்
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.





YOUR ORDERS
PROMPTLY EXECUTED



# VIGNESWARA JEWELLERY HOUSE

**MAIN STREET KILINOCHCHI**

கரைச்சிப் பிரிவு

கலாச்சார சபை அளிக்கும்

# மாபெரும் கலைவிழா

## இருநாள் அழைப்பிதழும் நிகழ்ச்சி நிரலும்

## முதல் நாள்: 17-9-73 திங்கட்கிழமை

காலை நிகழ்ச்சிகள் :

இடம்: ஈஸ்வரன் படமாளிகை, கிளிநொச்சி
காலம்: காலை 8-00 மணி முதல் பி. ப. 1-00 மணி வரை

மாலை நிகழ்ச்சிகள் :

இடம்: உறெட்றிக்கோ மைதானம், கிளிநொச்சி
காலம்: மாலை 6-00 மணி முதல்
மறுநாள் அதிகாலை 2-00 மணி வரை

## இரண்டாம் நாள்: 18-9-73 செவ்வாய்க்கிழமை

மாலை நிகழ்ச்சிகள் :

இடம்: உறெட்றிக்கோ மைதானம், கிளிநொச்சி
காலம்: மாலை 6-00 மணி முதல்
மறுநாள் அதிகாலை 5-00 மணி வரை

அனைவரையும் இரு நாள் விழாக்களிலும் கலந்து
சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

இ. போ. சபையினர் இரு தினங்களும் முழு நாள் மேலதிக போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்துள்ளனர்.

கிளிநொச்சி
10-9-73

கரைச்சிப் பிரிவுக் கலைவிழாக் குழுவினர்

# 17-9-73 முதலாம் நாள்

## காலை நிகழ்ச்சிகள்

(கவியரங்கு, கருத்தரங்கு, நாட்டுக்கூத்து, விமர்சனம்,
மலர் வெளியீடு, சிறப்புச் சொற்பொழிவு)

தலைவர் : திரு. எம். எம். மக்பூல், இ. நி. சே.
(மாவட்டக் காணி அதிகாரி, கிளிநொச்சி)

பிரதம அதிதி : திரு. ஏ. ஏ. ஜோசெப், இ. நி. சே.
(யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்)

காலை 8—00 மணி மங்கள தீபம் ஏற்றல்
இறை வணக்கம்
தேசிய கீதம்
வரவேற்புரை — செல்வி வி. துரைசாமி
(கலாச்சார உத்தியோகத்தர், கரைச்சி)
தலைமையுரை — தலைவர்
ஆசியுரை — திரு. ச. சு. முருகேசு
(தலைவர், பட்டின சபை, கிளிநொச்சி)
சிறப்புரை — பிரதம அதிதி

காலை 9—30 மணி கவியரங்கு — விடயம் "அறுசுவை"
தலைவர் : திரு. செ. மௌனகுரு
"உறைப்பு" பண்டிதர் மூ. ஆறுமுகம்
"கைப்பு" சில்லையூர் செல்வராஜன்
"புளிப்பு" கவிஞர் கலியுகன்
"கயர்ப்பு" காரை சுந்தரம்பிள்ளை
"உவர்ப்பு" கவிஞர் ந. சிவறாதன்
"இனிப்பு" கவிஞர் து. பேராதரசிங்கம்

10—30 மணி சிறப்புச் சொற்பொழிவு—விடயம் — "மக்கள் இலக்கியம்"
கலாநிதி அ. சண்முகதாஸ்
(விரிவுரையாளர் பேராதனைப் பல்கலைக் கழகம்)

11—00 மணி கருத்தரங்கு — விடயம் :
"இளங்கோவின் பாத்திரப் படைப்பில் கோவலன் வாழ்வில் இடையே வந்து புகுந்த மாதவி, வாழ்க்கைத் துணைவி கண்ணகியிலும் பார்க்கச் சகல விதத்திலும் உயர்ந்து நிற்கிறாள்"

தலைவர் : கலாநிதி அ. சண்முகதாஸ்

| வாதிகள் : | பிரதிவாதிகள் : |
|---|---|
| பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்கள் | வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டதாரி மாணவர்கள் |

பி. ப. 12-30 மணி மலர் வெளியீடு — திரு. இ. முருகேசபிள்ளை இ. நி. சே.
(உதவி அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

முதற் பிரதி வாங்குபவர் : திரு. வை. விருசித்தம்பி
(கிளிநொச்சி, வைத்திலிங்கம் அன் சன்ஸ் உரிமையாளர்)

பி. ப. 12-45 மணி நாட்டுக் கூத்து விமர்சனம்
வடமோடி தென்மோடி முறைகள்
அளிப்பவர் : கலாநிதி சு. வித்தியானந்தன்
(தமிழ்த்துறைப் பேராசிரியர், பேராதனைப் பல்கலைக் கழகம்)

பி. ப. 1-45 மணி நன்றியுரை : திரு. பொன். நித்தியானந்தன், இ. சே. வட்டக்கச்சி

~~~~~~~~~~

## 17-9-73 முதலாம் நாள்

### மாலை நிகழ்ச்சிகள்

தலைவர் : திரு. க. பரமேஸ்வரன், இ. நி. சே.
(மாவட்டக் காணி அதிகாரி, கிளிநொச்சி)

பிரதம அதிதி : திரு. கலையரசு க. சொர்ணலிங்கம்
(மானிப்பாய்)

மாலை 6-00 மணி மங்கள இசை
இறை வணக்கம்
கொடியேற்றல்
மங்கள தீபம் ஏற்றல்
வரவேற்புரை : திரு. ஆ. மார்க்கண்டு (கி. சே. தட்டுவான்கொட்டி)
தலைமையுரை : தலைவர்
ஆசியுரை — திரு. இ. யோகநாதன் இ. நி. சே.
(முன்னாள் கரைச்சிப்பிரிவுக் காரியாதிகாரி)
சிறப்புரை — பிரதம அதிதி

7-15 மணி இன்னிசைக் கச்சேரி
அன்பளிப்பு : கிளிநொச்சிக் காணிக் கந்தோர்

8-15 மணி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள்

9-00 மணி நாதஸ்வர இன்னிசை — பஞ்சாபிகேசன் குழுவினர்
அன்பளிப்பு : திரு ஏ. எஸ். முருகேசு,
பராசக்தி தியேட்டர் உரிமையாளர், கிளிநொச்சி

11-15 மணி நாட்டுக் கூத்து : கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களின்
" இராவணேசன் " (வடமோடி முறை)
அளிப்பவர்கள் — பல்கலைக் கழகப் பழைய மாணவ மாணவிகள்

1-00 மணி நாடகம் — கிளிநொச்சி கலைவளர்ச்சி மன்றம் அளிக்கும்
' துணைமரம் "
நன்றியுரை : திரு. நா. சோதிநாதன், ஆசிரியர்
(கிளிநொச்சி மகா வித்தியாலயம்)

சிகரம் அன்பளிப்பு : இ. போ. ச. கிளிநொச்சி (இருதினங்களும்)
~~~~~~~~~~

# 18-9-73 இரண்டாம் நாள்

## மாலை நிகழ்ச்சிகள் மட்டும்

தலைவர் : திரு. நா. சவுந்தரநாயகம் இ. நி. சே.
(கலாச்சார சபைத் தலைவரும், காரியாதிகாரியும், கிளிநொச்சி

பிரதம அதிதி : திரு. விமல் அமரசேகரா இ. நி. சே.
(யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்)

மாலை 6-00 மணி மங்கள இசை
இறை வணக்கம்
தேசியக் கொடி ஏற்றல் — தேசிய கீதம்
மங்கள தீபம் ஏற்றல்
வரவேற்புரை — திரு. மு. க. சிவரெத்தினம்
(கிராம அபிவிருத்தி அதிகாரி, கரைச்சி)
தலைமையுரை — தலைவர்
ஆசியுரை — திரு. கா. செல்லையா
(கிராம சபைத் தலைவர், கரைச்சி)
சிறப்புரை — பிரதம அதிதி

8-00 மணி பரத நாட்டியம் — செல்வி ஸ்ரீதேவி மகாதேவன்
(பூரண பக்கவாத்தியங்களுடன்)
அன்பளிப்பு : திருவையாறு திட்டத்தினர்

9-30 மணி நாதஸ்வரம் : நாதஸ்வரகான கலாநிதி, அளவையூர்
என். கே. பத்மநாதன் கோஷ்டியினர்
அன்பளிப்பு : எஸ். வீ. முருகேசு, முருகன் றைஸ் மில்,
கரடிப்போக்கு, கிளிநொச்சி

10-30 மணி வேணுகானம் — அ. நமசிவாயம், சங்கீதபூஷணம், ஆசிரியர்,
புனித திரேசா மகா வித்தியாலயம் (பக்கவாத்தியங்களுடன்)

12-00 மணி கலகெடி நடனம் — சிங்கள மகா வித்தியாலயம், கிளிநொச்சி

12-30 மணி நாடகம் — கிளிநொச்சி ஸ்ரார் நாடக மன்றம் அளிக்கும்
"கற்பா? காதலா?" சரித்திர நாடகம்

2-00 மணி நாட்டுக்கூத்து — மாஷையூர் பாவலர் மன்றம், யாழ்ப்பாணம் அளிக்கும்
"கலியை வென்ற காவலன்"
அன்பளிப்பு ; திரு. வே. இ. தம்பிப்பிள்ளை, கிளிநொச்சி

3-30 மணி நாடகம் — கிளிநொச்சி பட்டினசபைக் கலா மன்றம் அளிக்கும்
"போஸ்ற் பியோன் பொன்னையா"

4-30 மணி நாடகம் — பிரதேச ஆன்புல வேலைகள் கலா மன்றம் அளிக்கும்
"சிதைந்த உள்ளங்கள்"
நன்றியுரை — செல்வி வி. துரைசாமி (கலாச்சார உத்தியோகத்தர்,
கரைச்சிப் பிரிவு)

அன்புடன் அழைக்கின்றோம் — அனைவரும் திரண்டு வருக.

கரைச்சிப் பிரிவு கலைவிழாவிற்கு

எமது இதய பூர்வமான வாழ்த்துக்கள்

# வைத்திலிங்கம் அன் சன்

கிளிநொச்சி

*With the best compliments of*

# Vythilingam & Son

**Kilinochchi**

T'Phone : 236

# உப உணவுப் பயிர் உற்பத்தியில் கரைச்சிப் பகுதியின் பங்கு

வீ. சத்தியானந்தன்
யாழ். மாவட்ட விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்

உலகமெங்கும் தற்பொழுது உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள காரணத்தால் உலகச் சந்தையிலே உணவுப் பொருட்களின் விலை ஏறிக் கொண்டே போவதை நாம் காண்கின்றோம். சில உணவுப் பொருட்களின் விலை சென்ற ஆண்டிலும் பார்க்க இவ்வாண்டு இரு மடங்காக அதிகரித்துள்ளதைக் காண்கின்றோம்.

இத்தட்டுப்பாடு ஏற்பட்டமைக்குப் பல காரணங்களுள, அவையாவன:

சனப்பெருக்கம்

குறைந்த மழை வீழ்ச்சி

பயிரழிவு

கைத்தொழிற் பெருக்கம்

அத்துடன், பல நாடுகளில் நாகரீகம் வளர வளர, அங்கு வாழும் மக்கள் தங்கள் உணவு முறைகளை மாற்றியமைக்கத் தொடங்கியதன் காரணத்தால் வழக்கமாகச் செய்கைபண்ணப்பட்ட பயிர்களை மிகக்குறைவான நிலப்பரப்பில் சாகுபடி செய்யும் சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

எம்மிடம் போதிய பிறநாட்டுச் செலாவணியில்லாத காரணத்தால், முன்னேற்ற நாடுகளுடன் போட்டியிட்டு அத்தியாவசிய உணவுப் பொருட்களை வாங்க இயலாத நிலையில் இருக்கின்றோம். எனவே எங்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களை எமது நாட்டிலே உற்பத்தி செய்ய வேண்டியது அவசியம். கோதுமையும், மைசூர்ப் பருப்பையும் தவிர ஏனைய உணவுப் பயிர்களை இந்நாட்டிலேயே பயிரிடலாம். அத்தியாவசிய உணவுப் பொருட்களை இந்நாட்டிலேயே பயிரிடுவோமானால், இந்நாட்டை எதிர் நோக்கியுள்ள பெருமளவு வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு தீர்த்துவிடலாம் என்பது உறுதி.

யாழ் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் உணவு உற்பத்தியில் அதிக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. முக்கியமாகக் கரைச்சிப் பகுதியில் வதியும் கமக்காரப் பெருமக்கள் உணவு உற்பத்தித்துறையிலே பெரும் அக்கறை காட்டியுள்ளார்கள். உணவு உற்பத்தித்துறையில் கரைச்சி மக்கள் இன்னும் கூடிய அக்கறை காட்டுவார்களேயானல் எமது நாடு கூடிய சீக்கிரத்தில் தன் நிறைவு பெறலாம் என்பது எனது துணிபு.

# 1972-ம் ஆண்டு கலை விழா



பிரதம அதிதி திரு. விமல் அமரசேகரா (அரசாங்க அதிபர்) அவர்களும், தலைவர் திரு. இ. யோகநாதன் (காரியதிகாரி) அவர்களும் சொற்பொழிவாற்றுகின்றனர்

மனித வளர்ச்சிக்குத் தேவையான ஜீவசத்துப் பொருட்களில் மாச்சத்து மிக முக்கிய பங்கைக் கொண்டுள்ளது. மாச்சத்து அதிகமாகக் கொண்டுள்ள அரிசியும், கோதுமையும் உலகத்திலே மனித உணவிற்கு அதிகமாகப் பாவிக்கப்படுவதனாலும், உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதனாலும், உலகச் சந்தையிலே இவற்றின் விலை அதிகரித்துள்ளது. இலங்கையில் கோதுமை பயிரிடுவதற்கான சீதோஷ்ண நிலையில்லை. எனினும் கூடிய நெல் விளைவிப்பதற்கோ செலவு அதிகம் தேவையாகும். எனவே எமக்குத் தேவையான மாப்பொருளை வேறு பயிர்கள் மூலம் நாம் பெறவேண்டும். இம்மாப் பொருட்களைச் சுலபமாகக் கிழங்கினங்களிலிருந்து பெறலாம். மரவள்ளி, வற்றாளை, வள்ளி போன்ற கிழங்கினங்கள் குறைந்த அளவு ஏக்கர் ஒன்றுக்குப் பத்துத் தொன் விளைவைத்தரும். கோதுமை மா மிக மலிவான விலைக்குக் கிடைத்தமையால் மக்கள் இப்பயிர்களைப் புறக்கணித்து வந்துள்ளார்கள். தற்போதுள்ள நெருக்கடியைப் போக்கடிக்க நாம் வழமையாகச் சாகுபடி செய்துவந்த கூடிய வருவாய் தரும் மிளகாய், வெங்காயம் போன்ற பயிரின வர்க்கத்தைக் குறைக்க நேரிட்ட போதிலும், வழமையாகச் சாகுபடி செய்யாத இக்கிழங்கினங்களை இடையிடையே பயிரிட வேண்டும்.

நீர்ப்பாய்ச்சல் வசதியுள்ள மேட்டு நிலங்களில் கிழங்குடன் குரக்கன் இறுங்கு, சோளம் போன்ற சிறு தானியங்களையும் சேர்க்க வேண்டும். ஏனெனில் மாப்பொருள் மனித வர்க்கத்திற்கு மாத்திரமல்ல, கால் நடைகளுக்கும், கோழி வளர்ப்புக்கும் அத்தியாவசியமாகின்றது. இப்படிச் செய்வோமானால் தற்போது மிளகாய்ப் பயிருக்கு ஏற்பட்டுள்ள நோயைப் பெருமளவு நாம் கட்டுப்படுத்தலாம்.

கரைச்சிப் பகுதியில் சுழற்சி முறையைக் கையாளாது விட்டதே இந்நோய்க்கு மூக்கிய காரணம். கமத்தொழில் திணைக்களத்தின் ஆராய்ச்சிப்பகுதி அண்மையில் கூடிய விளைவுதரவல்ல கீழ்க்காட்டப்பட்ட எத்தனையோ புதிய இனங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

குரக்கன் எம். ஐ. 301, எம். ஐ. 302 (M. I. 301, M. I. 302)
சோளம் தை கொம்பொசிற் (Thai Composite)
இறுங்கு ஐ. எஸ். 2941 (I. S. 2941)

கரைச்சிப்பகுதியில் மேட்டுப்பயிருக்கெனக் கொடுக்கப்பட்ட நிலப் பரப்பில் செப்தெம்பர் தொடக்கம் தை வரை எப்பயிரும், நீர்த்தேக்கத்தின் காரணத்தால் சாகுபடி செய்வதில்லை. இந்நிலத்தில் 100 புசலுக்குக் கூட விளைவுதரவல்ல பீ. ஜீ. 34 - 8 போன்ற 3 மாத இன நெல்லை விதைப்போமானால் அதிக லாபம் பெறலாம்.

மனித வளர்ச்சிக்கு மாப்பொருளோடு அதிக ஜீவசத்தைக் கொண்ட பருப்பு உணவு வகைகளும் அத்தியாவசியம். இப்பயிர்களை கரைச்சிப் பகுதி

யில் பெருமளவு பயிரிட வாய்ப்புண்டு. நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் நீர்ப்பாய்ச்சல் வசதியில்லாத காரணத்தால் தரிசு நிலமாகவே இருக்கின்றது. இந்த நிலங்களில் மாரிப்போகத்தில் சுலபமாக எத்தனையோ பயிரினங்களைச் சாகுபடி செய்யலாம். மிகக்குறைவான நெல் விளைவைத்தரும் நீர்ப்பாய்ச்சல் வசதியில்லாத மேட்டு நிலங்களில் கூட உப உணவுப்பயிர்களைச் சாகுபடி செய்வோமானல் கூடிய லாபம் பெறலாம்.

நாம் சுலபமாகச் சாகுபடி செய்யக் கூடிய ஓர் பயிர் உழுந்து. வவுனியா மாவட்டத்தில் 1000 ஏக்கரில் இப்பயிரைச் சாகுபடி செய்கின்றனர். பாசிப் பயறு போன்றல்லாது இப்பயிரை ஒரே நேரத்தில் அறுவடை செய்ய லாம். 1000 இருத்தல் விளைவைத்தரும், உழுந்திலும் பார்க்க இரு மடங்கு விளைவையும் தரக்கூடிய அதிக சத்துள்ள டீ. கே.-5, 'பிருக்' டைநூன் (R) (T. K. - 5, Bragg Tainoon (R) சோயா அவரை போன்ற இனங்களை இம்மேட்டு நிலங்களில் மாரிப்போகத்தில் மழையை நம்பிப்பயிரிடலாம். எவ்வாறு உழுந்தைப் பயன் படுத்துகிருேமோ அவ்வாறே சோயா அவரை யையும் உபயோகிக்கலாம். அத்துடன் கோப்பி, பால் போன்றவற்றையும் இதிலிருந்து தயாரிக்கலாம். வரட்சியைத் தாங்கக் கூடிய இன்னேர் பயிர் துவரை. துவரை $3\frac{1}{2}$ மாதத்தில் 1,500 ருத்தல் விளைவு தரும். 9 அங்குல உயரத்தில் அறுவடை செய்தால் 3 மாதத்தில் இன்னும் 1,200 ருத்தல் விளைவைப் பெறலாம். ஆனல் பூக்கும் பொழுதும், பின்னர் இரு கிழமைக்கு இருமுறை துளைப்பானைக் கட்டுப்படுத்த கிருமி நாசினி விசிற வேண்டும். அசோறின், டமோரோன், லனேற், தயோடான், (Azodrin, Tamaron, Lannate, Thiodan) ஆகிய நாலு கிருமி நாசினியும் நல்ல பலனை அளித்துள்ளன.

மேட்டு நிலங்களை மட்டுமல்ல ஏனைய வயல் நிலங்களையும் சிறு போகத் தில் நல்ல முறையில் பிரயோசனப்படுத்தல் வேண்டும். மானவரி நிலங் களிலே 3 மாத நெல்லினம் விதைத்து, அறுவடை செய்தவுடன் வயது குறைந்த பாசிப்பயறினம் டைப் - 51 (Type - 51) அல்லது என்ரு விதைப் போமானல் நல்ல பலனேடையலாம். இந்நிலங்களில் உழுந்து, நிலக்கடலை போன்ற பயிரினங்களையும் இம்முறையிலே நீர்ப்பாய்ச்சலின்றிப் பயிரிடலாம். பருப்பு வகைகளுக்காகப் பிற நாடுகளுக்கு வருடாவருடம் 60 லட்சம் ரூபா போகின்றது. இப்பருப்பு வர்க்கத்தின் இறக்குமதியை முற்ருக நிறுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதால், கரைச்சி வாழ் மக்கள் இப்பருப்பு வகைகளை உற்பத்தி செய்ய அக்கறை காட்டினல் இந்நாட்டிலிருந்தும் பருப்பு வகைக் காக வெளிநாட்டைத் தேடிச் செல்லும் எமது பொருளாதாரத்தின் பெரும் பகுதியை இந்நாட்டாரே பெற முடியும். இதனல் அபரிமிதமான லாபத்தை- வருவாயைக் கரைச்சிவாழ் கமக்காரர் பெறக்கூடியதாகின்றது.

சகல விதமான

பட்டு, பருத்திப் பிடவைகளும்

சேட், சூட்டிங் வகைகளும்

நிதான விலையில் பெற்றுக்கொள்ள

விஜயம் செய்யுங்கள்

# நியூ பான்சி பலஸ்

கண்டி றோட் — கிளிநொச்சி

# Yarl Bakery & Hotel

Prop: N. Manuelpillai

Kandy Road — Kilinochchi

BUTTER

BREAD

BISCUITS

## Yarl Spot

Prop Mary Magerat, M.

New Bus Stand

Kilinochchi

COOL DRINKS

BISCUITS &

OILMENTS

கரைச்சிப் பிரிவு கலைவிழாவிற்கு

எமது இதய பூர்வமான வாழ்த்துக்கள்

# K. S. SELVADURAI
# KUMARAN & CO.

PAWN BROKER

KANDY ROAD, KILINOCHCHI

கே. சி. செல்வத்துரை

குமரன் அன் கோ.

கண்டி வீதி — கிளிநொச்சி

★ நகை அடைவு பிடிப்பவர் ★

# கூடு

முருகையன்

கூட்டுக்குள் வாழுகிறோம்,
கொள்கை வயிரக்கற் கோட்டை என நம்பி,
கொடுகி, அரைக் கண்மூடி
நீட்டி நிமிரும் நினைப்பும் விருப்பும் இன்றி ......
கூட்டுக்குள் வாழுகிறோம்.

குளிரோ நடு நடுக்க,
வாட்டும் பசி, உள் வயிற்று நெருப்பாய் வெதுப்ப
மோட்டுத் தனத்தின் முழுப்பொருளை உன்னாது
சாட்டுக்கள் தேடிச் சளாப்பி அளாப்புகிறோம்.

கேற்றுக்கும் அப்பால், கிணற்றடியில் நிற்கின்ற
தோழர்களைப் பார்த்து, துணிந்து சில சொற்பேசி
வாழ்வியலைக் கொஞ்சம் வளர்த்து விரிக்க எண்ணி
யாரேனும் சற்றே இரண்டோர் அடியெடுத்து
வைப்பதனைக் கண்டால், வயிறெரிந்து கூத்தாடி
— எட்டப்பா — என்போம்.
— எட, போடா; சீ, நீ சா —
என்ற வகையில் இழித்துப் பழித்திடுவோம்.
கொன்று விடவுமே தெண்டிப்போம், கூடுமென்றால் !

அப்பால் வெளியில் 'அவர்களுடன்' நாம் கலந்தால்
எங்களுக்கும் தங்களைப் போல் இன்ப துன்பம் உள்ளதனை
எங்களுக்கும் வாய்கள், இரண்டிரண்டு கை, வயிறு
எங்களுக்கும் தாய்கள், இரண்டிரண்டு கண்கள், தலை
தங்களைப்போல் உள்ளதனைச் சற்றே நெருக்கமாய்க்
காண்பார்கள் அன்றோ ?
கலந்து புழங்குகையில்.

கூடி உழைத்துக் குழந்தை பெற்றுப் பேணுகையில்,
புத்தி தெளிந்து பொதுமையுறல் நல்லதன்றோ ?
ஒத்துப் பணிகள் ஒரு சில நாம் மேற்கொண்டு
சித்தி பல கண்டால்,
சிறு சில்லறைப் பிசகைத்
தக்கபடி தீர்ப்பதற்குச் சந்தர்ப்பம் வாராதோ ?

இத்தனையும் எண்ணும் எழுச்சி — விழிப்பில்லாமல்
கூட்டுக்குள் வாழுகிறோம்.
கொள்கை வயிரக் கற்கோட்டை என நம்பி,
கொடுகி, அரைக் கண் மூடி
நீட்டி நிமிரும் நினைப்பும் விருப்பும் இன்றி......

கரைச்சிப் பிரிவுக் கலைவிழா நிறைவுபெற

கிளிநொச்சி

## சிவாஸ் கபே

ஸ்தாபனத்தாரின் நல்வாழ்த்துக்கள்

❊ சுகாதார முறைப்படி தயாரிக்கப்பெற்ற உணவு வகைகள்
❊ சிற்றுண்டி வகைகள் ❊ குளிர்பானங்கள்
❊ சுத்தமான பசும்பால், தேநீர், கோப்பி ஆகியவற்றிற்கும்
❊ குறித்த நேரத்திற்குள் திருப்திகரமாக ஓடர் வகைகளைப் பெற்றுக்கொள்ளவும்

எமது ஸ்தாபனத்திற்கு விஜயம் செய்யுங்கள்

உங்கள் திருப்தியே எங்கள் திருப்தி

## SIVAS CAFE

( Prop: A. Kulasegarampillai )

KANDY ROAD — KILINOCHCHI



*With Best Compliments*

## INTERNATIONAL TRADING CO.

Dealers in MOTOR & TRACTOR SPARES

Kandy Road — KILINOCHCHI

# கரைச்சிப் பிரிவின் பண்டைய மகிமை

— திரு. ரி. முருகேசம்பிள்ளை —
உதவி அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்

இன்று பொருளாதாரத்திலும் விஞ்ஞானத்திலும் மேலோங்கிக் காணப்படுகின்ற மேலைத்தேய நாட்டினர், இற்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் கீழைத்தேய நாகரிகங்கள் சிறப்புற்று விளங்கிய காலத்தில், நாகரிகத்தின் சாயலே அறியாத காட்டுமிராண்டிகளாய் வாழ்ந்திருந்தனர் என்பதை வரலாறு எடுத்துக்கூறுகின்றது. கரப்பா — மொகஞ்சதாரோ நாகரிகம் கொடிகட்டிப் பறந்த காலத்தில் அறியாமை என்னும் இருளில் மேலைத்தேயங்கள் அமிழ்ந்து கிடந்தன. கீழைத் தேயங்களே பல்வேறு சிறப்புக்கள் பொருந்தியனவாய் அமைந்து கிடந்தன. அத்தகைய தேசங்களுள் ஒன்றான, இந்துசமுத்திரத்தின் மத்தியிலே மாணிக்கம் போலத் திகழும் இலங்கை நாட்டில், எத்தகைய சிறப்பானதொரு நாகரிகம் நிலவியிருந்ததென்பதை அதன் பண்டைய வரலாறு எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது. எந்தவொரு நாட்டிற்கும் கிடைக்காத அளவிற்கு இலங்கைநாடு தனது புராதன வரலாற்றை அறிந்துகொள்வதற்கு மூலாதாரங்கள் பலவுடையதாய்த் திகழ்கின்றதென்றும் அம்மூலாதாரங்களைக் கொண்டு இலங்கையின் பண்டைய வரலாறு சிறப்புறக் கணிக்கப்படக்கூடியது; கணிக்கப்பட்டுள்ளதென வரலாற்றறிஞர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். எனினும் கிடைக்கும் சகல ஆதாரங்களைக் கொண்டும் திருப்தியான ஒரு வரலாற்றைப் படைத்தல் இலகுவான காரியமன்று, என்பதையும் அவ்வரலாற்றறிஞர்கள் ஒப்புக்கொள்கின்றனர். பண்டைய இலங்கையில் அனுரதபுரத்தையும், பின்னர் பொலநறுவை அதன் பின்னர் தென்மேற்குப் பிரதேசங்களின் பாதுகாப்பான நகரங்களையும் தலைநகராகக் கொண்டு சிங்கள அரசர்கள் ஆட்சி செய்தபோது வடக்கே தமிழ் இராச்சியம் நிலைபெற்றிருந்தது. தமிழ் இராச்சியத்தின் தோற்றம் பற்றிய செய்திகள் முற்றும் முடிந்த ஒரு ஆராய்ச்சியாகத் தோன்றவில்லை. அது இலங்கையின் எப்பிரதேசம்வரை பரந்து விரிந்திருந்ததென்ற செய்திகள் தீர்க்கப்படாத ஒரு புதிராகவே இருந்து வருகிறது. தமிழ் இராச்சியத்தில் வன்னி என்னும் பகுதி நிலைபெற்றிருந்ததை ஓரிரு ஆதாரங்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறதே தவிர வன்னியின் பூரணமான சரித்திரம் இன்னும் நிர்ணயிக்கப்பட வில்லையென்றே கொள்ளக் கிடக்கின்றது. எனினும் தெற்கே வவுனியா போன்ற பகுதிகளுக்கும், வடக்கே தற்போதைய கரைச்சிப் பகுதிக்கும் வன்னியின் எல்லைகள் பரந்துகிடந்தன என்பதை ஆங்காங்கே காணப்படும் சிதலமடைந்த சான்றுகளின் மூலம் அறியக்கூடியதாயுள்ளது.

கரைச்சிப் பிரிவென்பது தற்கால அரசாங்கங்களின் குடியேற்றக் கொள்கையினடிப்படையில் உருவான புதிய ஒரு பிரிவென்ற தப்பபிப்பிராயம்

பலரிடையே இன்று நிலவிவருகிறது. அவ்வெண்ணம் தவறானது; கரைச்சிப் பிரிவு புதிதாக ஏற்படுத்தப்பட்ட குடியேற்றப் பிரிவு அன்று; அது பழம் பெரும் வரலாறுடைய புராதனப் பிரிவாகும் என்பதை உணர்த்தும் நோக் குடனும், வன்னியின் பண்டைய வரலாற்றை ஆராய முற்படும் நல்லறிஞர் கட்கு தூண்டுகோலாய் அமையுமென்னும் நோக்குடனுமேயே இக்கட்டுரை வரையப்படுகின்றது.

தற்போது நாங்கள் காணும் கரைச்சிப் பிரிவு முற்காலத்தில் போர்த் துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயரது ஆதிக்கம் ஏற்பட முன்பு வன்னிய அரசின் இராச்சியத்தின் ஓர் பகுதியாக அமைந்திருந்ததென்லாம். எனவே கரைச்சிப் பிரிவின் புராதன வரலாற்றை ஆராயப் புகுவோர் கரைச்சிப் பிரிவின் மேற்கேயும் தெற்கேயும் உள்ள பிரதேசங்களின் வரலாற்றோடு இணைத்தே அதனை ஆராய்தல் வேண்டும்.

தற்போதைய கரைச்சிப் பிரிவு புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஒரு குடி யேற்றமன்று என்பதை நிறுவுவதற்கு வரலாற்றுச் சான்றுகள் பல இங்கே அமைந்துள்ளன.

‘‘கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்’’ என்பதும் ‘‘கோவில் இல்லா ஊரின் அழகு பாழ்’’ என்பதும் தமிழரிடையே வழங் கிவரும் முதுமொழியாகும். பண்டைக் காலத்தில் தமிழர் தம் நாகரிகத் தின் முதுகெலும்பாகக் கோவிலே அமைந்திருந்த தென்பதற்கும், ஊர்களும் நகரங்களும் கோவில்களை மையமாக வைத்தே தோன்றின என்பதற்கும் செந்தமிழ் நாட்டின் வரலாறு சான்றுபகர்கின்றது. இந்த அடிப்படையில் பார்க்கும்போது கரைச்சிப் பிரிவின் ஒரு பிரதேசமாகிய உருத்திரபுரத்தில் புராதன குடியிருப்பு நிலவியிருந்த தென்பதற்கு அப்பகுதியில் அமைந்துள்ள பழைய புராதன சிவன்கோவில் சான்றாக விளங்குகின்றது. இச்சிவன் கோவிலின் சிவலிங்கமும், ஆவுடையாரும் மிகப் பெரியவை. இவற்றைப் பார்க்கும் பொழுது உருத்திரபுரத்தில் ஓர் மிகப்பெரிய சிவன் கோவில் அமைந்திருந்ததென்பதை நாங்கள் உணரலாம். ஓர் சிவன் கோவில் சாதா ரண குக்கிராமத்தில் காணப்படமுடியாது. வைரவர் கோவில், விநாயகர் கோவில், அம்மன் கோவில் ஆகியன சிறு கிராமத்தில் அமையும். ஆனால் சிவன் கோவிலோ ஓர் பெரிய கிராமத்தில் அல்லது பட்டணத்தில் பெருந் தொகையான மக்கள் வசிக்கும் இடத்திலேயே அமையும். எனவே முற் காலத்தில் உருத்திரபுரம் சிவன் கோவிலைச் சுற்றி ஓர் பெரும் கிராமமோ பட்டணமோ இருந்திருக்க வேண்டும். இச்சிவன் கோவிலின் அண்மையில் பொறிக்கடவை அம்மன் கோவில் இருக்கிறது. இக்கோவிலும் புதுமையும் புராதனமும் நிறைந்தது. எனவே, உருத்திரபுரம், குஞ்சுப்பரந்தன், பரந்தன் முதலிய வட்டாரங்களை இணைத்து பெருந்தொகையான மக்கள் வசித்தார்கள் என்பதும், பெரும் பட்டணம் இந்த இடத்தில் இருந்திருக்க வேண்டும் என்பதும் தெளிவு. தற்போதைய எட்டாம் வாய்க்கால் வட்டாரத்தில், ஓர் உருத்

திரபுர குடியேற்ற வாசியின் வீட்டு வளவில், 1959-ம் ஆண்டு பெருந் தொகையான மண்ணுல் செய்யப்பட்ட சிலைகள் தோண்டி எடுக்கப்பட்டன. இச்சிலைகள் தற்போது அநுராதபுரம் புதைபொருள் ஆராய்ச்சி நூதனசாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர்கள் இச் சிலைகளைப் பார்வையிட்டு இவைகள் கிறிஸ்துவுக்கு 3000 வருடங்களுக்கு முன் செய்யப்பட்டவை என்று குறிப்பிட்டுள்ளனர்.

கரைச்சிப் பிரிவின் கிழக்குப் பாகத்தை உற்று நோக்கும்பொழுது வட்டக்கச்சி, புளியம்பொக்கணை, கண்டாவளை, புன்னைநீராவி ஆகிய கிராமங்கள் இருக்கின்றன. புளியம்பொக்கணையில் தற்போது நாகதம்பிரான் கோவில் இருப்பதை அனைவரும் அறிவர். இவ்வாலயமும் ஓர் சிவாலயமே. இவ்வாலயத்தைச் சுற்றியும் பெருந்தொகையான மக்கள் வசித்த பட்டினம் முற்காலத்தில் இருந்திருக்க வேண்டும்.

கரைச்சிப் பிரிவின் மேற்குப் பாகத்தில் பூநகரிப் பிரிவு இருக்கின்றது. இதன் பெயரிலிருந்தே இப்பிரிவின் பழமையையும், தொன்மையையும் உணரக்கூடியதாய் இருக்கின்றது. பூநகரி என்று சொல்லும்போது பாண்டிய அரசர் காலத்தில் காவிரிப்பூம்பட்டணத்தின் ஞாபகம் மனதில் வருகின்றது. பூநகரிப் பிரிவில் அரசபுரம் என்ற ஓர் இடம் பெருங்காட்டின் மத்தியில் தற்போது பாழான நிலையில் இருக்கின்றது. இந்த அரசபுரம் என்ற இடத்தில் பெருங்கட்டிடங்கள், அரண்மனைகள், ஆலயங்கள் முதலியன இருந்ததற்கு அடையாளமாகக் குவியல் குவியலாக பெருங்காட்டின் பல பகுதிகளில் செங்கல்லுக் குவியல்கள் காணப்படுகின்றன. இச்செங்கற்கள் மிகப்பழைய காலத்துக்குரியவை. புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர்கள் இந்த இடத்தைப் பார்வையிட்டு ஆராய்ச்சி நடாத்தினுல் வரலாற்றுச் சான்றுகள் பல வெளிப்படுவதோடு பழைய சரித்திர இரகசியங்களையும் அறியக்கூடியதாக இருக்கும்.

கரைச்சிப் பிரிவின் தென்பகுதியிலே துணுக்காய், பனங்காமம், இரணைஇலுப்பைக்குளம், வன்னிவிளாங்குளம், புதூர், ஒட்டிசுட்டான், கற்சிலைமடு, குமுழமுனை ஆகிய பிரதேசங்கள் அமைந்துள்ளன.

பண்டாரவன்னியன் பிரித்தானியருக்கெதிராக 1803-ம் ஆண்டு படையெடுத்தபோது முறிகண்டியில் தொடங்கிய வெஞ்சமர் பதினெட்டாம் போர் ஈறுக நிகழ்ந்து கடைசியில் தற்போது கற்சிலைமடு என்று சொல்லப்படும் இடத்தில் முடிவுற்றது. அந்த இடத்தில் பண்டாரவன்னியன் படை தோற்கடிக்கப்பட்டது. பண்டாரவன்னியன் பிரித்தானியரின் கையில் அகப்பட்டுப் பகிரங்கமாக அவ்விடத்தில் தூக்கிலிடப்பட்டு இறந்தான். பிரித்தானியர்கள் தங்கள் வெற்றியின் சின்னமாக அதே இடத்தில் ஓர் கற்சிலை அமைத்தனர். அக்கற்சிலையில் பண்டாரவன்னியன் பிரித்தானிய படையினரால் 31-10-1803-ல் தோற்

கடிக்கப்பட்டானென வரையப்பட்டுள்ளது. அக்கற்சிலை அவ்விடத்திற் அமைந்துள்ளதனால் கற்சிலைமடு என்ற பெயர் வழங்கத் தொடங்கியது.

அக்கற்சிலைக்கு அண்மையில் ஓர் புராதன சிவாலயம் பாழான நிலைமையில் இருப்பதைக் காணலாம். எனவே அந்த இடத்தில் ஓர் பெரிய பட்டணம் இருந்ததென்று சொல்லலாம். கற்சிலைமேடு என்னும் பெயர் அவ்விடத்திற்கு வழங்கத்தொடங்கியதன் முன் அவ்விடத்திற்கு என்ன பெயர் இருந்ததென்பதும் அதோடு சம்பந்தப்பட்ட சரித்திரங்களும் ஆராய்ச்சியில் அறிய வேண்டியவையாகும். எங்கள் மத்தியில் வசிக்கும் அறிஞர்களும், ஆராய்ச்சியாளர்களும் இத்தகைய ஆராய்ச்சியை மேற்கொள்ளுவார்களென எதிர்பார்க்கிறேம். முற்காலத்தில் முல்லைத்தீவு வட்டாரத்தில் குமரபுரம் என்னும் பெயருடைய மாநகரம் இருந்ததாக முதியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேம். தற்போது கற்சிலைமடு என்னும் பெயருள்ள இடம் முற்காலத்தில் குமரபுரம் என்னும் மாநகரமாக இருந்திருக்கலாமா ?

வவுனியா மாவட்டத்தில் வடபகுதியிலுள்ள தற்போதைய காட்டுப் பிரதேசங்களில் பல இடங்களில் பழைய கற்கட்டிடங்கள் சிதைவுற்றுப் பாழ் நிலையில் கிடப்பதைக் காணலாம். சில இடங்களில் பழைய கற்கட்டுக் கிணறுகள் நடுக்காட்டில் இருக்கின்றன. பல இடங்களில் புளியமரச் சோலைகள் காணப்படுகின்றன. எத்தனையோ இடங்களில் புதையல்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் அந்த இடங்களில் முற்காலத்தில் பெரிய குடிமனைகளும், பட்டணங்களும், சைவாலயங்களும் இருந்ததற்குச் சான்றாகும்.

தற்போது வவுனிக்குளம் குடியேற்றத்திட்டம் இருக்குமிடத்தில் ஓர் பழைய சிவாலயம் இருந்திருக்கிறது. இச்சிவாலயத்தின் லிங்கமும் ஆவுடையாரும் இப்பொழுதும் எவரும் காணத்தக்கதாக இருக்கின்றன. இவ்விடத்தில் இருந்து சில கல்லுத் தூரத்தில் பனங்காமம் என்னும் இடம் இருக்கின்றது. பனங்காமத்தில் புராதன சிவன்கோவில்கள் இருந்தன என்பதற்குச் சான்றாக சிவலிங்கங்கள், ஆவுடையார்கள், ஆலயக் கட்டிட அத்திவாரங்கள் ஆகியன காணப்படுகின்றன. இவைகளெல்லாம் கரைச்சிப் பிரிவும் அதன் அண்மையிலுள்ள மறு பிரிவுகளும் சேர்ந்து ஓர் பெரும் முன்னேற்றமும், சீர்திருத்தமும், மக்களும் நிறைந்த மாகாணங்களாக இருந்தன என்பதற்குச் சான்றாக விளங்குகின்றன.

உருத்திரபுரம், பனங்காமம், வவுனிக்குளம், இரணைஇலுப்பைக்குளம் என்னும் இடங்களிலுள்ள சிவாலயங்களில் ஓர் விசேடம் காணத்தக்கதாக இருக்கின்றது. இச்சிவாலயங்களிலுள்ள சிவலிங்கங்கள் சதுரமான வடிவிலுள்ள ஆவுடையார்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. மறு இடங்களிலுள்ள சிவாலயங்களில் ஆவுடையார்கள் வட்ட வடிவமாக உள்ளன. ஆனல் சோழமன்னர் காலத்தில் கையாளப்பட்ட ஆலயத்திருப்பணி

முறையில் சதுரவடிவான ஆவுடையார்கள் அமைக்கப்பட்டன என்று சரித்திரம் கூறுகிறது. எனவே இலங்கையின் வடபிரதேசத்திலுள்ள சிவாலயங்கள் சோழர் காலத்தில் அமைக்கப்பட்ட ஆலயங்களெனக் கொள்ள வேண்டியிருக்கிறது. அவ்வாறுயின் சோழமன்னர்கள் பாரத நாட்டில் அரசோச்சிய காலத்தில், ஈழத்திலும் அவர்களுடைய நாகரிகம் பரந்ததென்றும், அவர்களுடன் தொடர்பு இருந்ததென்றும் சொல்லக்கூடியதாய் இருக்கின்றது.

இதுமட்டுமன்றி மேலே குறிப்பிட்ட சிவாலயங்களுக்கு அண்மையில் பௌத்த ஆலயங்களும் அமைந்திருந்ததென்பதற்குப் பல சான்றுகள் உண்டு. முற்காலத்தில் சைவமக்கள், பௌத்தமக்கள் நேச மனப்பான்மையோடு ஒருவர்க்கொருவர் உதவியாக இருந்தனர் என்பதற்கு இவ்விரு சமயங்களுக்குமுரிய ஆலயங்கள் ஒரே இடங்களில் அமைந்திருந்தமை சான்றுக உள்ளது. சைவசமயத்தின் சரித்திரத்திலேயே பௌத்தர்களுக்கும், சைவர்களுக்குமிடையில் போர் நடந்ததாக் ஓரிடமும் கூறப்படவில்லை. மாணிக்கவாசகசுவாமிகள் காலத்திலும், திருஞானசம்பந்தர்சுவாமிகள் காலத்திலும் பௌத்தமக்களை வாதில் வென்றதாகவே கூறப்படுகிறது. பௌத்தர்களும் சைவர்களும் ஒரே இடத்தில் சந்தித்து தங்கள் தங்கள் சமயங்களின் திறமைகளையும், கொள்கைகளையும் எடுத்துரைத்து சமாதான மான முறையில் தங்கள் அபிப்பிராயங்களையும், கொள்கைகளையும் பரிமாறிக் கொண்டனர்.

இவ்வாறுக நாகரிகமும், முற்போக்கும், பெருசனத்தொகையும் நிறைந்திருந்த வன்னிநாடு அண்மைக்காலத்தில் ஏன் காட்டுப் பிரதேசமாகவும், யாருமற்ற நாடாகவும் மாறியதென்பதை உற்று நோக்கினுல் சுவையான வரலாறு ஒன்றை அறிந்துகொள்ளலாம். போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் 1505-ம் ஆண்டு தொடக்கம் 1796-ம் ஆண்டு வரை இலங்கையின் கரையோரங்களை மட்டும் ஆட்சி புரிந்தனரேயல்லாமல் உள்ளூர்ப் பிரதேசங்களை ஆட்சி புரியவில்லை. உள்ளூர்ப் பிரதேசங்களிலுள்ள வன்னியரசரின் பிரதேசங்கள் போர்த்துக்கேயர் ஒல்லாந்தரோடு வர்த்தகத் தொடர்புகள் வைத்திருந்தமையால் தங்கள் பொருட்களை பிறநாடுகளுக்கனுப்பி அதன்மூலம் தங்கள் செல்வத்தைப் பெருக்கினர். ஆனுல் 1796-ம் ஆண்டில் ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றியதோடு, உள்ளூர்ப் பிரதேசங்களான கண்டி அரசரின் இராச்சியத்திலும் நாட்டம்கொள்ளத் தொடங்கினர். இதன் பலனுக 1803-ம் ஆண்டில் வடபிரதேசத்திலுள்ள வன்னி மன்னனுன பண்டாரவன்னியனைத் தோற்கடித்த பின், ஆங்கிலேயர் தங்களுடைய ஆதிக்கத்தை மாகோ, பொல்நறுவை முதலிய இடங்கள் வரை விஸ்தரித்தனர். இதோடு நில்லாது தொடர்ந்து ஊடுருவி 1815-ம் ஆண்டில் கண்டி மன்னனைத் தோற்கடித்தனர். இதனுல் உள்ளூர் முழுவதும் ஆங்கிலேயரின் கையில் அகப்பட்டது.

அரசாட்சி ஆங்கிலேயரின் கைவசமான போதிலும் உள்ளூரிலுள்ள பல இடங்களில் சுதந்திர உணர்ச்சியின் பெறுபேறுகக் காலத்துக்குக் காலம்

ஆங்கிலேயருக்கு எதிர்ப்புகள் தோன்றின. இதை அடக்குமுகமாக யாழ்ப்பாணத்திலுள்ள கோட்டையிலிருந்தும் மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய கரையோரப் பட்டினங்களிலிருந்த கோட்டைகளிலிருந்தும் ஆங்கிலேயப் போர் வீரர்கள் உள்ளூர்களுக்குச் சென்று தங்களுடைய அட்டகாசத்தை மக்களின் மேல் காட்டினர்.

கமச்செய்கைக்கு இன்றியமையாதிருந்த குளங்கள் யாவும் சேதஞ் செய்யப்பட்டு முறிகுளங்களாயின. ஆலயங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. ஆண்கள் சிரச்சேதம் செய்யப்பட்டனர். பெண்கள் சகலவித அவமரியாதைகட்கும் ஆளாக்கப்பட்டனர். எஞ்சியிருந்த வன்னி மக்கள் கூட்டம் கூட்டமாகத் திரட்டப்பட்டு பட்டாளப் போர்வீரர்களின் கண்காணிப்பின் கீழ்க் கூட்டிச்செல்லப்பட்டு புதிய இடங்களில் அமர்த்தப்பட்டனர். இதனாலேயே யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல கிராமங்களில் வன்னியிலிருந்து வந்து குடியேறிய குடும்பங்களின் பிற்சந்ததியினரை இன்றும் காணக்கூடியதாயிருக்கின்றது.

இதன் காரணத்தினாலேயே நீர்வளமும் நிலவளமும் நிறைந்திருந்த வன்னிநாடு ஒரு நூற்றாண்டு காலத்திற்குள் காட்டுப் பிரதேசமாகவும் மலேரியா நோயும் வனவிலங்குகளும் நிறைந்த நாடாகவும் மாறியது. இந்நாடு தான் தற்போது அரசாங்க ஆதரவில் புதிதாகக் குடியேற்றப்படுகிறது. எனவே 19-ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் வன்னிநாட்டிலிருந்து வெளியேறிப் புது இடங்களில் மக்கள் குடியேற்றப்பட்ட நிலைமாறித் தற்போது பல இடங்களிலிருந்து திரும்பவும் மக்கள் திரள் திரளாகச் சேர்க்கப்பட்டு வன்னிநாட்டில் புதிதாகக் குடியேற்றப்படுகின்றனர். இதிலிருந்து சரித்திரமும் சகடைக்கால்போல் வரும் என்பதன் உண்மையை உணரலம்.

கரைச்சிப் பிரிவு போன்ற வன்னிப் பிரதேசத்தில் குடியேறும் மக்கள் அந்நாட்டின் பழைய பொலிவையும், சரித்திரத்தையும் உணர்ந்து சமயாபிமானம் நிறைந்தவர்களாகவும், தேசாபிமானம் உள்ளவர்களாகவும் வாழ்க்கை நடாத்தவேண்டும். தாங்கள் ஓர் பெரிய சரித்திரத்துக்குச் சொந்தமானவர்கள் என்ற உண்மையை உணர்ந்து, வன்னிநாட்டைச் சீர்திருத்தி அதன் பண்டைக்கால மகிமைக்குத் தக்கவிதமாக முன்னேற்றவேண்டும். எதிர் காலத்தில் இத்தேசம் வன்னிநாட்டின் உதவியுடன் உணவு உற்பத்தியிலும், பொருளாதாரத்துறையிலும் சிறந்த நாடாகவும் தன்னிறைவுள்ள நாடாகவும் திகழச்செய்ய மக்கள் அனைவரும் ஒருங்கு சேர்ந்து திடசங்கற்பம் செய்து உழைப்பார்களாக.

**

ஓரங்க நாடகம் :

# நினைவுகள் உறங்காதோ?

— செங்கை ஆழியான்

(காட்சி - 1)

ஒரு குரல்: ''ஈழமணித் திருநாட்டில் அந்நியராம் ஒல்லாந்தரின் ஆதிக்கம் கொடிகட்டிப் பறந்த காலம். தமிழும், சைவமும் வலு குன்றி அடிமை மோகமும் குழப்பமும் மேலோங்கி இருந்த காலம். ஒல்லாந்த தேசாதிபதி கொழும்பில் நிலைபெற்றிருந்து ஈழத்தின் பல பாகங்களிலும் தனது இராஜப்பிரதிநிதிகளை நியமித்து, ஆட்சி செலுத்தி வந்தான். அந்த இராஜப்பிரதிநிதிகள் தமது எல்லைக்குள் அடங்கிய பிரதேசத்தைப் பல வன்னிமைகளாகப் பிரித்து. ஒவ்வொரு வன்னிமைக்கும் ஒவ்வொருவரை அதிகாரியாக நியமித்து நிர்வகித்து வந்தனர். இத்தகைய ஒரு காலகட்டத்தில் தான் நமது கதை ஆரம்ப மாகின்றது. திருவும், அழகும் மலிந்த யாழ்ப்பாணத்தின் கச்சாய்த்துறை வன்னிமையாக பூதத்தம்பியின் மைத்துனன் கயிலாசபிள்ளை இருந்தார்.''

சித்திரை மாதத்து பனி கலையாக் காலை வேளை. வன்னிமை கயிலாசபிள்ளையின் மாளிகைக் கதவை............ (டொக்... டொக்... யாரோ தட்டுகின்றார்கள்)

வேலைக்காரன் : ஆரது ...? விடியிறதுக்கு முந்தி வந்திட்டினம்... மனிசனைக் கொஞ்ச நேரம் நிம்மதியாக இருக்க விடமாட்டினம் ... உதார் ...

வந்தவன் : (பதட்டத்துடன்) ஐயா, இருக்கிறாரே?... மிக அவசர அலுவல்...

வேலைக் : ஐயாட்டை வாற எல்லாருக்கும் அவசர அலுவல் தான்... ஐயா இப்பத்தான் பூசை அறைக்குப் போனவர் ... இன்னும் கொஞ்ச நேரத்தில வருவார்... நீ போயிட்டுப் பேந்து கொஞ்சம் சென்று வா...

வந்தவன் : ஆண்டவனே ... (அழுகின்றான்) என்ரை மானம் மரியாதை எல்லாம் காத்தில போயிட்டுது... ஐயாவிடம் கூறி பரிகாரம் தேட வந்தேனப்பா ... தயவுசெய்து, உன்னைக் கெஞ்சிக் கேட்கின்றேன் ... ஒருக்கா ஐயாவை வரச் சொல் ..

வேலைக் : நீ சொன்னாக் கேட்க மாட்டாய்? ... போ என்றாப் போவன் ...

கயிலாசபிள்ளை : (மிகவும் கம்பீரமான குரல்) யாரோடு சின்னத்தம்பி சண்டை பிடிக்கிறாய்? ... சின்னத்தம்பி உனக்கு எத்தனை தடவை கள் சொல்லி இருக்கிறேன்... எந்த நேரத்தில் எவர் வந்தாலும் அவரை வரவேற்று இருத்தி என்னிடம் உடன் வந்து கூறு என்று... அவர்களுக்காகத்தான் அப்பா நாங்கள்.. சின்னத்தம்பி இன்னொரு தடவை இப்படி நடந்தால் நீ இங்கு இருக்க மாட்டாய்... (மென்மையாக) ஏனப்பா வெளியே நிற்கின்றாய்... இந்த மாளிகையின் கதவுகள் உங்களுக்காக எப்போதும் திறந்தே இருக்கும்...

வந்தவன் : ஐயா... (விம்மியபடி ஓடிவந்து கயிலாசபிள்ளையின் கால்களில் விழுகின்றான்) ... ஐயா.

கயிலாசர் : எழுந்திரு அப்பா... எழுந்திரு... ஏன் கால்களில் விழுகின்றாய்? .. உனக்கு என்ன கஷ்டம் வந்தது? ...

வந்தவன் : நீங்கள் எங்கள் வன்னிமையாக இருக்கும்போது பசி பட்டினி என்று ஒரு கஷ்டமும் எங்களுக்கு வரமுடியாது ஐயா, வாழ்க்கையில் மானந்தான் பெரிசு... அந்த மானம் அழிஞ்சுபோனா ஏன் வாழ்வான், ஐயா? ... எதனைக் கண்ணும் கருத்துமாகக் கட்டிக் காத்து வந்தேனோ, அது என் குலப்பெருமை, மானம் மரியாதை எல்லாத்தையும் கப்பலேற்றிவிட்டு... ஐயோ அதை எப்படிக் கூறுவேன்...? (அழுகின்றான்) அவளை எப்படி வளர்த்தேன்? ... தாய்க்குத் தாயாக, தகப்பனுக்குத் தகப்பனாக... இரவும் பகலும் உனக்காக சீவித்தேனே? ... என்னை இப்படி மோசம் செய்துவிட்டுப் போட்டியேடி? ...

கயிலாசர் : பெரியவரே, புலம்பாமல் விஷயத்தைச் சொல்லுங்கள்... உங்கள் மகன் உங்களைத் தவிக்கவிட்டிட்டு எங்கே போனான்? ... உங்கள் மனம் நோகத்தக்கதாக ஏன் அவன் நடக்கவேண்டி வந்தது? ...

வந்தவர் : இவள் பிறக்கும்போதே தாயைத்தின்னியாகப் பிறந்தாள்... அன்றிலிருந்து பதினெட்டு ஆண்டுகள்... என் கண்களைப்போல அவளைப் பாதுகாத்தேன்... அவளுக்கு நான் பெரிசாகத் தெரியவில்லை... மூந்த நாள் மூளைத்த அவன்தான் பெரிதாகத் தெரிந்தான்... பாவி இப்படி நடந்துவிட்டாயே? ... உன்னை எப்படி எப்படி எல்லாம் வாழவைக்க வேணும் என்று மனக்கோட்டைகள் கட்டினன்...

கயிலாசர் : வயதும் பருவமும் வந்த பெண்ணை உரிய நேரத்தில் கட்டி வைக்காமல் காலம் தாழ்த்திவிட்டீர்கள்... இறகு மூளைத்த கிளி பொந்தில் இருக்காது, ஐயா... நரைமயிரும் காதலும் மறைத்துவைக்க முடியாதவை... உமது மகள் விரும்பிய ஒருவனோடு மனம்ஒப்பிச் சென்றுவிட்டாள் .. இனி நடக்க வேண்டியதைத்தான் பார்க்க வேண்டுமே தவிர, நடந்துபோனதை யோசித்துப் பயனில்லை... அவளை

அழைத்துச் சென்றவன் அவளை வைத்துக் காப்பற்றக்கூடியவனு என்று பார்க்கவேண்டும் .. இருவரையும் அழைத்து மணம் செய்து வையுங்கள். பெரியவரே, உமது மகளை அழைத்துச் சென்றவன் யார்?... உமக்குத் தெரியுமா?... கூறுங்கள் நானே அழைத்து அவர்களுக்குப் புத்தி கூறுகின்றேன் .. ஏன் தயங்குகின்றீர்கள்...? பயப்படாமல் கூறுங்கள்... யாரா இருந்தாலும் இந்த வன்னிமையின் ஆட்சியில் நீதி ஒன்றுதான்...

வந்தவர் : என் மகளை ஏமாற்றி அழைத்துச் சென்றவர் தங்கள் நண்பர் காராளமுதலி... ஐயா ?

கயிலாசர் : (வியப்புடன்) காராளனு...? (சிரிக்கிருர்)... எனக்கே இதை மறைத்துவிட்டானே? பெரியவரே, காராளனுக இருந்தால் கவலையை விடுங்கள்... அவனைப்போல உத்தமன் ஒருவன் இல்லை... உமது மகள் சரியான ஒருவனையே தெரிவுசெய்திருக்கிருள்... காராளமுதலியையே கவர்ந்ததென்ருல் உமது மகள் பேரழகியாகவல்லவா இருக்க வேண்டும்?...

வந்தவர் : அழகிதான் ஐயா... எவருக்குமே அடங்கமாட்டாள் ஐயா...

கயிலாசர் : அப்படியா...? உமது மகளின் பெயர்...?

வந்தவர் : என் பெயர் கணபதிராயன்... என் மகள் பெயர் வடிவழகி... நான் வாறன், ஐயா. என் மனச்சுமையை உங்களிடம் இறக்கிவிட்டுப் போகின்றேன்... இனி நீங்கள்தான் இதற்குத் தக்க முடிவு செய்ய வேண்டும் .. (போகின்ருர்)

கயிலாசர் : எடே, காராளா, உனக்குள்ளே இப்படியும் ஒரு மனமிருக்கிறதா?... பெண்களையே வெறுக்கின்ற உன்னை ஒருத்தி அடிமை கொண்டதோடு உன்னையே தன்னுேடு அழைத்துச் சென்றுவிட்டாளே?... அவள் எவ்வளவு கெட்டிக்காரியாக இருக்கவேண்டும்?... அவள் அவ்வளவு அழகியா?... என் நண்பனின் இதயத்தைக் கொள்ளை கொண்ட அவளை நான் பார்க்கத்தான் வேண்டும்... சின்னத்தம்பி சாப்பாட்டை எடுத்துவை.. விரைவில் நான் வெளியே செல்ல வேண்டும்...

சின்னத்தம்பி : சாப்பாட்டை எப்பவோ எடுத்து வைத்துவிட்டேன், ஐயா... எல்லாரும் கலியாணம்செய்து குடியும் குடித்தனமுமாக வாழ்கினம்... நீங்கள் என்னண்டால் இன்னமும் இந்தக் கிழவன்ரை சாப்பாட்டைத்தான் சாப்பிடுகிறதென்று இருக்கிறியள்...

கயிலாசர் : சின்னத்தம்பி, கலியாணம் என்பது நீ நினைப்பதுபோல இல்லையப்பா... என் தங்கச்சியின் குடும்பம் என்று நாசமாகப் போச்சுதோ

அன்றைக்கே முடிவுசெய்திட்டன் எனக்கு இனி வாழ்வு இல்லை யென்று... அழகவல்லி உன் வாழ்வு இப்படியா முடியவேண்டும்?...

சின்னத் : ஐயா. தெரியாமல் இந்தப் பேச்சை நான் எடுத்திட்டன்... உங்களுடைய உள்ளத்தில கொழுந்துவிட்டு எரிகின்ற துயரத்தை நான் அறியாமல் இல்லை...

கயிலாசர் : அவற்றை இலேசில் மறந்துவிடத்தான் முடியுமா? என் அருமை மைத்துனன் பூதத்தம்பியை அநியாயமாகக் கொலைக்களத்தில் பழி வாங்கிய அந்தக் கொடிய அந்திராசியை... தெய்வம் அவனைத் தண்டித்துவிட்டது... ஆனல், அதனல், பலியான என் தங்கை அழகவல்லி... என் இதயத்தில் துணையாக இடம்கொண்ட என் புவிநாயகவல்லி... இவர்களை எல்லாம் இப்பிறவியில் எங்கு சின்னத்தம்பி காணப் போகின்றேன்?... (அழுகின்ருன்)

சின்னத் : ஐயா... இதென்ன சிறு குழந்தைபோல...

கயிலாசர் : என் வாழ்க்கையில் இனி இதைவிடப் பெரிய வேதனை வர முடியாது, சின்னத்தம்பி. எத்துயரையும் என்னல் தாங்கிக்கொள்ள முடியும்... ஆன, என் குடும்பத்தையே சீரழித்த அந்தக் கொடுமையை மட்டும் என்னல் மறக்கவும் முடியவில்லை... மன்னிக்கவும் முடியவில்லை.. அநியாயமாக அந்தக் குடும்பம் அழிந்தது... நான் இருந்தும் என்ன பயன்.?

(வெளியே குதிரை வண்டில் ஒன்று வந்து நிற்கின்ற சத்தம். குதிரை ஒன்று கனைக்கும் சத்தமும் கேட்கின்றது. படபட வெனக் கதவு தட்டப்படுகின்றது.)

கயிலாசர் : குதிரை வண்டில் ஒன்று வந்து நிற்கின்றதுபோல இருக்குது... ஆரோ கதவைவேறு தட்டுகின்ருர்கள்.. சின்னத்தம்பி போய்க் கதவைத் திற..

சின்னத் : இதோ போறன் ஐயா... (கதவு திறக்கிற ஒலி)... நீங்களா...? வாருங்கோ, ஐயா... நீங்களும் உள்ளே வாருங்கோ, அம்மா... ஐயா, சாப்பிட்டுக்கொண்டு இருக்கின்ருர்... உங்களிடம் வரத்தான் இருக்கின்ருர்...

ஆடவன் குரல் : இப்பிடி இரு, வடிவழகி... என் நண்பனை நான் அழைத்து வருகின்றேன்.

சின்னத் : ஐயா உங்கள் நண்பர் காராளமுதலியார், தனது துணைவியாருடன்...

கயிலாசர் : யார்.. காராளன..? வடிவழகியுடன...? இதோ...

காராளன் : நண்பன், நானே உன்னிடம் வந்தேன் ... அமைதியாக உண வருந்து ...

கயிலாசர் : வா, காராளா, புது மாப்பிள்ளை அல்லவா ? ... மணப்பெண் எங்கே ?

காராளன் : நண்பா நீ என்னை மன்னிக்க வேண்டும்...

கயிலாசர் : ஏனப்பா, நான் உன்னை மன்னிப்பது ? ... உனக்குப் பிடித்தமான ஒருத்தியை நீ தேர்ந்தெடுத்தபோது நான் மகிழ்வடையாமல் கவலையா கொள்வேன்... என்றாலும் நாம் உயிர் நண்பர்களாகப் பழகியிருக் கின்றோம்... இந்த உண்மை எனக்குத் தெரியாமல் போய்விட்டதே ? வேணுமென்றுதான் இதை எனக்கு மறைத்தாயோ ? ...

காராளன் : அப்படி இல்லை, நண்பா... இவற்றையெல்லாம் உனக்கு நான் கூறுவதால், எங்கே உன் அடிமனதில் இருக்கும் கவலைகளை நான் கிளறி விடுவேனோ என்று பயந்தேன்...

கயிலாசர் : உண்மைதான்... இன்று ஏனோ என்மனம் காரணமில்லாமல் குழம்பித் தவிக்கின்றது. நண்பா, உன்னை இப்போது கண்டது எனக்கு ஓரளவு நிம்மதியாக இருக்கின்றது... வா, வா உன் மனைவியைக் காவிரி காத்திருக்க வைத்துவிட்டு நாங்கள் இங்கே பேசிக்கொண்டிருக் கின்றோம்... காராளா, நீங்கள் இந்த வீட்டில் எத்தனைநாள் வேண்டு மானாலும் தங்கலாம்... இது உன் வீடு... வா... சற்று முன்தான் உன் மாமனார் வந்து முறைப்பாடு செய்துவிட்டுப் போகின்றார்... தனது மகளை ஏமாற்றி நீ கடத்திச் சென்றுவிட்டதாக...

காராளன் : நண்பா, இதோ... இவதான் என் மனைவி... வடிவழகி, இவன் தான் என் நண்பன் கயிலாசபிள்ளை... வன்னிமை...

வடிவழகி : வணக்கம் ஐயா...

கயிலாசர் : நீயா ... ?

காராளன் : இவளை முன்பே உனக்குத் தெரியுமா, நண்பா ? ...

கயிலாசர் : (சமாளித்து) இல்லை... இல்லை... எங்கோ பார்த்த முகச்சாயல்... அவ்வளவுதான்... வணக்கம், அம்மா... நீ தகுதியான ஒருவனைத்தான் கணவனாக அடைந்திருக்கின்றாய்... இது உன் வீடு... உங்கள் வாழ்வு இனிமை நிறைந்ததாக இருக்க மனதார வாழ்த்துகின்றேன்... காராளா, நீ இங்கு வந்தவேளைகளில் தங்குவாயே... அந்தப் பெரிய அறையிலேயே நீ தங்கலாம்...

காராளன் : சரி... நண்பா... வா, வடிவழகி ..

சின்னத்தம்பி : ஐயா... நல்ல சாந்தமான பெண்...

கயிலாசர் : சின்னத்தம்பி, இறந்தவர்கள் மீள்வதுண்டோ ?...

சின்னத் : ஐயா... இதென்ன கேள்வி ?... இறந்தவர்கள் ஒருபோதும் மீளவே முடியாது...

கயிலாசர் : மீண்டிருக்கின்றார்களே, சின்னத்தம்பி... புவிநாயகவல்லி, உனக்கும் என் தங்கை அழகவல்லிக்கும் என் கையினாலேதானே கொள்ளி வைத்தேன்...? நீ எப்படி மீண்டாய் ?... உ.ன் உ.ன் உன் வடிவில் இன்னொருத்தியா ? ...

## (காட்சி – 2)

அந்திவேளை. அழகிய நந்தவனம். குயிலொன்று குரல் தருகின்றது. இனிய பட்சிகளின் பல்வேறு ஒலிகள். காராளமுதலியும் வடிவழகியும்.

காராளன் : வடிவழகி, என் அன்பே, நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா? பொற்குடத்திற்குப் பொட்டு வைத்தது போல, உன் அழகிற்கு அழகு சேர்ப்பது போல அலங்காரங்கள். வடிவழகி உன்மையில் நான் பாக்கியசாலிதான்

வடிவழகி : நீங்கள் மட்டுந்தானா?... உங்களை என் கணவராக அடைந்த நான் அல்லவோ மிக்க பாக்கியசாலி, சுவாமி. ஏழையின் குடிசையில் ஏழ்மையிடையே வாழ்ந்த எனக்கு ஆண்டவன் தந்த செல்வம் நீங்கள்... சுவாமி, அழகைத்தானா நீங்கள் காதலித்தீர்கள்?... அழகு நிலையற்றது சுவாமி...

காராளன் : பெண்ணே, நீ நன்கு பேசவும் கற்றுள்ளாய்...? அழகுடன் கூடிய உன் அன்பு தான் என்னைக் கவர்ந்தது, வடிவழகி. ஒடிந்து விழுவது போன்ற உன் எழில் உடலை, நீலவர்ணச் சேலை சுற்றியிருப்பது... அதை எப்படிக் கூறுவேன்... நான் ஒரு கவிஞனாக இல்லையே என்று எனக்குக் கவலையாக இருக்கின்றது... நீ மாபெரும் அழகி, வடிவழகி ..

வடிவழகி : சும்மா புளுகாதீர்கள் சுவாமி, உங்களிடம் ஒன்று கேட்பேன் கோபிக்க மாட்டீர்களே?

காராளன் : வடிவழகி, இதென்ன கேள்வி?... நீ கேட்க நான் கோபிப்பதா?... தயங்காமல் கேள்.

வடிவழகி : உங்கள் நண்பர் நடந்து கொண்ட முறை நல்லாவே இல்லை ... அவருடைய குரலில் ஏன் இத்தனை தயக்கம்?

காராளன் : அது தயக்கமில்லே, வடிவழகி ... என் நண்பன் கயிலாசபிள்ளை யின் வாழ்க்கையில் சம்பவித்தது போன்ற அடுக்கடுக்கான சோகங் கள் எவருடைய வாழ்விலும் நிகழ்ந்திருக்க முடியாது வடிவழகி ... சோகத்திற்கு வடிவம் இருக்குமென்ருல், இந்தச் சோகம் வானைய ளாவி அதற்குமப்பால் பெருக்கும்

வடிவழகி : அப்படியா?... அதை எனக்கும் கூறுங்களேன்?

காராளன் : கூறுகின்றேன், வடிவழகி, அந்தச் சம்பவத்தை நீயும் அறியத் தான் வேண்டும்... நல்லேயம்பதியுறை புவிநாயகன் என்பானின் ஒரே மகன் தான் பூதத்தம்பிமுதலி. யாழ்ப்பாணத்தைப் பரிபாலித்த தேசாதிபதியின் இரண்டாவது அதிகாரியாகப் பூதத்தம்பிமுதலி இருந்தார். முதல் அதிகாரியாக இருந்தவன் அந்திராசி.. கொடியவன்..

வடிவழகி : ...ம்...பிறகு ..

காராளன் : இப்படியாக இருக்குமந்நாளில் செப்பமாய் நகர்வளஞ் சிறப்பு டன் பார்க்க விரும்பியே அதிகாரிகள் புறப்பட்டனர்... நீண்ட வேளை நகர் வலம் வந்ததால் அந்திராசியும் பூதத்தம்பியும் களைப்புற்றனர். தாகம் பசியைத் தணித்துப் போமென அக்கொடியவன் அந்திரா சியை பூதத்தம்பிமுதலி வீட்டிற்கு அழைத்தார்... அதுதான் அவர் செய்த பெருந்தவறு... பூதத்தம்பியின் மனைவி அழகவல்லி நமது கயிலாசபிள்ளையின் கூடப்பிறந்த தங்கை... ஊரே வியந்து கூறும் பேரழகி... விருந்துண்ட அந்திராசி, அழகவல்லியின் அழகில் காமுற்ற வனுக வெளியேறினுன்... வடிவழகி, பிறன் மனை விரும்பியதால் ஏற்பட்ட கேடுகளைக் கேள்.

வடிவழகி : இப்படியும் ஒருவனு? ..

காராளன் : காமுகன் நெஞ்சு தானே?... ஈரம் இருக்குமா, வடிவழகி...? நெஞ்சு நிறை காமத்தோடு சென்ற அந்திராசி என்ன செய்தான் தெரியுமா? தொண்டு செய்து தூதரைத்தோகையைத் தன்வசம் ஆக் கியே வருகென, பேழையில் பொன் வைரம் என்பனவற்றை வைத்து அனுப்பி வைத்தான்....

வடிவழகி : பேயன்... விலே மாதா அவள் இவன் தந்த பொன்னைப் பெறு வதற்கு... கற்புடைய பெண்ணுக இருந்தால் அதே பெட்டியில் செருப்பும் விளக்குமாறும் வைத்துத் திருப்பி அனுப்பியிருக்க வேண்டும்.

காராளன் : அதைத்தான், அந்தப்பெண் செய்தாள் வடிவழகி... ஆனுல், அதன் விலே மிகக் கொடூரமாக அமைந்தது.. வன்சினம் கொண் டான் அந்திராசி... அழகவல்லியை எப்படியாவது மானபங்கப்படுத்தி அடைவதென்று முடிவுசெய்தான்... பூதத்தம்பியின் வீரத்தை நன்கு ணர்ந்த அந்திராசி சதியாலே பூதத்தம்பிமுதலியை ஒழிக்கத் திட்டம்

நீட்டினன்... தந்திரமாக வெள்ளைக் கடுதாசி ஒன்றில் பூதத்தம்பி முதலியின் கையொப்பத்தினை வாங்கிய அந்திராசி பறங்கியருக்குப் பூதத்தம்பி எழுதுவதுபோல ஒரு கடிதத்தை எழுதினன். எம்மை அதஞ்செய்யவும், எங்கள் நாட்டினை அமைவுடன் பிடித்தே அன்னியர் கையில் கொடுத்தரசாளவும் பூதத்தம்பிமுதலி சதிசெய்தான் என்று கூறித் தேசாதிபதியை நம்பவைத்தான்... தேசாதிபதியும் அதை நம்பினன்... உடனே பூதத்தம்பிமுதலியைக் கைதுசெய்து கொலை செய்யும்படி கட்டளையிட்டான்...

வடிவழகி : ஐயோ... பிறகு...

காரளன் : (குரல் தழுதழுக்கின்றது) என் நண்பனின் அருமை மைத்துனன் பூதத்தம்பிமுதலியை அநியாயமாகப் பழிசுமத்திப் படுபாவிகள் வெட்டிக் கொன்றனர், வடிவழகி...

வடிவழகி : ஐயோ... கொடுமை... அழகவல்லி என்ன செய்தார்... ?

காராளன் : என்ன செய்யமுடியும் பேதைப் பெண்ணல் ?... தற்கொலை செய்துகொண்டாள் அவள் மட்டுமல்ல, வடிவழகி... பூதத்தம்பி முதலியின் தங்கை புவிநாயகவல்லியும் துயர் தாங்காமல் தற்கொலை செய்துகொண்டாள்..., ஒரு குடும்பமே அழிந்தது...

வடிவழகி : இவ்வளவும் நடக்கும்போது உங்கள் நண்பர் என்ன செய்து கொண்டிருந்தார்... ?

காராளன் : கச்சாயின் வன்னிமையாக இருந்த அவனுக்கு இதுவொன்றும் தெரியாது... அந்திராசி வெகுவேகமாகத் தனது பழியைத் தீர்த்துக் கொண்டான்... விஷயம் அறிந்த என் நண்பன் துடித்தான்... அழுதான்... புரண்டான்... வெறிபிடித்தவனைப் போலப் பொங்கியெழுந்தான்... அவனுடைய துயரத்தை வர்ணிக்க என்னல் முடியாது, வடிவழகி .. கடைசியில் நீதி கேட்டுக் கொழும்பிற்குப் போனன்... நீதி கிடைத்தது அந்திராசியையும் நீதி தவறிய தேசாதிபதியையும் பிடித்து வரும்படி கட்டளை பிறந்தது... பிடித்துவரும் வழியில் யானை அடித்து அந்திராசி மாண்டான்...

வடிவழகி : பாவி... நல்ல தண்டனை...

காராளன் : ஆனல், என் நண்பனின் வாழ்வில் இருள் சூழ்ந்தது, வடிவழகி. அன்புச் தங்கையையும் மைத்துனனையும் ஆசைக்காதலியையும் இழந்த என் நண்பன்...

வடிவழகி : ஆசைக்காதலியா...? புதுக்கதையாக இருக்கின்றதே...?

காராளன் : புதுக்கதையல்ல, வடிவழகி... பழைய கதைதான்... பூதத் தம்பிமுதலியாரின் தங்கை புவிநாயகவல்லியும் கயிலாசபிள்ளையும் ஒருவரிடம் ஒருவர் மனதைப் பறிகொடுத்திருந்தனர்... அழகவல்லி செந்தாமரை என்றால், புவிநாயகவல்லி றோஜா... அழகில் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்களல்லர்... பூதத்தம்பி முதலியாரும் புவிநாயக வல்லிக்கு ஏற்றவன் என் நண்பன் கயிலாசபிள்ளைதான் என்று முடிவு செய்திருந்தார்... எதிர்ப்பே இல்லாத காதல்... பூரண நிலவில் இரு வரும் கதைபேசி மகிழ்ந்தனர்... விடிந்ததே தெரியாமல் ஒருவர் மடி யில் ஒருவர் தலை சாய்த்துப் படுத்திருந்து தமது எதிர்கால இனிய வாழ்வு எப்படி அமைய வேண்டும் எனத் திட்டம் இட்டனர்... ஓரா யிரம் மனக்கோட்டைகள் கட்டினர்... பூங்காக்களிலே, ஆலயங்களிலே, வீட்டிலே... எங்கும் இவர்களின் இனிமையான சந்திப்புகளே... இன் பம் எங்கும் கொள்ளை போனது .. ஆண்டவனுக்கே இது பொறுக்கவே இல்லை... வடிவழகி, வாழ வேண்டிய வயதிலே ஓராயிரம் கனவு களை மனதிலே புதைத்தபடியே துர்மதிக்கொடியோன் அந்திராசி யின் சதிக்குப் பலியானாள், புவிநாயகி... என் உயிர் நண்பனின் இதயராணி... அவளது மறைவோடு கயிலாசபிள்ளையின் நிம்மதி அழிந்தது... மகிழ்வு விடை பெற்றது... இன்றும் குமுறும் எரிமலை யாக... நடைப்பிணமாக .. அவன் வாழ்கின்றான்... வடிவழகி, இப் போது கூறு... என் நண்பன் எப்படிப் பட்டவன்? இந்நிலையில் அவன் எப்படி எங்களை வரவேற்றிருக்க முடியும்...? ஏன் மௌன மாகிவிட்டாய்?... பேசு, வடிவழகி... உன்னால் பேச முடியாது... என் நண்பனின் சோகக் கதையைக் கேட்ட எவராலும் பேச முடியாது... உலகத்தின் துன்பமெல்லாம் அவன் மீது கவிந்ததுபோல இருக்கிறது... ஆண்டவன் கொடியவன், வடிவழகி...

வடிவழகி : உங்களின் நண்பரின் வாழ்விலே இப்படி ஒரு சோக காவியம் மறைந்திருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை... மிகுந்த கவலை யாக இருக்கிறது, சுவாமி ..

காராளன் : வா வடிவழகி, நேரமாகி விட்டது... இன்று முழுவதும் கயிலாசபிள்ளையோடு பேசவே இல்லை...

(காட்சி — 3)

இரக்கமற்ற இரவு, மாளிகையின் மேல் மாடி, கயிலாச பிள்ளையும் காராளமுதலியும்.

கயிலாசபிள்ளை : காராளா, உன் அறிவுரையைக் கேட்டு அழுவதா சிரிப்பதா என்றே எனக்குத் தெரியவில்லை. நான் கலியாணம் செய்துகொள் வதா? இந்தப் பிறவியில் அது நடக்காது... நண்பா, என் புவிநாயக

வல்லி இருந்த என் இதயத்தில் இன்னொருத்தியை ஏற்க என்னால் முடியாது. எங்கள் மனத்தளவில் நாங்கள் வாழ்ந்து முடித்து விட்டோம். அவளுடைய இனிய நினைவோடேயே நான் வாழ்ந்து விடுவேன். நான் மகிழ்ச்சியாகத்தான் இருக்கின்றேன்... எனக்கு எதுவித குறையுமில்லை...

காராளன் : குறையில்லை என்று கூறும்போதே உன் இதயம் அழுவதை என்னால் கேட்க முடிகிறது. நண்பா, அடுத்த பிறப்பென்பதில் எனக்கு எதுவித நம்பிக்கையும் இடையாது. நம்முன்னே சாகவசமாக இருக்கின்ற இப்பிறப்பைப் பூரணமாகத் தவறவிடாமல் அனுபவிக்க வேண்டும். ஒருவனுடைய வாழ்க்கை தன்மையிலே பூரணத்துவம் பெறுவதில்லை, நண்பா. நீ சகலதும் கற்றவன், உனக்கு நான் அறிவுரை கூறுவதா? ஒரு ஆணின் கவலைகளைப் பகிர்ந்து கொள்ள ஒருத்தி இடைத்து விட்டால் அதைவிடச் சொர்க்கம் வேறில்லை...

கயிலாசர் : அதைவிட சில வேளை நரகமும் வேறில்லை, காராளா?... வாழ்க்கை என்பது நீ நினைப்பதுபோல வில்லை. ஒரு பெண்ணைக் கலியாணம் செய்ததும் ஒருவனுக்குத் திருப்தியும் மகிழ்வும் ஏற்பட்டு விடாதப்பா. மனத்தை ஒரு குரங்கென்று சும்மாவா சொன்னார்கள்? திருப்தி என்பது மனிதனுக்கு இருந்தால். நண்பா, கொடியவன் அந்திராசி ஏன் என் தங்கை மீது ஆசை கொண்டான்? பிறன் ஒருவனின் மனைவி என்று தெரிந்தும் ஏன் ஆசை கொண்டான்?

காராளன் : காமுகனையும் நல்லதொரு கணவனையும் ஒப்பிடாதே, நண்பா.

கயிலாசர் : காமம்...? ...என் குடும்பத்தையே நாசமாக்கி விட்டதே? அழகவல்லி, என் உடன் பிறப்பே, வாழவேண்டிய வயதில் மறைந்து போனாயே? என் அருமை மைத்துனனே. கொலையாளியின் வாள் உங்கள் கழுத்தில் விழுகின்ற அந்தக் கணம், இந்தக் கையாலாகாத மைத்துனனை எண்ணினீர்களோ?... (அழுகின்றான்)... புவிநாயகவல்லி, என் உயிரே, உன்னையும் பறி கொடுத்து விட்டேனே ?

காராளன் : நண்பா, இதென்ன...?

கயிலாசர் : அழுவதைத் தவிர வேறு என்னதான் என்னால் செய்து விட முடியும் ? நண்பா. மாண்டவர் மீள்வதுண்டோ..?

காராளன் : (வியப்புடன்) மாண்டவர் மீள்வதா?...

கயிலாசர் : ஆமாம், நண்பா... மாண்டவர் ஒருவேளை மீள முடியுமோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது... நீ இங்கு வந்து பத்து நாட்களாகின்றன. நண்பா, ஒருவரைப்போல இருவர் இருக்க முடியுமா?

காராளன் : அப்படி இருக்க முடியும்... யசரையாவது...

கயிலாசர் : கண்டேன் என் புவிநாயகவல்லியைக் கண்டேன். அவளேதான் அதே வடிவம்... அதே சிரிப்பு... அவளேதான்...

காராளன் : உண்மையாகவா...? யார் அவள்? .. எங்கிருக்கிறள்..? இப் போதே அவளைக் கூட்டிவந்து உன் துயர் தீர்க்கின்றேன்... கூறு நண்பா கூறு யார் அவள்? யார்?..

கயிலாசர் : (சிரிக்கிறர்) அவசரக்காரா... அது உன்னுல் முடியாது. உன்னுல் ஒரு போதும் முடியாது... (சிரிக்கிறர்).. நான் ஒரு பைத்தியக்காரன், நண்பா. நீ போய் வா, உன் மனைவி காத் திருப்பாள்...

காராளன் : வருகின்றேன், நண்பா...
(கதவு திறந்து மூடும் ஒலி)

கயிலாசர் : ஆண்டவனே, ஏன் இப்படி என்னைச் சோதிக்கின்றுய் ? மனமே, நீ ஏன் இப்படி என்னை மீறிக் கொந்தளிக்கின்றுய்? எவ்வளவு துயர்களை எல்லாம் தாங்கித்தாங்கிப் பழகிப் போன உனக்கு இப்போது என்ன பிடித்தது? கடந்த பத்து நாட்களாக ஏன் என்னை நிம்மதியாக உறங்கவிடுகிறுயில்லை?... புவிநாயகவல்லி... என் புவிநாயகவல்லி. நீ நிம்மதியாக இந்த உலகத்தை விட்டே போய் விட்டாய்? நான் உயிரோடு இருந்தும் நடைப்பிணமாகத் தவிக்கின்றேன். அன்பே, நீ போன இடத்திற்கே என்னையும் அழைத்துச் செல். இங்கே நீ இல்லாத உலகத்தில் எனக்கு நிம்மதி... எதுவுமே இல்லை புவிநாயகவல்லி... (அழுகின்றுன்) ...

சின்னத்தம்பி : ஐயா... ஐயா நீங்கள் கலங்குவதா ? பெண்களைப் போலக் கண்ணீர் விடுவதா ?

கயிலாசர் : சின்னத்தம்பி, பெண்களிலும் பார்க்கப் பெருங் கோழையடா நான். புருஷன் இறந்ததும் என் தங்கை உடனேயே தன் உயிரை மாய்த்தாள். அண்ணனும், மச்சாளும் இறந்த துயர் பொறுக்காது தன் உயிரையும் பலிகொடுத்தாள் என் புவிநாயகவல்லி... அவர் கள் சாகப் பயப்படவில்லை. ஆனுல், எல்லாரையும் இழந்ததன் பின்பும் நான் உண்டு உடுத்து வாழ்கின்றேன்... நான் பெருங் கோழை (அழுகின்றுன்) சின்னத்தம்பி எனக்கு நானே பயப்படு கின்றேன். கடந்த பத்து நாட்களாக எனக்குள்ளே பெரும் பூதம் ஒன்று புகுந்து, என்னைப் படாதபாடு படுத்திவருகின்றது. அது என்னைத் தூண்டுவது நல்லதுக்கல்ல ..

சின்னத் : ஐயா நீங்கள் முன்புபோல இல்லை... நல்லாகச் சாப்பிடுவது கிடையாது... எதையோ பறிகொடுத்தவர் போல...

கயிலாசர் : உண்மை சின்னத்தம்பி, உண்மை. என் மைத்துனர் பூதத் தம்பியின் குடும்பம் ஏன் அழிந்தது ? (சற்று மௌனம்) ... அந்தி ராசியாலா ? இல்லை... அவனாலில்லை...

சின்னத் : ஐயா...... ?

கயிலாசர் : பிறன் மனைவியை இச்சித்த அவன் வெறியினால்தான் என் குடும்பம் அழிந்தது. பிறன் மனை... பிறன் மனை சின்னத்தம்பி. சின்னத்தம்பி, அதே தவறை நானும் செய்துவிடுவேனோ என்று பயப்படுகின்றேன்.

சின்னத் : ஐயா... ? நீங்கள் உத்தமர் தவறு செய்யமாட்டீர்கள்.

கயிலாசர் : சின்னத்தம்பி, என்னுள் ஓலமிடுகின்ற பூதம் என்னைப் பாழாக்கிப்போடுமோ என்று பயப்படுகின்றேன், சின்னத்தம்பி. என் ஆருயிர் நண்பன் காராளனின் மனைவி வடிவழகி, மறைந்துபோன என் புவிநாயகவல்லியைப் போலவே இருக்கின்றாள். உனக்குத் தெரியாது... இப்படியும் ஒரு ஒற்றுமையா ? ... சின்னத்தம்பி, வடிவழகியைக் காணும்போது என் புவிநாயகவல்லியைக் காணுமாப் போல இருக்கின்றது. அந்தப் பெண்ணை வெட்கமின்றிப் பல தடவைகள் உற்றும் பார்த்துவிட்டேன். அவள் என்னைப்பற்றி என்ன நினைத்தாளோ? என் குணத்தைச் சந்தேகித்தாளோ? சின்னத்தம்பி, அவளை அடிக்கடி பார்க்கவேண்டும் என்ற வெறி எனக்குள் தலைதூக்குகின்றது. சென்ற இரவு, ஐயோ, அதை எப்படிக் கூறுவேன் சின்னத்தம்பி, அவளைப் பார்க்கவேண்டும் போன்ற வெறி... என் அறையைவிட்டு வெளியே வந்து, என் நண்பனின் படுக்கை அறைவரை சென்றுவிட்டேன்... அறைக் கதவைத் தட்ட என் கைகள் உயர்ந்தும்விட்டன .. அப்போதுதான் என் அறிவும் விழித்துக்கொண்டது... திரும்பி என் அறைக்கு ஓடிவந்துவிட்டேன். நான் மனிதன்தானா ? ... (அழுகின்றான்)

சின்னத் : ஐயா...

கயிலாசர் : சின்னத்தம்பி, என்னையே என்னால் மன்னிக்கவே முடியவில்லை. நான் மனிதனல்ல மிருகம். எனக்கும் அந்த அந்திராசிக்கும் என்ன வித்தியாசம் ? ... சின்னத்தம்பி, நான் என்ன செய்வேன் ?

சின்னத் : ஐயா, அமைதியாகப் படுத்துத்தூங்க முயலுங்கள்... நாளை விடியும்போது புது மனிதனாக எழுவீர்கள்...

கயிலாசர் : சின்னத்தம்பி, எனக்குப் பயமாக இருக்கின்றது... சென்ற இரவுபோல இன்றும்... என் அறைக்கதவை வெளியிலேயே பூட்டிக்கொண்டு போ...

சின்னத் : சரி, ஐயா...

(கதவு சாத்திப் பூட்டப்படும் ஒலி)

கயிலாசர் : ஏ, கேடுகெட்ட மனமே உனக்கு நான் தீர்ப்பு வழங்கப் போகின்றேன். பிறன் மனை இச்சித்த உனக்கு நான் தீர்ப்பு வழங்கப் போகின்றேன்... என் உயிர் தங்கையே அழகவல்லி. நீ சென்ற இடத்திற்கே வருகின்றேன். அன்பே, புவிநாயகவல்லி, நீ எனக்காகக் காத்திருக்கின்ற அந்த உலகத்திற்கே வருகின்றேன்... தற்கொலை கோழைகளின் ஆயுதம்... ஆனால், நான் இப்போது உனக்கு வழங்கப்போவது பிறன் மனை இச்சித்த ஒருவனுக்கு வழங்குகின்ற தீர்ப்பு. நண்பா, காராளா, என்னை மன்னித்துக்கொள். சின்னத்தம்பி,... நீயுந்தான்... (கரிக்குருவி ஒன்று அடி வானில் அலறுகின்றது)

(திரை)


எமது நாட்டை எதிர்நோக்கும் பிரச்சனைகள் !

★ அன்னியச் செலாவணிப் பற்றுக்குறை
★ அதிகரித்துவரும் வேலையில்லாத் திண்டாட்டம்
★ வீழ்ச்சியடையும் ஏற்றுமதி வருமானம்
★ உலகச் சந்தையில் நாளாந்தம் அதிகரித்துவரும் விலைகள்

இவற்றைத் தீர்க்க ஐந்தாண்டுத் திட்டம் கூறும் யோசனைகள்.

★ உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்குவதின் மூலம் அன்னியச் செலாவணி வீண் விரயத்தைத் தடுத்தல்
★ வேலைவாய்ப்புக்கள் நிறையவுள்ள வேளாண்மைத் துறையிலும் அதனோடு சம்பந்தப்பட்ட துறைகளிலும் ஈடுபடுமாறு மக்களைத் தயார்ப்படுத்தல்.
★ ஏற்றுமதி வர்த்தகத்தைப் பன்முகப்படுத்தல்.
★ உணவுப் பொருட்களுக்கும் உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்கும் பிற நாட்டை எதிர்பாராமல் உள்நாட்டில் உற்பத்தியைப் பெருக்கல்.

எமது பிரதமர் கூறும் ஆலோசனைகள்:-

★ கடுமையான உழைப்பு
★ "வெள்ளை வேட்டி" உத்தியோகங்களையே நாடும் நிலையில் தீவிர மனமாற்றம்.
★ நாட்டுப் பற்று.

# உற்பத்தி: ஒரு கண்ணோட்டம்

— இளங்கீரன்

*[ "இளங்கீரன்" என்னும் புனைபெயருக்குள்ளே மறைந்திருக்கும் எழுத்தாளர் ஈழத்தின் பல அபிமான வாசகர்களுக்குச் சிறந்த நாவலிலக்கிய ஆசிரியராகவே அறிமுகமாகியுள்ளார். ஈழத்தின் நாவலிலக்கியத்தின் முன்னோடிகளுள் ஒருவரான இவர் ஆழ்ந்த இலக்கியப் பரிச்சயமும், அதேவேளையில் யதார்த்த நோக்குடன் சமுதாயத்தை நோக்குகின்ற தீட்சண்யமான பார்வையும் உடையவர் என்பதை அவரது இலக்கியச் சிற்றாய்வுகளிலிருந்தும் "தொழிலாளி" பத்திரிகையில் அவர் ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் அவர் எழுதிய கட்டுரைகள் பலவற்றிலுமிருந்து கண்டு தெளியலாம். இலக்கிய விசாரத்திலிருந்து சற்றே பிறழ்ந்து இன்று நாட்டை எதிர்நோக்கும் உணவு நெருக்கடி குறித்து அவர் தரும் கருத்துக்கள் ஊன்றி அவதானிக்கக் கூடியவையாகும். இக்கட்டுரை பலருக்கும் பயன்தரும் என்பது எமது நம்பிக்கை.]*

— ஆ–ர்—

நாவலிலக்கியத் துறையிலும், இலக்கிய ஆக்கங்களிலும் எனது எழுத்துலக வாழ்க்கையில் பெரும் பகுதியைச் செலவிட்ட நான் கலை இலக்கியத்தைப்பற்றி எழுதுவதைவிட்டு பொருளாதாரத்தையும் கல்வியையும்பற்றி எழுதுவது பொருத்தமுடையதாக இல்லை என்று பலர் எண்ணக்கூடும். ஆனால் உணர்வும் பொறுப்புமுள்ள ஒரு எழுத்தாளன் தனது நாட்டின் வளர்ச்சியிலும் வீழ்ச்சியிலும் அக்கறை செலுத்தாமல் இதிலிருந்து ஒதுங்கிக் கொள்ளவோ, தப்பித்துக் கொள்ளவோ முடியாது. அவன் இலக்கியம் படைப்பதோடுமட்டும் நின்றுவிடாமல் நாட்டின் அரசியல், பொருளாதார நிலைமைகளைப் பற்றிக் கவனம் செலுத்தியே ஆகவேண்டும். அதிலும் நாட்டின் இன்றைய நிலையில் இதுதவிர்க்க முடியாதது. இத்தகைய உந்துதலே இக்கட்டுரையின் ஆக்கத்துக்குத் தோற்றுவாயெனலாம்.

இன்று நாடு கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கிறது. பொருட்களின் தட்டுப்பாட்டாலும், விலைவாசி வீக்கத்தினாலும் மக்கள் அவதிப்படுகின்றனர். எந்த ஒருவிதமான செழிப்பையும், மகிழ்ச்சியையும் காணமுடியவில்லை.

ஏன் இந்த நிலைமை?

இரண்டு காரணங்கள்.

ஒன்று: கடந்த கால அந்நியராட்சி

மற்றது: 1948-க்குப் பிறகு பதவிக்கு வந்த அரசாங்கங்கள் கடைப்பிடித்த கொள்கைகளும் மேற்கொண்ட நடவடிக்கைகளும்.

முதலாவது காரணம் :

எந்த ஓர் ஏகாதிபத்திய அரசும், தான் அடிமைப்படுத்தி ஆளும் காலனி நாடுகளைச் சுரண்டிக் கொள்ளையடிக்கும் நோக்கத்துடனேயே அக் காலனி நாடுகளின் அரசியல், பொருளாதார, கல்வித்துறைகளைச் செயல் படுத்தும். இலங்கையை அடிமைப்படுத்தியிருந்த பிரித்தானிய ஏகாதிபத்திய அரசும் இதனையே செய்தது. தனது உற்பத்திப் பொருட்களுக்குச் சந்தை யாகவும், மூலப்பொருட்களையும் மனித உழைப்பால் உருவாகும் செல்வத் தையும் சுரண்டிச் செல்வதற்கான ஒரு களஞ்சியமாகவுமே நமது நாட்டை ஆக்கிவைத்திருந்தது. இந்த நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டுத்தான் இந்நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான விவசாய கைத்தொழில் வளர்ச் சிக்கு ஆக்கபூர்வமான எந்தவொரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. எனவே, பிரித்தானிய ஏகாதிபத்திய அரசின் காலத்திலேயே நமது நாடு உற்பத்தியில் மிகவும் பின்தங்கி, பொருளாதாரத்தில் தன் சுயபலத்தை இழந்து விட்டிருந்ததோடு, உணவுப் பொருட்களுக்கும் ஏனைய பாவனைப் பொருட்களுக்கும் பிறநாடுகளையே நம்பியிருக்கும் கேவலமான நிலைமைக் குள்ளாகியிருந்தது.

இரண்டாவது காரணம் :

இந்த அவல நிலையைப் போக்க 1948 – லிருந்தே அதாவது சுதந்தி ரம் பெற்றதாகக் கூறப்பட்ட காலத்திலிருந்தே உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். பிரித்தானிய ஏகாதிபத்திய அரசு விட்டுச்சென்ற அரசியல், பொருளாதார, கல்வி அமைப்புகளைத் தகர்த்தெறிந்துவிட்டு நாட் டின் அபிவிருத்திக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் அத்திவாரமிடக் கூடிய புரட்சிகரமான நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். ஆனால் 1948 லிருந்து 1970 மே வரை பதவிக்குவந்த அரசாங்கங்கள் எதுவும் தனது பதவியைப் பாதுகாத்துக் கொள்ளுவதையும், திரும்பவும் அதிகாரத்திற்கு வருவதையும் குறியாகக் கொண்டு இயங்கி வந்தனவே தவிர, நாட்டின தும் மக்களினதும் நலன்கருதி, தீர்க்க தரிசனத்தோடு மேற்கூறிய நடவடிக் கைகளை எடுக்கவுமில்லை; அதனைப் பற்றிச் சிந்திக்கவுமில்லை.

எனவே இன்றைய அவலநிலைக்கு பிரித்தானிய அரசு மட்டுமல்ல, அதனைத் தொடர்ந்து பதவிக்குவந்த - நாட்டை வழி நடத்திச் சென்ற அரசாங்கங்களும், தலைவர்களும் கூட ஒரு காரணமாகும். இதனைப் பிரத மர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவே பல தடவை குறிப்பிட்டிருக்கிறார்.

அரசாங்கத்தின் திட்டங்கள் :

பிரதமர் இதனைக் குறிப்பிடுவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. நாடு இந்நெருக்கடியிலிருந்து மீள்வதற்கும், பொருளாதாரத்தில் சுயபலத்தோடு தன்காலில் நிற்பதற்கும் தனது அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத் துள்ளதாயும், இதற்குச் சான்றாக புதிய அரசியல் சட்டம், ஐந்தாண்டுத் திட்டம், காணி உச்சவரம்புச் சட்டம், புதிய கல்வித்திட்டம் போன்ற பல

திட்டங்களையும் உருவாக்கி அமுல் நடத்தி வருவதையும் சுட்டிக் காட்டுகிறார். அத்துடன் உணவு உற்பத்தியில் தீவிரமாக ஈடுபடுமாறு அரசாங்கம் மக்களைத் தூண்டியும் வருகிறது.

ஆனால் அரசாங்கத்தின் இத்திட்டங்களும் முயற்சிகளும் வெற்றிகரமாக நிறைவேறுமா என்பதுதான் கேள்வி. ஏனெனில், இன்றைய அவல நிலைக்கு எவை காரணிகளாக இருந்தனவோ அவை இன்னும் முற்றாகத் துடைத்தெறியப்படவில்லை.

உணவு உற்பத்தி :

உணவு உற்பத்திக்கு அடிப்படைத் தேவைகள் மூன்று: நிலம், நீர், உழைப்புச்சக்தி. இம்மூன்றுக்கும் நமது நாட்டில் குறைவில்லை. ஆனால் இம் மூன்றும் சரியான முறையில் - தேவையைக் கருத்தில் கொண்டு பயன் படுத்தப்படவில்லை.

நமது நிலம் விவசாயத்திற்கு ஏற்ற செழிப்பான நிலம். ஆயினும் விவசாயத்திற்குப் பயன் படுத்தக்கூடிய லட்சக்கணக்கான ஏக்கர் நிலம் இன்னும் தரிசாகக் கிடக்கிறது. இது தவிர, கழனிகளாக்கக் கூடிய லட்சக் கணக்கான ஏக்கர் காடுகள் வேறு உள்ளன. எனவே நிலப்பிரச்சினைக்கே இடமில்லை.

அடுத்தது நீர். நமது நாட்டில் விவசாயத்திற்குத் தேவையான நீரை வழங்கக்கூடிய நீண்ட ஆறுகளும் ஏராளமான குளங்களும் உள்ளன. ஆனால் இந்த ஆற்றுநீரின் பெரும்பகுதி ஒரு பயனுமில்லாமல் வீணாகின்றது. வெள்ளையர் ஆட்சிக்கு முன்பு, நமது மலையுச்சிகளில் காடுகள் நிறைந்திருந்தன. எனவே, பெய்யும் மழைநீர் ஒரேயடியாகக் கீழே பாயாமல், அடர்த்தியான மரவேர்களில் தங்கி ஒரே சீராக ஆறுகளில் விழுந்து கொண்டிருந்தது. ஏகாதிபத்திய அரசின் காலத்தில் வெள்ளையர்கள் இத் தோட்டங்களை உருவாக்குவதற்காக மலையுச்சிகளில் உள்ள காடுகளையெல்லாம் அழித்து விட்டதனால், மழைநீர் தங்கி நின்று சீராக விழாமல் உச்சியிலிருந்து கட்டுமீறி ஒரேயடியாகப் பாய்ந்து ஆறுகளை நிரப்புகின்றன. இவ்வாறு பாயும் நீர், ஆறுகளை வெறுமனே நிரப்பவில்லை. மலை மண்ணையும், வண்டலையும் வாரிக்கொண்டு வருகின்றன. இதனால் காலப்போக்கில் ஆறுகள் ஆழம் குறைந்து, மழைநீரை உள்ளடக்க முடியாமல் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. இதனால் மூன்று பெரும் நட்டங்கள் ஏற்படுகின்றன ஒன்று: வெள்ளத்தால் ஏற்படும் சேதம். இரண்டு: ஏராளமான நீர் ஒருபயனுமில்லாமல் கடலில்போய் விழுகிறது, மூன்று: பசளைத் தன்மையுள்ள மண் வீணாக ஆறுகளில் அமிழ்ந்து போகிறது.

இதனைத் தடுக்க வேண்டுமானால் முதலில் மலை உச்சிகளில் ஓரளவுக்காயினும் திரும்பவும் காடுகளை வளர்க்க வேண்டும். வெள்ளையருக்குச் சொந்தமான தோட்டங்களை எடுப்பதன் மூலமே இதனைச் செய்ய முடி

யும். வெள்ளையரின் சுரண்டலை ஒழிப்பதற்காக மட்டுமல்லாமல், விவசாய நலன் கருதியும் இத்தோட்டங்களைத் தேசிய மயமாக்க வேண்டும்.

இரண்டாவதாக, ஆறுகளை ஆழமாக்குவதோடு, பராக்கிரபாகு மன்னன் கூறியதுபோல ஒரு துளி ஆற்றுநீர்கூடக் கடலில்போய் விழாதபடி அணைக்கட்டுகள் நிர்மாணித்து, நீரைத் தேக்கி வைத்து தேவையான காலங்களில் பயன்படுத்த வேண்டும். அத்துடன் கிளை வாய்க்கால்களைத் தோண்டி அவற்றின் மூலம் ஆற்றுநீரை வரட்சியான பகுதிகளுக்கும் திசை திருப்ப வேண்டும். அதேபோன்று தூர்ந்துபோய்க் கிடக்கும் குளங்களையெல்லாம், மாரிகாலத்தில் பெய்யும் மழைநீரைக் கூடியவரை தேக்கி வைக்கத்தக்க முறையில் புனரமைக்க வேண்டும். மூன்றாவதாக, ஒருவேலையுமின்றி வீணடிக்கப்படும் லட்சக்கணக்கான இளைஞர்களின் உழைப்பு சக்தி ஒருமுனைப்படுத்தப்பட்டு உணவு உற்பத்திக்குப் பூரணமாகப் பாய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

உடல் உழைப்பு:

தொடர்ந்தும் இந்நாட்டில் இருந்துவரும் பெருங் குறைபாடுகளில் ஒன்று உடல் உழைப்பில் ஆர்வமில்லாமை. ஏகாதிபத்திய அரசு இந்நாட்டிற்கு இழைத்துவிட்டுச் சென்ற பெருந்தீங்குகளில் இதுவும் அடங்கும். உடல் உழைப்பில் ஆர்வத்தைக் குன்றச்செய்து உத்தியோக மனோபாவத்தை உருவாக்கிவிட்டது. இதற்கு அந்த அரசு அமுல் நடத்திய கல்வி முறையும் உறுதுணையாக இருந்தது.

உத்தியோகத்தருக்கு - ஓர் அரசாங்க அதிகாரிக்கு - அளிக்கப்படும் அந்தஸ்து, கௌரவம், மதிப்பு, மரியாதை, சம்பளம், சலுகைகள் போன்றவை உணவு உற்பத்தியில் ஈடுபடும் உழவனுக்கோ, கைத்தொழில் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளிக்கோ அளிக்கப்படாததால் உடலை வருத்திப் பாடுபடும் உற்பத்தித்துறையில் பெரும்பாலோர் ஈடுபடவில்லை. முடிந்தவரை உத்தியோகத்தையே நாடினர். சுதந்திரத்திற்குப் பிறகும் இதே நிலைமை தான் தொடர்ந்து இருந்து வந்தது. உணவு நெருக்கடி உச்சக்கட்டத்தை எட்டியுள்ள இன்றைய நிலையிலும்கூட இதில் பெரும் மாற்றம் ஏற்படவில்லை. நாட்டின் மொத்த சனத்தொகையில் நான்கில் ஒரு பகுதி மக்களுக்கும் குறைவானோர்தான் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் உற்பத்தி நாட்டின் தேவையைப் பூர்த்திசெய்ய முடியாதிருப்பதினால்தான் உணவுப் பொருட்களுக்கும் ஏனைய பாவனைப் பொருட்களுக்கும் வெளிநாடுகளைக் கெஞ்சவேண்டிய இழிநிலை ஏற்பட்டுள்ளது.

இந்தக் கேடுகெட்ட நிலைமை தலைகீழாக மாற்றப்பட வேண்டும். இதற்கு முதல் நிபந்தனையாக உற்பத்தியில் ஈடுபடும் உழைப்பாளிக்குத் தான் தலைமை இடமும், கௌரவமும், மதிப்பும், மரியாதையும் அளிக்கப்படவேண்டும். உற்பத்தியில் ஆர்வத்தோடும், ஊக்கத்தோடும் ஈடுபடுவதற்கு முட்டுக்கட்டைகளாக இருப்பவை அனைத்தும் தயவு தாட்சண்யமின்றித்

தூக்கியெறியப்பட வேண்டும். உழைப்பாளிக்கு, அவனுடைய வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய அளவுக்கு வருமானம் இருக்கவேண்டும். தனது உழைப்பிலும் வாழ்விலும் ருசியும் நம்பிக்கையும் ஏற்படுவதற்கான சகலவற்றையும் செய்தல் வேண்டும்.

**கல்வியும் உற்பத்தியும் :**

அடுத்ததாக, இந்நாட்டின் கல்வி முறையை உற்பத்தியோடு இணைக்க வேண்டும். இது காலவரை இருந்துவந்த படுபிற்போக்கான-உளுத்துப்போன காலனித்துவக் கல்விமுறை வருடந்தோறும் கோடிக்கணக்கான ரூபாயையும் காலத்தையும், சக்தியையும் விழுங்கி இலட்சக்கணக்கான இளைஞர்களை நாசப் படுத்திவிட்டது. வேலையில்லாத் திண்டாட்டத்தையும், உடல் உழைப்பில் வெறுப்பையும் மனவிரக்தியையும் உண்டுபண்ணியதைத் தவிர வேறு உருப் படியான எந்தப் பயனையும் அளிக்கவில்லை.

இதைக் கருத்தில்கொண்டுதான் புதிய கல்வித் திட்டம் உருவாக்கப் பட்டது என்று அரசாங்கம் சொல்கிறது. இது எந்தளவுக்கு உற்பத்தியுடன் இணைக்கப்பட்டுள்ளது என்பது விவாதத்திற்குரியதாகும். இப்போதுகூட மாணவர்களின் முழுக்காலமும், நேரமும், சக்தியும் பாடசாலைகளினதும் கல்லூரிகளினதும் அறைகளில்தான் செலவிடப்படுகிறது. இந்த நிலைமை மாற்றப்பட்டு குறிப்பிட்ட காலமும் நேரமும் வயல்களிலும் தொழிற்சாலை களிலும் செலவிடக்கூடியதாயிருத்தல் வேண்டும். ஆசிரியர்களைப் பொறுத்த வரையிலும்கூட இதற்கான மாற்றங்களைச் செய்தல் வேண்டும். அதாவது ஏட்டுப்படிப்பை முடித்தவர்களை மட்டுமின்றி, விவசாயத்திலும் கைத்தொழி லிலும் அநுபவமும் நிபுணத்துவமும் உள்ளவர்களையும் ஆசிரியர்களாக நிய மித்தல் வேண்டும். பாடத்திட்டங்கள் பெரும்பாலும் உற்பத்தியைப் பற்றிய தாகவும், அதில் ஆர்வம் ஏற்படக்கூடியதாயும் அமைதல் வேண்டும்.

இன்றுகூட இந்நாட்டில் கல்விக்காக 60 கோடி ரூபாய்க்குமேல் வருடந் தோறும் செலவழிக்கப்படுகிறது. 1 லட்சத்து 15 ஆயிரம் ஆசிரியர்கள் உட் பட, படிக்கும் மாணவர்கள், கல்வி அமைச்சு, அதன் திணைக்கள ஊழியர் கள் என்றவகையில் மொத்தத்தில் 32 லட்சத்திற்கும் மேற்பட்டோர் இத்துறையில் ஈடுபட்டுள்ளனர். ஆரம்ப வகுப்பிலிருந்து பல்கலைக்கழகப் படிப்பையும் சேர்த்து ஒரு சராசரிக் கணக்கில் பார்த்தால் 12 வருடங்கள் செலவழிக்கப்படுகின்றன. இவ்வளவு பெருந்தொகைப் பணமும், மனித சக்தியும், காலமும் பொறுப்புடன் – நாட்டின் வளத்தைப் பெருக்கும் வகை யில் – பயன்படாவிட்டால் அது பெரும் தேசியக் குற்றமாகும். சோஷலிசக் கல்வி என்பது உற்பத்தியையும், பொருளாதார அபிவிருத்தியையும் அவற் றிற்கு ஆதாரமான விஞ்ஞானத் தொழில் நுட்ப அறிவையும் அடிப்படை யாகக் கொண்டது, ஆகவே கல்விக்காகச் செலவிடும் பணம் இதைக் குறி யாகக் கொண்டிருத்தல் அவசியம், கல்வி அமைச்சு அதிகாரிகள், அதன் திணைக்கள ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரிடம் தேசிய நலன்கருதிய நோக்கமும், சோஷலிஸ உணர்வும் அதைப்பற்றிய ஞானமும் இருந்தால்தான் இந்த இலட்சியம் கைகூட முடியும்.

வேலைவாய்ப்புகளும் உற்பத்தியும் :

பாடசாலை – பல்கலைக்கழகப் படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறும் மாணவர்களுக்கு உற்பத்தித் துறையில்தான் வேலைவாய்ப்புகளை விஸ்தரிக்க வேண்டும். படித்த வாலிபர்களுக்கு அரசாங்கத் திணைக்களகங்களில் பேனு பிடிக்கும் வேலையைக் கொடுத்துவிட்டு அரை லட்சம் பேருக்கு வேலை கொடுத்திருக்கிறோம் என்று புள்ளி விபரத்தைக் காட்டிப் பெருமை பேசுவதில் எதுவித பயனுமில்லை.

தேசியச் செல்வம் என்பது மூலவளங்களும் உற்பத்தித் துறையில் உழைப்பதால் வரும் பொருள் வளமும்தான். இந்தச் செல்வத்தைக் கொண்டே சகல அரசாங்கக் காரியங்களும் நடக்கின்றன. இந்தச் செல்வத்திலிருந்தே கல்விக்கும் செலவழிக்கப்படுகிறது. வேறு வார்த்தையில் சொல்லப்போனால் ஒரு மாணவனுக்கு ஆரம்பப் பாடசாலையிலிருந்து பல்கலைக் கழகம்வரை செலவழிக்கப்படுவது உற்பத்தியில் ஈடுபட்டுள்ள உழைப்பாளி மக்களின் பணம்தான். படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறும் மாணவனுக்கு உத்தியோகம் கொடுப்பதன் மூலம் அவன் ஓய்வு பெறும் வரை சம்பளமும், ஓய்வின்போது பென்சனும், அவன் இறந்த பிறகு குடும்பத்திற்குப் பென்சனும் அளிக்கப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் ஆறுவயதிலிருந்து அவன் இறக்கும் வரையும் பின்னரும் கூட (குடும்பப் பென்சன்) உழைப்பாளியின் பணம்தான் செலவாகிறது. அதே வேளையில் உத்தியோகத்தில் இருக்கும் அவனால் தேசத்திற்கு ஒரு வருமானமும் இல்லை.

இதற்காக நிர்வாக சேவைக்கு ஆட்களைச் சேர்ப்பது பிழை என்று கூறவில்லை. இது சிக்கனமாக இருக்க வேண்டும். வெறுமனே அரசியல் இலாபம் கருதியோ, அமைச்சர்கள், தே. பே. உறுப்பினர்கள், உயர்தர அதிகாரிகள் ஆகியோரின் சொந்த நன்மை, சுயலாபம் கருதியோ நிர்வாகத் துறையில் ஆட்களை அதிகரித்துக்கொண்டு போனால் இந்தச் சிறிய நாட்டின் எந்த அரசாங்கமும் இந்தப்பளுவைத் தாங்க முடியாது. இந்நாட்டின் மொத்த வருவாயில் மூன்றில் இரண்டு பங்கு சம்பளமாகப் போகிறது என்றும், இதனால் அபிவிருத்திக்கும், அத்தியாவசியத் தேவைகளுக்கும் பணம் போதாமலிருக்கிறது என்றும் நிதியமைச்சர் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டியிருப்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

தவிரவும் ஆட்களை அதிகரிப்பதன் மூலம் வேலைத்திறனும் மந்தப் படுத்தப்படுகிறது. ஒருவர் செய்யக்கூடிய வேலை இருவரால் செய்யப் படுகிறது. எனவே இந்த மாதிரியான வீண் விரயத்தைத் தடுப்பதற்கும் அரசாங்கச் செலவைச் சிக்கனப்படுத்துவதற்கும் தேவையான அளவுக்குத் தான் ஆட்களைச் சேர்க்க வேண்டும். உற்பத்தித் துறையில் வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலமே இதனைச் செய்ய முடியும்.

பெண்களின் உழைப்பு :

நமது நாட்டின் மொத்த சனத்தொகையில் கிட்டத்தட்ட அரைவாசிப் பேர் பெண்களாவர். அவர்களில் பெரும்பாலோர் குடும்

பப் பெண்கள் என்ற வகையில் சும்மா இருந்து சாப்பிடுகிறவர்கள். இந்த நிலைமையையும் மாற்ற வேண்டும். ஒரு நாட்டின் உற்பத்திப் பெருக்கத்திற்கும், செல்வ விருத்திக்கும் ஆண்கள் மட்டும் உழைத்தால் போதாது. பெண்களும் அத்துறையில் ஈடுபடுவது மிக அவசியமாகும்; சமூகரீதியில் பெண்களின் அடிமைத் தளைகள் நீங்கி விடுதலை பெறுவதற்கும் இது வழிகோலும். எனவே, பெண்ணைப் பற்றிய பழைய பத்தாம் பசலிக் கொள்கைகளையும், உளுத்துப்போன கட்டுப்பாடுகளையும் தகர்த்தெறிந்துவிட்டு அவர்களையும் உடல் உழைப்பில் ஈடுபடச் செய்ய வேண்டும்.

நிர்வாகமும் உற்பத்தியும்

உற்பத்திப் பெருக்கத்திற்கு அரசாங்கம் பெரும் பெரும் திட்டங்களைப் போட்டால் மட்டும் போதாது. நிர்வாகத் துறையும் அதனை நிறைவேற்றத் தீவிரமாக முனைய வேண்டும். அரசாங்க அதிகாரிகளும் ஊழியர்களும் தமது அதிகாரவர்க்க மனப்பான்மையையும், அலட்சியப் போக்கையும் முற்றாக விட்டொழித்து உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளையும், தொழிலாளர்களையும் மதித்து அவர்களுக்கு உறுதுணையாக நின்று செயல்பட வேண்டும். பழைய ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில் "சிவப்பு நாடா" முறையைக் கையாண்டதுபோல் இழுத்தடிக்காமல் அவர்களின் அலுவல்களை விரைவாகச் செய்து முடித்துக் கொடுக்க வேண்டும், பிரச்சினைகளுக்கும் விரைவாகத் தீர்வுகாண வேண்டும்.

இதுமட்டுமல்ல, உற்பத்தி சம்பந்தப்பட்ட சகல விஷயங்களையும் தமது அலுவலக அறைகளிலிருந்து திட்டம் போடாமல், ஏட்டறிவையும், புள்ளி விபரங்களையும் கூறிக்கொண்டிருக்காமல் உற்பத்தியில் நேரடியாகப் பங்கெடுக்கும் விவசாயிகளினதும், தொழிலாளர்களினதும் அநுபவங்களையும் ஆலோசனைகளையும் பெறவேண்டும். உற்பத்தி சம்பந்தப்பட்ட ஆராய்வுகள், கலந்துரையாடல்கள், விவாதங்கள் ஆகியன அமைச்சர்கள், அதிகாரிகள் மட்டத்திலேயே நிற்காமல் உழைப்பாளிகள் மட்டத்திலேயும் நடைபெறல் வேண்டும்.

தீர்வுக்கு வழி :

சோஷலிஸம், ஐந்தாண்டுத் திட்டம், உற்பத்திப் பெருக்கம் என்றெல்லாம் வாயால் உச்சரித்துக் கொண்டிருப்பதால் நாடு வளம்பெற்றிட முடியாது. பொருளாதார நெருக்கடியையும் தீர்த்துவிட முடியாது.

நூற்றாண்டு காலமாக அந்நிய ஏகாதிபத்தியத்தினால் அடிமைப்படுத்தப்பட்டு அதன் சுரண்டலுக்கும் ஆதிக்கத்திற்கும் இலக்காகி, பொருளாதாரத்திலும் ஏனைய துறைகளிலும் மிகவும் பின்தங்கியிருக்கும் நமது நாடு அபிவிருத்தியும் முன்னேற்றமும் அடைய வேண்டுமானால் சோஷலிஸம் ஒன்றுதான் வழி என்பதை நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். பொருளா

தார நெருக்கடி, உற்பத்தியில் இடர்ப்பாடு, பஞ்சம் என்பன எல்லாம் முதலாளித்துவ அமைப்பின் நோய்களாகும். உண்மையான சோஷலிஸத்தின்கீழ் இந்த வார்த்தைகளுக்கே இடமில்லை. சோஷலிஸ நாடுகள் இதற்குக் கண்கூடான உதாரணங்கள். ஒரிருவேளைகளில் இயற்கை விளைவுகளினால் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர, பொதுவாக அந்நாடுகள் இப்பிரச்சனைகளுக்குத் தீர்வுகண்டு முன்னேறியுள்ளன. இன்றைய அரசாங்கமும் சோஷலிசந்தான் தனது குறிக்கோள் என்று கூறுகிறது. ஆனால் சோஷலிச நிர்மாணத்திற்குத் தேவையான அடிப்படைத் தேவைகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.

அதாவது இந்நாட்டின் பொருளாதார நிலை ஊற்றுக்களில் ஏகாதிபத்தியவாதிகளுக்கு இருக்கும் பிடி இன்னும் அகற்றப்படவில்லை.

உயர் மட்டங்களில் உள்ள சோஷஸலித்திற்கு எதிரான பிற்போக்குச் சக்திகள் இன்னும் வெளியேற்றப்படவில்லை.

இலஞ்சமும் ஊழல்களும் ஒழிக்கப்படவில்லை.

தியாகத்தைப் பற்றியும் சிக்கனத்தைப் பற்றியும் பெரிதாகப் பேசப்படுகிறதே தவிர, பேசுவோரிடையே அவை காணப்படவில்லை.

உற்பத்தியில் ஈடுபடும் உழைப்பாளிகள் இன்னும் தலைமை இடத்தைப் பெறவில்லை.

மக்களின் தேசிய உணர்ச்சியைத் தட்டி எழுப்பி, எழுச்சியை ஊட்டி அவர்களின் ஒத்துழைப்பையும், ஆதரவையும் பெறத்தக்க எந்தவித முயற்சியும் எடுக்கப்படவில்லை.

இவைபோன்ற இன்னும் பல சோஷலிஸத்திற்குத் தடையாக இருக்கின்றன.

இத்தடைகள் நீக்கப்படாதவரை ஐந்தாண்டுத் திட்டம் உட்பட உணவு உற்பத்தியிலும் தன்னிறைவு காண்பது முடியாததாகும்.

சோஷலிஸப் பாதையை நோக்கி அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் :-

★ வருமான உச்ச வரம்பு

★ காணி உச்ச வரம்பு

★ வீட்டுடைமை உச்ச வரம்பு

# கரைச்சிப் பிரிவின் குடிசனச் செறிவும் அதன் குண இயல்புகளும்

— திரு. இ. யோகநாதன் C. A. S. —

கரைச்சிப் பிரிவு வன்னி நாட்டின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. வடக்கே யாழ்குடா நாட்டையும், கிழக்கே திருகோணமலை மாவட்டத்தையும், தெற்கே அருவியாற்றையும், மேற்கே மன்னார் மாவட்டத்தையும் எல்லையாகவுடைய வன்னி நாட்டின் விஸ்தீரணம் ஏறத்தாழ 2000 சதுர மைல்களாகும். பின்வரும் பாடல் வன்னிநாட்டின் எல்லைகளை எடுத்துக்காட்டுகின்றது.

"எல்லை வடக்கில் எழில்யாழ் பரவுகடல்
பல்லோர் புகழருவி தெற்கெல்லை — நல்லதிருக்
கோணமலை கீழ்பால் கேதீச்சரம் மேற்கில்
மாணத்திகழ் வன்னி நாடு."

இத்தகைய வன்னிநாட்டின் வடக்குப் பாகமாகக் கரைச்சிப் பிரிவு அமைந்திருக்கிறது. வடக்கே ஆனையிறவுக்கும் தெற்கே முருகண்டிப் பிள்ளையார் கோவிலுக்கும் இடையில் அமைந்திருக்கிறது. இதன் விஸ்தீரணம் 177 $\frac{3}{10}$ சதுர மைல்களாகும். இப்பிரிவில் வாழ்கின்ற மக்களை இரு பிரிவினராக வகுக்கலாம்.

1. தொன்று தொட்டு வசித்து வந்த பழம் கிராம வாசிகள்.
2. அண்மைக் காலத்தில் குடியேறிய குடியேற்ற வாசிகள்.

புண்ணைநீராவி, கலவெட்டித்திடல், புளியம்பொக்கணை, பன்றிசுட்டான், கண்டாவளை, தட்டுவன்கொட்டி, ஆனையிறவு, குஞ்சுப்பரந்தன் போன்றவை புராதன கிராமங்களாகும். இங்கு வாழுகின்ற மக்கள் பண்டுதொட்டு இக்கிராமங்களில் வாழ்ந்துவந்திருக்கிறார்கள் எனக் கூறலாமேயொழிய எப்பொழுது குடியேறினார்களெனவோ எத்தகைய வாழ்க்கை வாழ்ந்தார்களெனவோ (இப்பகுதியின் வரலாற்றைக் கூறுகின்ற நூல்கள் இன்மையால்) திட்டவட்டமாகக் கூற முடியாமல் இருக்கின்றது. பழங்குடி என்ற காரணத்தினால் இவர்களிடம் சில விசேட குண இயல்புகள் இருப்பதை உணரக்கூடியதாக இருக்கின்றது. பொதுவாக நோக்கும்பொழுது யாழ்குடாநாட்டில் வாழுகின்ற மக்களுக்கும் இவர்களுக்கும் இடையில் சில விபரங்களில் வேறுபாடுகளைக் காணலாமே ஒழிய அடிப்படை வேறுபாடுகளைக் காணல் அரிது

மேற் கூறப்பட்ட புராதன கிராமங்கள் பரவு கடலோரமாக அமைந்திருப்பது ஒரு விசேட பண்பாகக் கவனிக்கற்பாலது. இதிலிருந்து தற்கால போக்குவரத்து வசதிகள் ஏற்படாத ஓர் காலத்தில் (கடற் பிரயாணம் செய்து மனிதர் வாழ்ந்த காலத்தில்) இக்குடியேற்றம் ஏற்பட்டிருக்கலாம் எனக்கருதக்கூடியதாக இருக்கின்றது.

இப்புராதன கிராமங்களில் மற்றுமொரு இயல்பு என்னவென்றால் இக்கிராமங்களில் வாழுகின்ற பெரும்பாலானோர் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த மீசாலை, கச்சாய், தனங்கிளப்பு ஆகிய இன்னோரன்ன கிராமங்களில் இருந்து குடிபெயர்ந்தவர்களாவார்கள். பழங்கிராமங்களில் குடியேறி நிலையான வாழ்க்கை நடாத்தியபோதும் பழைய தொடர்புகளை இவர்கள் துண்டிக்கவில்லை என்பதை வருடம்தோறும் நடக்கின்ற புளியம்பொக்கணை நாகதம்பிரான் பொங்கல் விழாவிலும் ஏனைய நல்லநாள் பெரியநாட்களில் இடம்பெறுகின்ற சடங்குகள், கிரியைகளில் இருந்தும் காணக்கூடியதாக இருக்கின்றது.

கரைச்சிப் பிரிவின் வரலாற்றில் இரண்டாவது கட்டமாகக் கருதக்கூடிய காலம் 1935-ம் ஆண்டு தொடக்கியது. இவ்வாண்டு தொடக்கம் 1956-ம் ஆண்டு மட்டும் அரசாங்கத்திஞல் பல குடியேற்றத் திட்டங்கள் இப்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டன. 1935-ம் ஆண்டில் 150 குடும்பங் களுடன் கணேசபுரம் குடியேற்றத் திட்டம் முதன்முதலில் ஸ்தாபிக்கப்பட்டது. முதலில் ஸ்தா பிக்கப்பட்ட குடியேற்றத் திட்டம் ஆகையால் இந்துக்கள் முதல் வணங்கும் தெய்வமாகிய பிள்ளை யாரின் மற்றுமோர் பெயரால் கணேசபுரம் கொலனி என வழங்கப்படுகின்றது. தற்போதுள்ள குடியேற்றத் திட்டங்களில் பழையதாகையால் பழைய கொலனி எனவும் அழைக்கப்படுகிறது.

1949-ம் ஆண்டில் 10-ம் வாய்க்கால் என அழைக்கப்படும் பகுதியில் 250 குடும்பங்களும் 1951-ம் ஆண்டில் 8-ம் வாய்க்கால் என்னும் பகுதியில் 150 குடும்பங்களும் குடியேற்றப் பட்டார்கள். இவ்விரண்டு பகுதிகளும் சேர்ந்து உருத்திரபுரம் என அழைக்கப்பட்டு வருகிறது.

கண்டி றேட்டின் கிழக்கில் வட்டக்கச்சி 1953-ல் 250 குடும்பங்களுடனும், முரசுமோட்டை 1955-ல் 300 குடும்பங்களுடனும், இராமநாதபுரம் 1956-ல் 300 குடும்பங்களுடனும் குடியேற்றப் பட்டன.

இதேவேளையில் 1951-ல் குமரபுரத்திலும் 1953-ல் ஜெயந்திநகரிலும் அதை அடுத்து வட்டக்கச்சியின் கிராம விஸ்தரிப்புத் திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டன.

மத்திய வகுப்பினருக்கென 1953-ல் அக்கராயன் குளத்திட்டமும், 1954-ல் புதுமுறிப்புத் திட்டமும், 1955-ல் கல்மடுத்திட்டமும் ஸ்தாபிக்கப்பட்டன.

இந்த இடத்தில் மேலே கூறப்பட்ட இரண்டாம் கட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட குடியேற் றங்களுள் காணப்படுகின்ற இயல்புகளை நோக்குவது பொருத்தமாகும். தாம் பிறந்து வளர்ந்த சூழ்நிலையில் இருந்து பிரிக்கப்பட்டு பல்வேறு பாகங்களிலும் இருந்து வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள் ஒரே இடத்தில் ஒன்றுகச் சேருகின்ற பொழுது பல்வேறு பழக்க வழக்கங்களும் முகத்திற்கெதிர் ஒன்றேடு ஒன்று கலந்து புதியதோர் மரபை வளர்ப்பதற்கு ஏதுவாய் இருக்கின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சாதாரணமாகக் காண்கின்ற சாதிவேற்றுமை ஆனையிறவை அடுத்திருக்கும் கரைச்சிப் பகுதியில் ஆச்சரியப்படத்தக்க வகையில் அருகிக் காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் குடியேற்றத் திட்டங்களிஞல் ஆரம்பிக்கப்பட்ட புதிய சமுதாயம் என்றே கூறலாம்.

காணி இல்லாப் பிரச்சினை, வேலையில்லாப் பிரச்சினை, உணவுப் பிரச்சினை போன்றவற்றைத் தீர்ப்பதற்காக குடியேற்றத் திட்டங்கள் ஸ்தாபிக்கப்பட்டபோது இப்பிரச்சினைகளைத் தீர்க்கமுற்படும் அதேவேளையில் ஒவ்வோர் புதுக்கிராமமும் உருவாகின்றது. இக்குடியேற்றத்திட்டங்கள் ஸ்தாபிக் கப்பட்டு கிட்டத்தட்ட இருபது ஆண்டுகள் ஆகியபோதும் ஒரு சந்ததியும் முற்றுப்பெறவில்லை; இதனுல் ஒரு சிலரிடையே கிராமப்பற்று வளராமல் இருப்பதைக் காணக்கூடியதாக இருகின்றது. இவர்களிடம் ஊர் எது? எனக்கேட்டால் பிறந்த ஊரைச் சொல்வார்களே ஒழிய உருத்திர புரத்தையோ வட்டக்கச்சியையோ சொல்லமாட்டார்கள்.

இலங்கையின் ஏனைய பாகங்களில் வெற்றிகரமாக இயங்குகின்ற குடியேற்றத்திட்டங்களுடன் சீர்தூக்கி நோக்கும்போது கரைச்சிப் பிரிவில் ஸ்தாபிக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்கள் அவை களுக்கு எவ்விதத்திலும் குறைந்தவையல்ல என்று கூறக்கூடிய அளவுக்கு ஸ்தாபிக்கப்பட்ட நோக்கங்களைப் பூர்த்திசெய்துள்ளன எனக் கருதக்கிடக்கின்றது. முற்றிலும் முரணுன பல்வேறு பட்ட சூழ்நிலையில் வாழ்ந்த மக்கள் இங்கு குடியேற்றப்படாமல் ஒரே சூழலில் இருந்து குடி யேற்றப்பட்டதே இதற்கு முக்கிய காரணம் எனக்கொள்ளலாம்.

மூன்ருவது கட்டம் படித்தவாலிபர் திட்டம் ஸ்தாபிக்கப்பட்டு வளர்ந்தகாலம் என விபரிக்கப்படலாம். தற்போதுள்ள படித்தவாலிபர் திட்டங்களுக்கெல்லாம் 1958-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட கனகபுரம் படித்தவாலிபர் திட்டம் முன்னேடியான திட்டம் எனக் கருதக்கிடக்கின்றது. உத்தியோக பூர்வமாக படித்தவாலிபர் திட்டமாக அமையாது விட்டாலும் படித்தவாலிபர் திட்டங்களுக்கு இருக்கவேண்டிய பல அம்சங்கள் இத்திட்டத்தில் இருந்ததலைக் காணலாம். இங்கு குடியேறிய வாலிபர்கள் தம் ஊதியத்திற்கு கோழி வளர்த்தபடியால் இத்திட்டம் கோழிப்பண்ணை எனவும் அழைக்கப்படுகின்றது.

1966-ம் ஆண்டு விஸ்வமடு படித்தவாலிபர் திட்டம் 175 படித்த வாலிபர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு வாலிபருக்கும் மூன்று ஏக்கர் வழங்கப்பட்டு உப-உணவுப் பயிர் வெற்றிகரமாகச் செய்யப்பட்டுவருகின்றது; இத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் 1971-ம் ஆண்டு 210 வாலிபர்கள் குடியேற்றப்பட்டார்கள். 1971-ம் ஆண்டு தொடக்கம் 1973-ம் ஆண்டு வரையும் மூன்றும் கட்டமாக 400 வாலிபர்கள் குடியமர்த்தப்பட்டனர். இத்திட்டம் அடைந்த வெற்றியும் அது எவ்வாறு முன்மாதிரியான திட்டமாகத் திகழ்வதும் யாவரும் அறிந்ததே.

இதேபோன்று திருவையாற்றுத் திட்டத்திலும் 1966-ம ஆண்டு 99 படித்த வாலிபர்களும் 1972-ம் ஆண்டு 239 படித்தவாலிபர்களும் குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

1958-ம் ஆண்டு இனக்கலவரத்தினுல் 600 குடும்பங்கள் அகதிகளாக தர்மபுரம் கிராம விஸ்தரிப்பு திட்டத்தில் குடியேற்றப்பட்டுள்ளார்கள். இத்திட்டம் விஸ்வமடு படித்தவாலிபர் திட்டத்தை அடுத்து அமைந்திருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இந்திய வம்சாவளியினர், இலங்கை வம்சாவளியினர், பல்வேறு இனத்தவர் எல்லோரும் கலப்பாக இங்கே குடியேறியுள்ளார்கள். இவற்றைவிட அக்கராயன் பகுதியிலுள்ள ஸ்கந்தபுரத்திலும் நான்கு கட்டங்களில் விவசாயிகள் குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

குடியேற்றத்திட்டங்கள் ஒருபுறம் இருக்க அடாத்தாகக் காணியைப்பிடித்துக் குடியேறியவர்கள் பலபேர் இங்கு வாழுகின்ருர்கள். அடாத்தாகக் காணிபிடிக்கும் வழக்கம் வளர்ச்சியுற்று அவ்வாறு காணிபிடிக்கின்ற செயலை விபரிப்பதற்கு ஒரு புதுச்சொல்லாகிய "வைபோஸ்" (Byforce) வழக்கத்தில் இருந்து வருகின்றது.

மூன்ருவது கட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட படித்தவாலிபர் திட்டங்களுக்கும் இதற்கு முந்திய காலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட திட்டங்களுக்கும் காணக்கூடிய முக்கிய வேற்றுமை என்னவென்ருல் இக்கட்டத்தில் குடியேறிய பெரும்பாலானேர் படித்து வேலையில்லாமல் இருந்தவர்கள் ஆவார்கள். இவர்கள் விவசாயத்தைத் தொழிலாக ஏற்று அதில் வெற்றிகாண்பதினுல் விவசாயத்தின் மகத்துவத்தைப் படித்துவிட்டு "கந்தோர்" வேலை தேடித்திரிகின்ற ஏனையோருக்கு எடுத்துக் காட்டுவோராக அமைகின்ருர்கள்.

இவர்கள் வெற்றிகரமாக விவசாயத்தைச் செய்து உத்தியோகம் பார்த்து வருகின்ற வருவாயிலும் பார்க்கச் சிறந்த வருவாயை விவசாயத்தில் பெறலாம் என ஏனையோருக்குக் காட்டுவதன்மூலம் எதிர்காலத்தில் மேலும் மேலும் பலர் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டு நாட்டின் உணவுத் தேவைகளில் சுயபூர்த்தி காண்பதற்கு உதவுவார்கள்.

# கலாச்சார சபை, கரைச்சி

நிர்வாகசபை உறுப்பினர்

போஷகர் : திரு. எம். ரீ. டபிள்யு. அமரசேகரா C. A. S.
(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

உப-போஷகர்கள் : திரு. வீ. ஆனந்தசங்கரி
(தேசிய பேரவை உறுப்பினர், கிளிநொச்சி)

திரு. க. சு. முருகேசு
(பட்டினசபைத் தலைவர், கிளிநொச்சி)

திரு. கா. செல்லையா
(கிராமசபைத் தலைவர், கரைச்சி)

தலைவர் : திரு. நா. சவுந்தரநாயகம், C. A. S.
(காரியாதிகாரி, கரைச்சி)

உப-தலைவர்கள் : திரு. க. பரமேஸ்வரன், C. A. S.
(மாவட்ட காணி அதிபர், கிளிநொச்சி)

திரு. ஆர். ரி. சுப்பிரமணியம்
(தலைமையாசிரியர், கலவெட்டித்திடல்)

திரு. செ. சுவாமிநாதன்
(அபிவிருத்தி உத்தியோகத்தர், கிளிநொச்சி)

செயலாளர் : செல்வி வி. துரைசாமி
(கலாச்சார உத்தியோகத்தர், கரைச்சி)

உப-செயலாளர் : திரு. நா. சோதிநாதன்
(ஆசிரியர் ம. வி., கிளிநொச்சி)

பொருளாளர் : திரு. சி. கு. இராசையா
(கி. சே., கிளிநொச்சி,

ஆலோசனைக் குழு திரு. க. மயில்வாகனம்
(நிறைவேற்று பொறியியலாளர், கிளிநொச்சி)

திரு. D. K. சுப்பிரமணியம்
(பொது முகாமையாளர்,
பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை)

திரு. P. இராமநாதன்
(பொலிஸ் அதிபர், கிளிநொச்சி)

நிகழ்ச்சிக் குழு: திரு. க. பரமேஸ்வரன், C. A. S. தலைவர்
,, C. N. நடராசா
,, P. நித்தியானந்தன்
,, B. H. தனராஜ்
,, K. S. வீரசிங்கம்

| | |
|---|---|
| நிதிக் குழு . | திரு. மூ. க. சிவரத்தினம் |
| | ,, வை. விஞசித்தம்பி |
| | ,, P. சிற்றம்பலம் |
| | ,, சி. கதிரவேலு |
| | ,, ஆ. மார்க்கண்டு |
| போக்குவரத்து | திரு. நா. தியாகராசா<br>(இ. போ. ச. அதிகாரி, கிளிநொச்சி) |
| மைதான அமைப்பு<br>சோடனை : | திரு. T. மகாலிங்கம் |
| | ,, S. S. சின்னத்தம்பி |
| | ,, இ. நடராஜா |
| | ,, V. மைக்கேல் |
| | ,, சபா நாராயணன் |
| | ,, B. திருச்செல்வம் |
| | ,, இ. கனகநாயகம் |
| ஒளி : | திரு. K. சிவகடாட்சம்பிள்ளை |
| | ,, A. V. சிவபாதம் |
| மேடை : | திரு. S. அந்தோனிப்பிள்ளை |
| | ,, A. தர்மலிங்கம் |
| | ,, T. A. தர்மசேகரம் |
| | டாக்டர் மாசிலாமணி |
| | திரு. அ. தில்லைநாதன் |
| | ,, இ. சத்தியமூர்த்தி |
| விளம்பரம் : | திரு. கே. எஸ். வேலாயுதம் |
| | ,, எஸ். எஸ். இராமநாதன் |
| | ,, ஆ. சிவஞானசுந்தரம் |
| | ,, N. பத்குணராசா |
| | ,, C. தர்மலிங்கம் |
| உபசாரக் குழுவினர் : | திரு. A. செல்லத்துரை |
| | ,, T. K. கார்த்திகேசு |
| | ,, K. ஸ்ரீதரன் |
| | செல்வி சி. சுப்பிரமணியம் |
| | ,, ப. சுப்பையா |
| | திருமதி க. மனோராணி |

---

# 1972-ம் ஆண்டு நடைபெற்ற கலைவிழா வரவு செலவு அறிக்கை

**வரவு**

| | | |
|---|---|---|
| விளம்பர மூலம் | 1500 | 00 |
| ஈஸ்வரன் தியேட்டர் | 100 | 00 |
| கள் உற்பத்தி விற்பனைச் சங்கம் | 113 | 00 |
| மலர் முதற் பிரதி - திரு. க. சு. முருகேசு | 100 | 00 |
| அலுவலக நிதி திரட்டும் பத்திரத்தில் | 70 | 00 |
| திரு. கு. இராசையா, தி. மார்க்கண்டு, த. மகாலிங்கம் ஆகியோர் சேர்த்தது | 975 | 00 |
| மலர் விற்றது | 138 | 00 |
| கலாச்சார அமைச்சு | 150 | 00 |
| கலைவிழாப் போட்டி நடாத்திய மிகுதி | 76 | 00 |
| | 3222 | 00 |

**செலவு**

| | | |
|---|---|---|
| மலர் அடித்தது | 1000 | 00 |
| அட்டைப்படம் | 101 | 00 |
| போக்குவரத்துச் செலவு | 180 | 00 |
| மட்டக்களப்பு நாட்டுக் கூத்து | 400 | 00 |
| மன்னார் நாட்டுக் கூத்து | 250 | 00 |
| நாட்டுக் கூத்து ஒழுங்கு செய்ய | 75 | 00 |
| கவி, கருத்தரங்கு | 30 | 00 |
| புகைப்படம் | 70 | 00 |
| போசன வசதிகள் | 243 | 68 |
| மேளம் | 160 | 00 |
| ஒலிபெருக்கி | 75 | 00 |
| ஒளி | 170 | 00 |
| அச்சடித்த செலவு | 75 | 00 |
| மேடை அமைப்பதற்கு | 40 | 00 |
| சிற்றுண்டி | 50 | 00 |
| சோடனை, மாலை, குளிர்பானம் | 153 | 00 |
| நானாவித செலவுகள் | 38 | 00 |
| இ. நா. விழாச் செலவு | 174 | 65 |
| மொத்தச் செலவு | 3285 | 33 |
| மொத்த வரவு | 3222 | 00 |
| மேலதிகச் செலவு | 63 | 33 |

சி. கு. இராசையா
கலாச்சாரச் சபைப் பொருளாளரும்,
கிராம சேவையாளரும், கிளிநொச்சி

# நிகழ்ச்சிகள் அன்பளித்தோர்

நடன நிகழ்ச்சி; கிளிநொச்சி நீர்ப்பாசன அலுவலகம்

இசை: காணி அலுவலகம், கிளிநொச்சி

சிகரம் : இ. போ. ச. கிளிநொச்சி

சீன் (காட்சி): பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை

பரிசில்கள்: குமரகுரு ஸ்ரோர்ஸ்

,, கிளிநொச்சி வர்த்தகர்கள்

நாதஸ்வரம் : கரைச்சிப் பிரிவு கிராம சேவையாளர்கள்

# 'கண்டறியாதன கண்டேன்'

— அ. க. இராசேந்திரம்

கரைச்சி என்றதும் காடு திருத்திக் கமக்காரரைக் குடியேற்றிய பகுதி என்பதே பேச்சு. நாளொரு கட்டிடமும் மாதமொரு அலுவலகமுமாக நவீன நகரம் உருவாகிவிட்டது. கொடிய விலங்குகளின் வசிப்பிடமாக, இருள் செறிந்த காடாக விளங்கிய இப்பகுதி இன்று 'குட்டி யாழ்ப்பாண மாக' உருமாறி விட்டது. காட்டுப் பகுதியை கால் நூற்றுண்டுக்குள் கழனி கள் நிறைந்த மக்கள் பிரதேசமாக மாற்றியதையிட்டுப் பெருமைதான். ஆனல் எத்தனையோ நூற்றுண்டுகளுக்கு முன்பே இப்பிரதேசம் கலை, கலாச்சாரம், பண்பாடு, நாகரீகத்தில் சிறந்த மக்கள் வாழ்விடமாக விளங் கிற்று என்பதை வலியுறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம். இதற்கு ஆதாரமாக இங்குள்ள புராதன ஆலயங்கள் சிலவற்றின் சரித்திரத்தை ஆராய்வோம்.

கால மாற்றத்தால், இயற்கையின் சீற்றத்தால், காடு நாடாவதும் நாடு காடாவதும் நியதி. இதற்குக் கரைச்சியும் விதிவிலக்கல்ல. எனவே, எத்தனையோ நூற்றுண்டுகளுக்கு முன்பு மக்கள் வாழ்ந்த பிரதேசம் மணல் மேடாக, மண்டி வளர்ந்த காடாக மாறிவிட்டாலும் இன்று குடியேற்ற வாசிகளின் முயற்சியால் இடிபாடுகளுக்கு மத்தியில் புராதனச் சின்னங்களை யும் பொருட்களையும் கண்டு பிடித்துள்ளோம்.

## உருத்திரபுரம் சிவாலயம்

கிளிநொச்சி - கண்டி வீதியில் கரடிப்போக்கில் இருந்து சுமார் 7 மைல் தூரத்தில் உருத்திரபுரத்தில் சிவாலயம் அமைந்துள்ளது. பழம் பெருமை வாய்ந்த இந்த ஆலயம் பல உண்மைகளை நமக்கு உணர்த்த வல்லது. இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ள பழைய சிவலிங்க ஆவுடையார் சதுர வடிவுடையது. பொதுவாக ஈழத்திலும், இந்தியாவிலும் உள்ள சிவ லிங்க ஆவுடையார் வட்டவடிவானது. ஆனல் சோழர் காலத்துச் சிவலிங்க ஆவுடையார் மட்டும் சதுர வடிவானது. எனவே உருத்திரபுரம் சிவாலயம் சோழர் காலத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

பொதுவாக வயிரவர் கோவில், விநாயகர் கோவில் என்பன ஒரு சில மக்கள் குடியிருக்கும் இடத்தில் காணப்படும். முருகன் கோவில் நூற்றுக் கணக்கான மக்கள் வசிக்கும் கிராமத்தின் மத்தியில்தான் அமைக்கப்படும். ஆனல் சிவாலயங்கள் ஆயிரக்கணக்கான மக்கள் வாழும் பெரிய பட்டினங் களில், கூடிய மக்கள் குடியிருக்கும் பகுதிகளில்தான் காணப்படுகின்றன.

எனவே இன்றைய நிலைமுறையில் குடியேற்றக் கிராமம் எனக் கருதப் படும் உருத்திரபுரம் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பே செல்வச் சிறப்பும் மருதநில வளமும் மருவி, சிறந்த பட்டினமாகத் திகழ்ந்திருக்க வேண்டுமென்பதை நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

பொறிக்கடவை அம்மன் கோவில்

பரந்தன் - பூநகரி வீதியில் சுமார் 5 மைல் தூரத்தில் குஞ்சுப்பரந்தனில் பொறிக்கடவை அம்மன் கோவில் அமைந்துள்ளது. பரந்தன் கிராமப் பகுதியை, பரந்தன், பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தன் என மூன்றாகப் பிரித்துள்ளனர். குஞ்சுப்பரந்தனில் உள்ள அம்மன் கோவில் ஓர் புராதன ஆலயம். கி.பி. 1803 வரை ஆட்சி செலுத்திய வன்னியர் காலத்தில் அமைக் கப்பட்டது. அக்காலத்தில் ஆனையிறவு-பூநகரிக் கடலில் குஞ்சுப்பரந்தன் ஒரு துறைமுகமாக விளங்கிற்று. இங்கிருந்து கச்சாய், கொழும்புத்துறை, ஊர்கா வற்றுறை ஆகிய துறைமுகங்களுக்கு நெல்லும், கால்நடைகளும் ஏற்றுமதி செய்யப்பட்டன. வன்னிப் பகுதியின் காடுபடுதிரவியங்களான மான்தோல், புலித்தோல், கரடித்தோல், முதலைத்தோல், பாம்புத்தோல், பன்றிமுள்ளு, யானைத்தந்தம், மான்கொம்பு, புலிநகம் என்பனவும் தேனும், தீஞ்சுவைப் பழங்களும் ஒல்லாந்தத் துரைமாருக்கு பாய்க்கப்பல் மூலம் குஞ்சுப்பரந்தன் துறைமுகத்திலிருந்து ஊர்காவற்றுறைக்கு அனுப்பப்பட்டமைக்குச் சான்று களுண்டு.

அக்காலத்தில் யாழ்நாட்டின் புறக்கடவையாக விளங்கிய குஞ்சுப்பரந் தன் இன்று பொறிக்கடவையாகத் திரிந்துவிட்டதை மூதறிஞர் அறிவர்.

புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவில்

விஞ்ஞானப் புதுமைகள் மலிந்த இக்காலத்தில் பாம்புக்குப் பாலும் பழமும் வைத்து வணங்கும் பண்டைப் பெருமையை புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவிலில் காணலாம். பரந்தன் – தர்மபுரம் வீதியில் 7-ம் மைலிலுள்ள கிளைத்தெருவில் இவ்வாலயம் காணப்படுகிறது. வன்னியர் காலத்தில் அமைக்கப்பட்ட இவ்வாலயத்தில் இன்றும் மரபு தவறாத மருதநில மக்களின் அறுவடைப் பொங்கல் விழா பங்குனிப் பூரணையில் நடைபெறு கிறது. தென்மராட்சியில் இருந்து 'மடைப்பண்டம்' கட்டிவரும் வண்டில் களின் ஊர்வலமும், மேளஒலியும் மறக்க முடியாததொன்று. இத்தல மூர்த் தியைப் பரீட்சிக்க விரும்பிய பறங்கித் துரைமாரின் பார்வையும் பதவியும் பறி போனதும், பாம்பினால் அவர்கள் பலியானதும் பரம்பரைக் கதைகளால் அறி யலாம். இங்குள்ள கலவெட்டித்திடல் ஆராய்ச்சியாளரின் கவனத்துக்குரியது.

இன்றைய கரைச்சிக் கோவில்கள்

பழைய கரைச்சியின் சிறப்போடு புதிய கரைச்சியையும் சிந்திப்போம். இன்றைய கிளிநொச்சிப் பகுதியைச் சிருட்டித்த சிற்பி காலஞ்சென்ற சேர் பொன். இராமநாதன் ஆவர், காலதேவனின் கோலத்தால் நாடு அழிந்து

காடு மண்டிய கரைச்சிப் பகுதியை இரணைமடுக்குளத்தை (1890 – 1920) கட்டியதன்மூலம் சேர் பொன். இராமநாதன் அவர்கள் மறுபடியும் உருவாக்கினார். அன்னார் கி. பி. 1920-ம் ஆண்டளவில் கிளிநொச்சிக் கந்தசுவாமி கோவிலை ஸ்தாபித்தார். இன்றும் கோவில் ஆதனம் லேடி இராமநாதன் அவர்களின் பெயரில் இருப்பது கவனிக்கத்தக்கது. மறைந்த மாமேதை தொடக்கிவைத்த பணியை, இன்றைய திருப்பணிச் சபையார் புது அழகும், பொலிவும், கலையும், பண்பும், பக்திச் சூழலும் விளங்க நிறைவேற்றி வருகின்றனர். இது இளம் சந்ததிகளின் அதிர்ஷ்டம்.

ஆனையிறவிலுள்ள தட்டுவன்கொட்டி கண்ணகி அம்மன் கோவிலும், ஆனையிறவு அர்ச். அன்னம்மாள் ஆலயம், கிளிநொச்சி அர்ச். திரேசம்மாள் ஆலயம், பரி. பவுல் ஆலயம், ஜெயந்திநகர் அர்ச். பத்திமா ஆலயம், கிளிநொச்சிப் பள்ளிவாசல், லும்பினி விகாரை என்பனவும், பிறவும் இன்றைய கரைச்சி மக்களின் ஆத்மதாகத்தைத் தணிக்கின்றன. அவரவர் சமயப் பண்பை வளர்க்கின்றன.

முடிவுரை

இன்று ஆனையிறவுக் கடலுக்கு வடக்கே உள்ள குடாநாட்டிலிருந்து மக்கள் வாழ்வும் வசிப்பிடமும் கருதி கரைச்சியில் குடியேறுகின்றனர். ஆனால் முன்னொருகாலம் தொண்டமனாறு, வல்லை, உப்பாறுக்கு அப்பால் உள்ள பிரதேசம் காடும் கலட்டியுமான பகுதி. கரைச்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி மக்களின் வெளிக்கமமாக விளங்கிற்று. வெளிக்கமம் ஒல்லாந்தர் வாயில் 'வெலிக்கமம்' ஆகி ஆங்கிலேயர் பதிவேட்டில் வலிகாமம் ஆகிற்று. இன்று அப்பகுதிகளிலிருந்து மக்கள் பழைய பட்டினமான கரைச்சியை நாடுகின்றனர். சரித்திரம் திருந்துகிறது. நாமும் கண்டறியாதனவற்றைக் கண்டு மகிழ்வோம். நமது பண்டைப் பெருமை எண்ணி மகிழ்வோம். என்றும் நலம்காண முயன்று உழைப்போம்.

வாழ்க கரைச்சிப் பகுதி !     வாழ்க கலைகள் !

* *


நிலச் சொந்தக்காரருக்கோர் எச்சரிக்கை !

இன்றே தரிசாகக் கிடக்கும் நிலங்களைப் பயிரிடுங்கள்.

அன்றேல் அவசரகால ஒழுங்கு விதிகளின்கீழ் உங்கள் காணிகள் பறிக்கப்பட்டு வேறொருவருக்குக் கொடுக்கப்படும். அத்துடன் ரூபா 500-க்கும் ரூபா 5000-க்கு மிடைப்பட்ட அபராதப் பணமும் அறவிடப்படும்.

# பிரதேச வளர்ச்சியும் மறுசீரமைக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும்

எம். எம். மக்பூல் C. A. S.

1971-ம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை முழுவதும் சிதறிக்கிடந்த சிறு சிறு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் மறுசீரமைக்கப்பட்டுப் பலம் வாய்ந்த பெரிய முதற் சங்கங்களாக மாற்றியமைக்கப்பட்டதை யாவரும் அறிவர். ஏறத்தாழ இக்காலத்தில் இலங்கை முழுவதும் ஆறுயிரத்துக்கு மேற்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பதியப்பட்டிருந்தன என்று அறியக்கூடியதாயிருக்கின்றது. ஒரு பொதுக் கொள்கைப் பிரகடனத்தினடிப் படையில், மக்களது ஏகோபித்த முடிவுக்கிணங்க, மூன்றில் இரண்டு பங்குக்கு மேற்பட்ட தொகுதிகளைத் தேர்தலில் கைப்பற்றிக்கொண்ட கூட்டு முன்னணி அரசாங்கம், 1970-ம் ஆண்டு அரசாங்கத்தை அமைத்தது. அதனை யடுத்து, அதன் முதல் சிம்மாசனப் பிரசங்கத்தில் பல முற்போக்கு நடவடிக்கைகளை இவ்வரசாங்கம் தனது ஆட்சிக் காலத்தில் பூர்த்தி செய்ய முயற்சிக்கும் எனக் கொள்கைப் பிரகடனமொன்றை வெளியிட்டது. கூட்டுறவுச் சங்க மறுசீரமைப்பும் அத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றெனப் பிரகடனப் படுத்தப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்கள் வெறுமனே நுகர்வோர் நடவடிக்கைகளையும், விவசாயிகளுக்குத் தேவையான சில தேவைகளையும் புரிவதுடன் மாத்திரம் நின்றுவிடாமல், கிராமியப் பொருளாதார வளர்ச்சிக்கும், அதனை மாற்றியமைக்க உதவும் ஒரு நிறுவனமாகவும் அமைய வேண்டுமென்று அக்கொள்கைப் பிரகடனம் தெளிவாக எடுத்துக் கூறியது.

இதனை அமுல் செய்யும் நோக்குடன் பொருளாதாரப் பலமற்ற சிறுசிறு சங்கங்களாக விளங்கியவற்றை ஒருங்கிணைத்து மறுசீரமைக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 1971-ம் ஆண்டில் அமைக்கப்பட்டன, இன்று நாடு முழுவதும் ஏறக்குறைய 400 பெரிய முதற் சங்கங்கள் இயங்கி வருகின்றன. மறுசீரமைப்பு நடைபெற்ற காலத்திற் காணப்பட்ட ஆறுயிரம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பதிலாக, தற்போது அவையாவும் ஒருங்கிணைக்கப்பட்டு 400 பெரிய முதற் சங்கங்களாகக் குறைக்கப்பட்டதிலிருந்து, இன்று காணப்படும் சங்கங்கள் முன்னைய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தும் எத்துணைப் பொருளாதாரப் பலம் பொருந்தியனவாக விளங்குகின்றன என்பதை அறிந்து கொள்ளலாம்.

இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட லெயிட்லோ, விசாரணைக் கமிஷன் செய்த சிபாரிசுகளை அடிப்படையாகக் கொண்டே இம்மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்விடயமாக ஆராய்ந்த விசாரணைக் கமிஷன் இலங்கையில் காணப்படும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பல குறைபாடுகள் நிறைந்தவையாகக் காணப்பட்டன என்று கூறியது. அவை பொருளாதார வளம் குறைந்த வையாகவும், தவறுகளும் மோசடிகளும் நிறைந்தவையாகவும், தாம் அமைந்துள்ள பிரதேசங்களின் தேவையையே பூர்த்தி செய்ய விழைகின்ற நிறுவனங்களாயும் நுகர்வோர் தேவைகளையும் விவசாயிகளின் தேவைகளை யும் பூர்த்தி செய்யும் ''சேவை வழங்கும்'' நிறுவனங்களாகவும் மட்டுமே விளங்குகின்றன என விசாரணைக் கமிஷன் கூறியது. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் கூட்டுறவு இயக்கத்தின் பங்கு மிக முக்கியமானதெனினும் இலங்கையில் காணப்பட்ட சங்கங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு எந்த வொரு சேவையையும் செய்யவில்லையென்று அது சுட்டிக் காட்டியது. எனவே ஒருங்கிணைந்த பொருளாதார வளர்ச்சியை நாடு முழுவதும் ஏற்படுத்தக் கூடியவாறு பலம் குறைந்த சிறு சங்கங்கள் யாவும் ஒருங்கிணைக்கப்பட்டுப் பெரிய மூதற் சங்கங்களாக ஸ்தாபிக்கப்பட வேண்டுமென அது சிபார்சு செய்தது.

அரசாங்கமும் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தக் கருதி, இச்சிபாரிசுகளை உடன் அமுல் செய்தது. கிராமப் புறங்களில் இச் சங்கங்கள் முக்கிய நிறுவனங்களாக விளங்கின. எனவே இவற்றின் மூலம் பிரதேச பொருளாதார வளர்ச்சியைத் திட்டமிட்ட வகையில் தீவிரப்படுத்த முடியுமென அரசாங்கம் நம்பியது. அண்மையில் தயாரிக்கப்பட்ட ஐந்தாண் டுத் திட்டமும் இதனையே வலியுறுத்துகிறது. நாட்டின் பரிபாலனத்தைப் பன்முகப்படுத்துவதன் மூலம் பிரதேச வளர்ச்சியைத் தீவிரப்படுத்த அது முயலுகிறது. அதன் ஒரு அம்சமாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மறு சீரமைப்பு அத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிராம மட்டத்தில் திட் டமிடல் வேலையைத் திறம்படச் செய்வதற்காகத் தற்போது பிரதேச அபி விருத்திச் சபைகள் ஒவ்வொரு காரியாதிகாரிப் பிரிவிலும் அமைக்கப்பட் டுள்ளன. இச்சபையின் நடவடிக்கைகளை அமுல்படுத்தும் நிறுவனமாக மறுசீரமைக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே அமைந்துள்ளன.

எனவே இச்சங்கங்கள், எந்த அளவுக்கு பிரதேச அபிவிருத்தியைத் தீவிரப்படுத்த உதவும் என்பதை அனுமானிக்க வேண்டுமாயின் இலங்கை யில் கூட்டுறவு இயக்கத்தின் வரலாற்றைச் சுருக்கமாக அறியவேண்டியது அவசியமாகின்றது. அப்போதுதான் மாறிவரும் சூழ்நிலைகளுக்கேற்பக் கூட் டுறவு இயக்கமும் மாற்றமடைந்து வந்திருக்கிறதா? இன்றைய மாற்றம் அவசியமானதுதானா? இம்மாற்றம் பிரதேச வளர்ச்சிக்கு எத்துணை அளவு துணைபுரியும் என்பதை யெல்லாம் மட்டிடக்கூடியதாயிருக்கும். கூட்டுறவுத் தத்துவத்தின் தாயகமாகிய பிரித்தானியக் கூட்டுறவு வரலாறும், வளர்ச்சி யடைந்துவரும் இளம் நாடுகளான ஆசிய நாடுகளின் கூட்டுறவு இயக்க வர லாறும் முற்றிலும் வேறுபட்ட அம்சங்களைக் கொண்டனவாக விளங்குகின் றன. தனிப்பட்டோரின் முயற்சியால், சுயேச்சையான முறையில் இயங்கி

வருகிறது பிரித்தானியக் கூட்டுறவு இயக்கம். இதற்கு மாறாக இலங்கை போன்ற நாடுகளில் கூட்டுறவு இயக்கம் அவசியத்தின் அடிப்படையில் தோன்றியதென்பதை மனதில் கொள்ளவேண்டும். போர் நெருக்கடியின் காரணமாகவே இலங்கையில் கூட்டுறவு இயக்கம் தோன்றியதெனலாம். இரண்டாவது உலகப் போரின்போது நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. சுதந்திரமான தடையற்ற கப்பற் போக்குவரத்து, போர் நிலைமையினுல் தடைபட்டதன் காரணமாய் பொருட் பற்றாக்குறை மோசமான நிலையை அடைந்தது வர்த்தகர்கள் அபரிமிதமான லாபம் கருதி உயர்ந்த விலைக்குப் பொருட்களை விற்பனை செய்யத் தொடங்கவே நாட்டு நலம் கருதி அரசாங்கம் தலையிடவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் அரசாங்கம் கூட்டுறவுக் கடைகளை ஸ்தாபித்து, கட்டுப்பாட்டு விலையில் பொருட்களை விநியோகம் செய்யத் தொடங்கியது. எனவே கூட்டுறவின் ஆரம்பம் சுயேச்சையானதாக இலங்கையில் விளங்கவில்லை. ஒத்த கருத்துடைய பலர் சேர்ந்து தம் நலன் கருதி இக்கடைகளை ஸ்தாபிக்கவில்லை. மாருக அரசாங்கமே இதனைச் செய்தது. ஒருவகையில் இவ்வாறு ஸ்தாபிக்கப்பட்ட நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை கூட்டுறவுச் சங்கங்கள் என்று கூறுவதைவிட அரசாங்கத்தின் நியாய விலைக் கடைகள் என்று கூறுவது பொருந்துமெனலாம். அண்மைக் காலம் வரை பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் நுகர்வோர் சேவையை மட்டுமே பெரிதும் புரிந்து வந்தன எனலாம். கூட்டுறவு ஆணையாளரது 1961-ம் ஆண்டுப் பரிபாலன அறிக்கையின்படி 817 கூட்டுறவுச் சங்கங்கள் நுகர்வோர் சேவையை மட்டுமே புரிந்துவந்தன என்று கூறப்படுகிறது. 2617 சங்கங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட கடமையைப் புரிந்துவந்தன. அவையாவும் எந்த வகையிலும் உற்பத்தி நடவடிக்கையோடு சம்பந்தப்படாத கடமைகளையே புரிந்துவந்தன. இதைவிட, கைத்தொழிற் துறையில் ஈடுபட்ட விரல்விட்டு எண்ணக்கூடிய சில சங்கங்கள் கூட்டுறவுத் தத்துவத்தின் அடிப்படையிலன்றி லாப நோக்கம் கொண்ட சிறு குழு ஒன்றின் நலன்கருதி இயங்கும் கூட்டு நிறுவனங்கள்போல நடந்துகொண்டன என்பதையும் அறியக் கூடியதாயிருக்கின்றது.

இவ்வாறு தனியாரது சுயேச்சையான முயற்சியின்றி, அரசாங்கத்தால் ஊக்குவிக்கப்பட்டதன் காரணமாகப் பல சீர்கேடுகள் தோன்றின. பெரும்பாலானவை நுகர்வோர் சங்கங்களாக அமைக்கப்பட்டன. 70 விதமான சிறுசிறு சங்கங்கள் தோன்றின. அங்கத்தவர்களிடையே சங்கங்களின் வளர்ச்சி பற்றி ஒருவித புறக்கணிப்புநிலை காணப்பட்டது. நினைத்த மாத்திரத்தில் பத்துப்பேர் சேர்ந்து ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்துவிடக் கூடியதாக இருந்தமையால் சிறுசிறு சங்கங்கள் புற்றீசல் போலத் தோன்றத் தொடங்கின. அங்கத்தவர்களிடையே அக்கறையின்மை காணப்பட்டமையால், தவறுகள் மோசடிகள் ஏராளமாக நடைபெற்றன. பெரும்பாலான சங்கங்கள் நட்டத்தில் இயங்கின. 1954-ல் 208 சங்கங்கள் நட்டத்திலேயே இயங்கின என்று அறியக்கூடிய தாயிருக்கின்றது. இது 39 வீதமாகும். ஒவ்வொரு தேவைக்கென ஒவ்வொரு சங்கம் அமைக்கப்பட்டதனுல் ஒரு

விவசாயி அல்லது ஒருவர் தனது பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்வதற்குப் பல்வேறு சங்கங்களிலும் அங்கத்துவம் வகிக்க வேண்டியியதாயிருந்தது

இத்தகைய சீர்கேடுகள் காணப்பட்டதன் காரணமாக கூட்டுறவு இயக்கத்தில் சீர்திருத்தம் தேவையாக இருந்தது. இதன் விளைவாகவே பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் என்ற அமைப்புத் தோன்றியது. கல்லோயா அபிவிருத்திச் சபையினரால் கல்லோயாவின் குடியேற்றத் திட்டங்களில் அமைக்கப்பட்ட ''பொது சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின்'' முன்மாதிரியினை ஆதாரமாக வைத்து, பல்வேறு நோக்கங்களுக்காக ஸ்தாபிக்கப்பட்ட சிறுசிறு சங்கங்களை ஒன்றிணைத்து, இத்தகைய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நாடெங்கும் ஸ்தாபிக்கப்பட்டன. ஒருவர் தனது நுகர்வுத் தேவை, விவசாயக் கடன் தேவை, சந்தைப்படுத்தும் தேவை ஆகிய எல்லாவற்றையும் ஒரே சங்கத்திலேயே பெற்றுக்கொள்ளக் கூடியவாறு இப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன.

அண்மையில் இப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மறுசீரமைக்கப்பட்ட பெரிய முதற் சங்கங்களாகும்வரை மேலே கூறிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே இயங்கிவந்தன. முற்பகுதியில் கூறியது போல இப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யத் தவறிவிட்டன என்றே கூறவேண்டும். ஆரம்ப காலத்தைப் போலன்றி இப்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அதன் அங்கத்தவர்களுக்குப் பல்வேறு சேவைகளை ஒரே நிலையத்தின் மூலம் வழங்கக் கூடியதாக இருந்தபோதிலும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு எத்தகைய குறிப்பிடத்தக்க சேவைகளையும் அவை புரியத் தவறிவிட்டன. முன்னைய நிலைமையிலும் பார்க்க அதிசயிக்கத்தக்க மாற்றம் எதனையும் அவை புரியவில்லையென்பதைக் கீழே தரப்படும் புள்ளி விபரம் நன்குணர்த்தும். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரிய முதற் சங்கங்களாக மறுசீரமைக்கப்பட்ட காலத்திற்கு முன்பதாக நாடு முழுவதும் 5818 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் காணப்பட்டன. இவற்றுள் 983 அல்லது 16.8 வீதமான சங்கங்கள் செயலற்றுப் போனவையாக விளங்கின 2384 அல்லது 49.3 வீதமான சங்கங்கள் நுகர்வோர் வியாபாரம் ஒன்றை மட்டுமே செய்து வந்தன. இதுமட்டுமன்றி ஏராளமானவை பொருளாதாரப் பலமற்றவையாக விளங்கின. லாபம் அதிகம் இல்லாததின் காரணமாக ஊழியர்க்குச் சொற்ப சம்பளமே வழங்கப்பட்டது. இதனால் பணமோசடி, ஊழல் ஆகியவை தவிர்க்க முடியாததாயிற்று. எல்லாவற்றிற்கும் மேலாகத்தான் இயங்கும் பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு அல்லது பன்முகப்படுத்தலுக்கு எத்தகைய தொண்டையும் செய்ய இயலாதவையாகவே அவை விளங்கின.

எனவே தேசியப் பொருளாதாரத்தில் பெரும் பங்கை இவை வகிக்க வேண்டுமென்ற எண்ணத்தில், இப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பல புவியியல் பொருளாதாரக் காரணிகளை மனதுட்கொண்டு, ஒருங்கிணைக்கப்

பட்டு, இன்று தொகையளவில் முன்னையவற்றோடு ஒப்பிடும்போது மிகக் குறைந்த அளவான பெரிய மூதற் சங்கங்களாக மறுசீரமைக்கப்பட்டுள்ளன. இவை பொருளாதாரப் பலம் வாய்ந்தவையாகும், ஏனெனில் பல சங்கங்களினதும் சொத்துக்கள் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளன. இதனால் வேலைக்குத் தகுந்த ஊதியம் வழங்கக் கூடியதாக இருக்கிறது. இக்காரணங்களால் தேசியத் திட்டமிடுதலின் ஒரு கூறாக இச்சங்கங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. போதிய ஊதியம் வழங்கக்கூடியதாயிருப்பதன் காரணத்தால் ஊழல், மோசடி ஆகியவை தவிர்க்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதேச அபிவிருத்திக்கு இப்பெரிய மூதற் சங்கங்கள் எவ்வாறு உதவ முடியும்? முதலாவதாக இவை பொருளாதாரப் பலம் பொருந்தியவையாகவும் பாரிய தொழிற்பரப்பைத் தம்மகத்தே அடக்கியதாகவும் அமைந்திருக்கின்றன. எனவே நுகர்வோர் சேவையில் மாத்திரம் ஈடுபடாது விவசாயிகளுக்குத் தேவையான கடன் வழங்கல், உரம் வழங்கல், அவர்களது உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தல் ஆகியவற்றிலும் ஈடுபடும், அதுமட்டுமன்றி விவசாயம் சார்ந்த கைத்தொழில்களிலும் ஈடுபடுவதற்கு அதன் பொருளாதார வளம் வசதியளிக்கும். அத்துடன் ஒவ்வொரு பெரிய மூதற் சங்கங்களுடனும் கிராமிய வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வங்கி மூலம் கிராமப்புற மக்களிடையே சேமிக்கும் பழக்கத்தை விஸ்தரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இன்று நாட்டை எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சனைகளுள் உள்நாட்டு மூலதனமின்மையும் ஒன்றாகும். எனவே இச்சேமிப்புப் பழக்கத்தை விஸ்தரிப்பதன் மூலம் தொழிற்பரப்பில் மூதலீடுகளை மேற்கொள்வது சாத்தியமாகும்.

இரண்டாவதாக இப்பெரிய மூதற் சங்கங்களின் இயக்குநர் சபையின் அமைப்பிலும் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முதன்முறையாக இயக்குநர் சபையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் அங்கம் வகிக்கின்றனர். இதன் காரணமாக அபிவிருத்தி தேவைப்படும் பரப்புக்களைத் தெரிந்தெடுப்பதும், அவற்றை இனம்கண்டு கொள்வதும், அமுல் செய்வதும் இலகுவாக்கப்பட்டுள்ளது. இதுகாலவரையில் பிரதேசத்தில் அரசியல் ரீதியில் செல்வாக்குடையோர் தொழில் ரீதியில் செல்வாக்குடையோர் ஆகியோரதுகட்டுப்பாட்டிற்குள்ளும், இன்னும் சில சந்தர்ப்பங்களில், குடியேற்றத்திட்டங்கள் போன்றவற்றில் கடன் கொடுக்கும் முதலாளிமாரின் கட்டுப்பாட்டிற்குள்ளும் அகப்பட்டு இக்கூட்டுறவுச் சங்கங்கள் அல்லல்பட்டிருப்பதைக் காணக்கூடியதாயிருக்கிறது. ஆனால் பிரதேசத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இயக்குநர் சபையில் அனுமதிக்கப்பட்டிருப்பதன் காரணமாக அவர்களது வழிகாட்டல் அபிவிருத்தித் திட்டங்களுக்கு மூன்னோடியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இதுகாலவரை அனுட்டிக்கப்படாத ஒரு சீர்திருத்தமும் இம்முறை அனுட்டிக்கப்பட்டிருக்கிறது. கொள்கை வகுத்தலும் அதனை அமுல்படுத்தலும் வெவ்வேறு அமைப்புக்கள் வசம் ஒப்படைக்கப்பட்டிருப்பதே அதுவாகும். கொள்கை வகுப்பதும் இயக்குநர் சபையின் பொறுப்பாகும்.

அதனை நிறைவேற்றுவது பொதுமுகாமையாளரது பொறுப்பாகும். இத்தகைய அமைப்புச் சீர்திருத்தங்களின் காரணமாக இப்பெரிய மூதற் சங்கங்கள் பிரதேச அபிவிருத்திக்கு உறுதுணையாக விளங்கும் என நம்பப்படுகிறது.

ஐந்தாண்டுத் திட்டம், திட்டமிடல் உத்தியில் இதுவரை பாவிக்கப் படாத ஒரு உத்தியினைக் கையாள உத்தேசித்துள்ளது. இதுகாலவரை தேசிய ரீதியிலேயே திட்டங்கள் அமைக்கப்பட்டன. மத்திய அரசாங்கம் இத்தகைய திட்டங்களை அமைத்து அவற்றிற்குரிய பணத்தையும் ஒதுக்கியது. இவ்வாறு செய்யப்பட்டதனால் இவை யதார்த்த பூர்வமற்றவையாக விளங்கின. பிரதேசத்தின் சமூக பொருளாதார நிலைமைகளோடு பரிச்சயமற்றவர்களால் தயாரிக்கப்பட்ட திட்டங்கள் பெரும்பாலும் தோல்வியே கண்டுள்ளன. எனவே திட்டமிடுதலைப் பன்முகப்படுத்தும் நோக்குடன் நிர்வாகச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு அனுசரணையாக ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் ஒவ்வொரு பிரதேச அபிவிருத்திச் சபைகள் அமைக்கப் பட்டன. இப்பிரதேச அபிவிருத்திச் சபைகளுக்கு ஸ்தாபன அமைப்பை ஏற்படுத்த இப்பெரிய மூதற் சங்கங்கள் பாவிக்கப்பட்டன. இச்சபைகள் தமது தொழிற்பரப்பின் எல்லைக்குள்ளே அதன் பொருளாதார சமூக நிலைமைகளுக்குப் பொருந்தக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும். இப்பிரதேசத்தில் காணப்படும் மூலப்பொருட்களைக்கொண்டு வேலைவாய்ப்பையும் பொருளாதார வளத்தையும் அதிகரிக்கக்கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் பெரிய மூதற் சங்கங்களின் மூலமாக அமுல் செய்யப்படும். ஆர்வமும் ஊக்கமும் பொருந்திய ஒரு இயக்குநர் சபை இத்தகைய திட்டங்களைப் பெருமளவில் மேற்கொண்டு அப்பிரதேசத்தின் பொருளாதார நிலையை மேம்படுத்தக் கூடியதாகவிருக்கும்.

கரைச்சிப் பகுதியில் தற்போது ஐந்து பெரிய மூதற் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றுள் இரண்டு சங்கங்கள் பொருளாதாரப் பலம் பொருந்தியவையாக விளங்குகின்றன. இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கு இச்சங்கங்கள் பெருந்தொண்டு செய்யக்கூடிய சாத்தியக் கூறுகள் நிறைய வுள்ளன. ஆர்வமும் துடிப்பும் நிறைந்த இயக்குநர் சபையும், ஆற்றல் மிக்க ஒரு பொது முகாமையாளரும் இந்நிறுவனங்களைத் திறமையாக இயக்கி ஐந்தாண்டுத்திட்டம் கருதுகின்ற, திட்டமிட்ட பிரதேச அபிவிருத்தியைக் காணும் ஒரு நோக்கில் வெற்றியடைய இயலும்.

கரைச்சிப் பகுதியின் பிரதான தொழில் விவசாயமாகும். ஏறத்தாழ முக்கால்வாசி நிலங்கள் விவசாயக் காணிகளாக விளங்குகின்றன. எனவே தனியார் நிறுவனங்களோ அரசாங்கமோ தலையிடாத சில துறைகளில் இச்சங்கங்கள் தலையிட்டு விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்யலாம். உழவு இயந்திர உதிரிப்பாகங்களின் விற்பனை, உழவு இயந்திரம் திருத்தும் நிலையம் ஆகியவற்றை நிறுவி அதன் மூலம் தனியார்

ஸ்தாபனங்கள் ஏழை விவசாயிகளைச் சுரண்டும் நிலையை ஒழித்துவிட லாம். கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இத்துறையில் தலையிட்டு, குறிப்பிடத்தக்க லாபத்தைத் தான் அடைந்தது மட்டுமன்றி, கமக்காரர்களும் குறைந்த விலையில் உதிரிப்பாகங்களைப் பெறவும், நியாய மான கூலிக்கு உழவு இயந்திரங்களைத் திருத்திக்கொள்ளவும் வசதியேற் படுத்திக் கொடுத்திருக்கிறது; வேளாண்மையின் ஆரம்பகால நடவடிக்கை யான உழவின்போது உழவு இயந்திரத் தட்டுப்பாடு இப்பகுதியில் நிறையக் காணப்படுகிறது. உழவு இயந்திரங்களை வாடகைக்கு விடும் நிலையமொன்றை ஸ்தாபிப்பதன் மூலம் நியாயமான கூலிக்கு உழவு இயந்திர சேவையை அளிப்பதோடு காலந்தவறிப் பயிர்செய்யும் இக்கட்டான நிலையையும் இலகுவாக்க முடியும். அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட திருவையாறு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், காணி ஆணையாளரால் வழங்கப்பட்ட உழவு இயந்திரத்தைக் கொண்டு இத்தகைய சேவையொன்றை வெற்றிகரமாகவும் லாபகரமாகவும் இயக்கியிருக்கின்றதனை இங்கு குறிப்பிடலாம்.

கரைச்சிப் பகுதியில் தற்போது உப உணவுற்பத்தித் திட்டங்கள் பல இயங்கிவருகின்றன. நடுகைக் காலத்தில் மிளகாய்க் கன்றுகள் போன்றவற் றைப் பெற்றுக்கொள்வதில் குடியானவர்கள் மிகுந்த சிரமம் அடைகின்றனர். இச்சிரமத்தை நீக்குவதற்கு, நியாயமான விலையில் நாற்றுக்களை விற்பனை செய்யக்கூடியவாறு மாதிரிப் பண்ணையொன்றை இச்சங்கங்கள் ஆரம்பிக் கலாம். தனியார் நிறுவனங்கள் லாப நோக்கில் மட்டும் இயங்குவதன் காரண மாக இத்தகைய துறைகளில் துணிந்து இறங்கமாட்டா. அந்த வெற்றிடத்தை லாப நோக்கத்தை மட்டுமே கொண்டியங்காது சேவையையும் அடிப்படை யாகக் கொண்டு இயங்கும் இச்சங்கங்கள் பூர்த்திசெய்ய முடியும். இத்தகைய மாதிரிப் பண்ணையில் புதிய முறைகளைக் கையாண்டு இப்பகுதி விவசாயி களுக்கு அம்முறைகளில் பரிச்சயம் ஏற்படுமாறு செய்யலாம்.

இதுமட்டுமன்றி இப்பிரதேசத்தின் மிக இன்றியமையாத ஒரு நெடுங் காலத் தேவையையும் இச்சங்கங்கள் ஐந்தும் கூட்டாக இணைந்து பூர்த்தி செய்யலாம். இன்று கரைச்சிப் பகுதியிலுள்ள மண்ணின் தன்மை ஆராயப் படாது காணப்படுகின்றது. மண்ணின் தன்மை நிச்சயிக்கப்படாது எல்லாப் பிரதேசத்துக்கும் ஒரேவிதமான பசளைப் பிரயோகமே சிபாரிசு செய்யப் படுகிறது. வளர்ச்சி அடைந்த நாடுகளில் ஒவ்வொரு அங்குல நிலமும் ஆராயப் பட்டு மண்ணின் தன்மை நிச்சயிக்கப்படுகிறது. அதன் பின்னரே அவற் றின் அமில, காரத்தன்மைகளுக்கேற்ப பசளைப் பிரயோகம் சிபாரிசு செய் யப்படுகின்றது. இவ்வாறு மண்ணின் தன்மையை ஆராய்வதற்கு ஒரு ஆராய்ச்சி நிலையமொன்று அமைக்கப்படுவது அத்தியாவசியமாகும். இத் தகைய நிலையமொன்றை ஆரம்பிப்பதாயின் பாரிய பொருட்செலவு ஏற் படுமெனினும் ஐந்து சங்கங்களும் இணைந்து கூட்டாக இதனை அமைப்பது விரும்பத்தக்கதாகும்.

இவற்றைவிட விவசாயம் சார்ந்த சில, கைத்தொழில்களையும் இச் சங்கங்கள் ஆரம்பிப்பது பிரதேச வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாததா கும். காகித அட்டை தயாரித்தல், நெல் குத்தும் அரிசி ஆலைகளை ஸ்தாபித் தல் ஆகியவை மேற்கொள்ளப்படக்கூடிய கைத்தொழில்களில் சிலவாகும்.

இப்பெரிய சங்கம் திருப்திகரமாக இயங்க வேண்டுமாயின் சில அடிப் படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும். அவற்றுள் முக்கியமா னது இயக்குநர் சபையோடு தொடர்புடையதாகும். முன்னைய கூட்டுறவுச் சங்கங்கள் பல தோல்வியடைந்ததற்கு அதனை இயக்குவதற்குப் பொறுப்பான செயற்குழுக்கள் ஆர்வமின்றிக் காணப்பட்டமை ஒரு காரணமாகும். நல்ல பல கொள்கைத் திட்டங்கள் வகுக்கப்பட்டாலும் அதனை இயக்குகின்ற வகை யிலேயே அதன் வெற்றி தோல்வி தங்கியிருக்கின்றது. பிரதேச வளர்ச்சிக்கு உதவக்கூடிய ஒரு நிறுவனம் இப்பெரிய சங்கங்களே என்றும், பொருளாதார ரீதியில் பலம் வாய்ந்த ஒரு மிகப் பெரிய நிறுவனம் இச்சங்கங்களே என்றும், பரிபூரணமாக நம்பி ஆர்வத்துடனும் துடிப்புடனும் இயக்குநர் சபைகள் இயங்கினாலன்றி எதிர்பார்த்த பலனை இப்பெரிய சங்கங்கள் ஏற்படுத்த முடி யாது. அத்துடன் இயக்குநர் சபை வகுக்கும் கொள்கைகளைச் சிறந்த முறை யில் நிறைவேற்றும் ஆளணி மிகமிக அவசியமாகும். ஏனெனில் திட்டங்களின் நிறைவேற்றம் முற்றிலும் சங்கம் பதவியிற் சேர்க்கும் ஆளணியிலேயே தங்கி யுள்ளது. தகுதி வாய்ந்தோர் சேர்க்கப்படவேண்டும். வேலைக்குத் தகுந்த ஊதியமும் வழங்கப்பட வேண்டும், அப்போதுதான் தவறுகள், மோசடி களைத் தவிர்க்கக் கூடியதாயிருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக இப் பெரிய சங்கங்களை வழிகாட்டுவதற்கும் ஆலோசனை கூறுவதற்கும் ஊக்கமளிப்பதற்கு மென நியமிக்கப்பட்டிருக்கும் கூட்டுறவு அபிவிருத்தித்துறை உத்தியோகத் தர்கள் இயக்குநர் சபைகளின் ஆர்வத்தைத் துண்டிக்கக்கூடிய வகைகளில் நடவடிக்கைகளை மேற்கொள்வதும், அநாவசியமாகத் தலையிடுவதும், கட்டாய மாகத் தடுக்கப்பட வேண்டும். தட்டிக்கொடுக்க வேண்டிய இடத்தில் தட்டிக் கொடுத்து, தவறுகள் நிகழக்கூடிய சந்தர்ப்பத்தில் அவற்றைச் சுட்டிக்காட்டி, அந்தந்த இயக்குநர் சபைகளே அவற்றைத் திருத்திக் கொள்ளவும் உதவி செய்யவேண்டும். அன்றி அநாவசியமாகத் தலையிட்டால் அது இயக்குநர் சபையின் முனைப்பைத் துண்டித்து வெறும் லாப நோக்கில் இயங்கும் ஒரு நிறுவனமாக அதனை மாற்றிவிடும்.

**இருபதாம் நூற்றுண்டின் அதிசயப் பயிர் – சோயா அவரை !!**

உலகில் புரதச் சத்தையும், கொழுப்புச் }சத்தையும்
பெருமளவிலும் மலிவாகவும் தரக்கூடிய பயிர் சோயா அவரை.

சோயா அவரையில் பொதிந்துள்ள சத்துக்கள்

| | சோயா அவரை | அரிசி | கோதுமை |
|---|---|---|---|
| புரதச் சத்து | 40% | 7% | 10% |
| கொழுப்புச் சத்து | 20% | | |

இதன் பிரயோசனங்கள் :-

(1) பால், கோப்பி தயாரிக்கலாம்
(2) வடை, சோயா அவரைக் கறி தயாரிக்கலாம்.
(3) கோதுமை சேர்த்து இடியப்பம், பிட்டு, ரொட்டி தயாரிக்கலாம்.

எனவே நாட்டு நலன் கருதியும் நம் நலன் கருதியும்
சோயா அவரையைப் பெருமளவில் பயிரிடுவோமாக.

அச்சு வேலைகள்
கலண்டர் — டயறிகள்
றப்பர் ஸ்ராம்புகள்
புத்தகங்கள், கொப்பி வகைகள்
பாடசாலை உபகரணங்களுக்கு

↓

**விவேகானந்த அச்சகம் – புத்தகசாலை**

விவேகானந்தாக் கட்டிடம் — யாழ்ப்பாணம்

தந்தி: 'பிறின்ரேஸ்' தொலைபேசி: 517

கிளை: 230, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு

அழகிய புகைப்படங்களுக்கு

# கமலா ஸ்ரூடியோ

கிளிநொச்சி

# KAMALA STUDIO

KILINOCHCHI

## ஸ்ரீ அருள் முருகன் ஸ்ரோர்ஸ் அன் ரெக்ஸ்ரைல்ஸ்

பழைய பஸ் நிலையம்

கண்டி வீதி — கிளிநொச்சி

உங்கள் மங்களகரமான வைபவங்களுக்குத் தேவையான

* உயர்தர பட்டு வகைகள்
* கைத்தறிப் புடவைகள்
* சேட் வகைகள்
* சாய்ப்புச் சாமான்கள்

சகாய விலையில் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் ஆதரவுக்கு எங்கள் நன்றி.

## SRI ARUL MURUGAN STORES & TEXTILES

OLD BUS STAND

KANDY ROAD — KILINOCHCHI

கிளை : லிங்கம் பிறதர்ஸ், பஸ் நிலையம், கிளிநொச்சி

போன். 585



அழகிய பவுண் நகைகள்

தங்கப் பவுண்



வைரங்கள்.

## கே. என். எம். மீரான் சாஹிப்

தங்கப் பவுண் நகை மாளிகை

நகை வியாபாரம்.

**கன்னாதிட்டி — யாழ்ப்பாணம்**

## ராஜா கார்ப்பரேசன்

கூட்டுறவு மொத்த விற்பனவு நிலைய விநியோகஸ்தர்

கிளிநொச்சி

உங்களுக்குத் தேவையான

உணவுப் பொருட்களும் சாய்ப்புச் சாமான்களும்

சகாய விலையிலும், நிதான விலையிலும்

மொத்தமாகவும், சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம்.

## RAJAH CORPORATION

KANDY ROAD — KILINOCHCHI

# SUNDARAM STORES

KANDY ROAD — KILINOCHCHI

The Leading and Cheapest House for

## TEXTILES
AND
## SUNDRIES

முதல்தர
ஆடைகளுக்கு
முதல்
ஸ்தாபனம்

**சுந்தரம் ஸ்ரோர்ஸ்**

கண்டி வீதி — கிளிநொச்சி

கரைச்சிக் காரியாதிகாரி பிரிவின் கலைவிழா நிறைவுபெற
எமது நல்வாழ்த்துக்கள்

*விஜயம் செய்யுங்கள்*

எல்லாவித கிறைண்டிங் மில்லிங் வேலைகட்கும்

**ஸ்ரீ முருகன் கிறைண்டிங் அன் றைஸ் மில்**

சகலவித வீட்டு உபகரண, தளபாட வேலைகட்கு

**கிருஸ்ணு பேணிச்சர் இன்டஸ்ரீஸ் அன்ட் வேக்சொப்**

கண்டி வீதி — கிளிநொச்சி

*VISIT :*

**SRI MURUGAN GRINDING & RICE MILLS**

KANDY ROAD — KILINOCHCHI

**KRISHNA FURNITURE INDUSTRIES & WORKSHOP**

KANDY ROAD — KILINOCHCHI

## — நன்றி —

கலைவிழா சிறக்கப் பொற்குவை தந்தோர்
கலைமலர் மணக்கக் கட்டுரை தந்தோர்
மலர் செழிக்க மதியுரை வழங்கியோர்
எல்லாவற்றிற்கும் மேலாய் —

மலருக்கு உயிராம் "பொருளை" விளம்பரமாய் வழங்கியோர்
மலரைச் சிறப்புடனே வடித்திட்ட அச்சகத்தோர்

யாவர்க்கும் —
எம்மை மறவா உம்மை என்றும் மறவோம்

யாமென —
நல்லாசி கூறுகின்றோம்.

விடைதாருங்கள்

வணக்கம் !

— மலர்க்குழு —

## மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதமுடைய
## கிளிநொச்சி
## கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்

தரத்தில் சிறந்த தென்னங்கள்ளைப் பருகில்
கிளிநொச்சி கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்
சங்கத்தால் நடாத்தப்படும்
தவறணைகளுக்கு ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்

★ தரமான கள்
★ கணிசமான விலை
★ குறைவற்ற அளவு

தவறணை தோறும் வேண்டிய வேண்டிய காரமான வாய்க்குகந்த
சிற்றுண்டிகள்
எப்போதும் கிடைக்கும்

எதிர்பாருங்கள் !
அதிவிரைவில் நவீன வசதிகள் அடங்கிய புதிய தவறணையை

செல்லத் தவறாதீர்கள் !  பருகத் தவறாதீர்கள் !

திறந்துவைப்போர் :

கிளிநொச்சி
கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்
பதிவு எண்: ப. 50, கிளிநொச்சி

Telephone
தொலைபேசி } 248

T'gram — 'COPSOC'
தந்தி — 'கோப்சொக்'

விலையில் குறைந்த

தரத்தில் சிறந்த

பெற்றோலியம் கூட்டுத்தாபன

களை, கிருமி நாசினிகளை

எமது கிளைகளில் பெறுங்கள்

# கரைச்சி தெற்கு ப. நோ. கூ. ச.

கிளிநொச்சி

**Ceylon Petroleum Corporation**

**Agro Chemicals & Weedicides**

# KARACHCHI SOUTH M. P. C. S. LTD.

**KILINOCHCHI**

விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம் 680-79